விலை : 20.00

Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2044 மார்கழி 15 திங்கட்கிழமை (30.12.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 011

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## இலங்கை மீதான அடுத்த கட்டத்தை நிஷா தேசாயின் பயணமே தீர்மானிக்கும்

### அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவிப்பு



(கொழும்பு)

தெற்கு மற்றும் மத்திய ஆசிய பிராந்தியத்துக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வாலின் இலங்கை விஜயத்தின் பின்னரே, இலங்கை மீதான அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் அமெரிக்க இராஜாங்கத் திணைக களம் முடிவு செய்யும் என எதிர்பார்க கப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபை மனித வுரிமைகள் ஆணைக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர பல் அரசாங்கம் மேற்கொண்ட முன்னேற்றகரமான நடவடிக்கைகளை மதிப்பீடு செய்வதற்காக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய பிராந்தியத்துக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால் அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

ஜெனிவாவில் அடுத்த வருடம் மார்ச் மாதம் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வு இடம்பெறவுள்ள நிலையில், இலங்கைக்கு அடுத்த மாதம் இரண்டாவது வாரத்தில் விஜயம் செய்யவுள்ளதாக அச்செய்திகள் குறிப்பிட்டிருந்தன.

இதன்போது இலங்கையின் மனிதவுரிமை மற்றும் அரசியல் நிலைமை 20ம் பக்கம் பார்க்க

## வலி.வடக்கு மீள்குடியேற்றம் ஜனாதிபதியுடன் பேசத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பாக விரைவில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன கலந்துரையாடுவதற்குத் தீர்மானித்துள்ளோம் என வலி.வடக்கு மீள்குடியேற்றக் குழுவின் தலைவர் ச.சஜீவன் தெரிவித்தார்.

இச் சந்திப்பில் அரசியல் கட்சிகளைச் சாராத சமூகப்பெரியார்கள் கலந்துகொள்ளவுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

வலி.வடக்கு மக்கள் கடந்த 1990 ஆம் ஆண்டிலிருந்து 23 வருடங்களாக இடம்பெயர்ந்து 34 நலன்புரி முகாம்களிலும் நண்பர்கள், உறவினர்களின் வீடுகளிலும் பல்வேறு கஷ்டங் 19ம் பக்கம் பார்க்க

# ஜெனிவாவில் அறிக்கை சமர்ப்பிக்க தயாராகி வருகிறார் நவி பிள்ளை

### நிகழ்ச்சி நிரலிலும் உள்ளடக்கம்

(வாஷிங்டன்)

**ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கையின் மனிதவுரிமை நிலைமைகள் தொடர்பிலான தனது அறிக்கையை எதிர்வரும் மார்ச் 26ஆம் திகதி ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்கவுள்ளார். அதற்கான அறிக்கை தயாராகி வருவதாக தெரிவிக்கப்பட்டது.**



ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச மாதம் 3ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 25வது கூட்டத்தொடர் இடம்பெறவுள்ளது.

இந்நிலையில் ஐ.நா மனித வுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் இலங்கை மனித வுரிமை நிலைமைகள் தொடர்பிலான அறிக்கை எதிர்வரும் மார்ச் மாதம் 26ஆம் திகதி சமர்ப்பிக்கப்படும் என ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின்25ஆவது அமர்வு தொடர்பிலான நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதையடுத்து இலங்கை மனிதவுரிமை விவகாரம் தொடர்பில் விவாதம் இடம் பெறும எனவும், இதன் போது இலங்கை அரசாங்கம் தனது தரப்புக் கருத்தை முன்வைக்கும் என்றும் எதிர்பார்க் கப்படுகிறது.

அதேவேளை, இக்கூட்டத் தொடரின் இறுதி நாளான மார்ச் மாதம் 28ஆம் திகதி இலங்கை மீதான தீர்மானம் குறித்த வாக்கெடுப்பு நடத்தப்படும்.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை கடந்த ஒகஸ்ட் மாதம் இலங் கைக்கு விஜயம் செய்து 19ம் பக்கம் பார்க்க

## இலங்கைத் தமிழர் இந்தியாவில் கைது

(சென்னை)

இந்தியாவில் சட்டவிரோதமாக தங்கியிருந்த மற்றும் அமெரிக்க டொலர்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் இலங்கைத் தமிழர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த இலங்கையர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன. ஒரு மதுக்கடைக்கு அருகில் வைத்து அபூர்வநாதன் என்ற இலங்கை தமிழரே கைது செய்யப்பட்டுள்ளார்.

உரிய பயண ஆவணங்கள் எதுவும் இன்றி சுமார் 800 அமெரிக்க டொலர்களை குறித்த நபர் வைத்திருந்ததாக தமிழக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-4)

## தனி ஈழத்தை பா.ஜ.க. வலியுறுத்தல்

(புதுடில்லி)

பா.ஜ.கவின் எல்லாச் செயற்பாடுகளையும் நியாயப்படுத்த முடியாது என்று தெரிவித்த காந்திய மக்கள் இயக்கத்தின் தலைவர் தமிழருவி மணியன் பா.ஜ.க தனி ஈழத்தையே தர்வாக வலியுறுத்துவதாக குறிப்பிட்டார்.

காங்கிரஸ் கட்சியில் உள்ளவர்கள் எவரும் தனி ஈழத்தை ஆதரிக்கவில்லை எனவும் அவர்கள் ஈழ இனப்படுகொலையில் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் முதுகின் பின்னாலிருந்து சௌகரியங்களை வழங்கியவர்கள் எனக் குற்றம் 19ம் பக்கம் பார்க்க

## மனித உரிமைச் சட்டத்தில் திருத்தம் செய்ய கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உறுதியான நடவடிக்கைகளை எடுப்பதற்காக கூடுதல் அதிகாரங்களை பெறுவதற்கான சட்டத்திருத்தம் ஒன்றைக் கோரியுள்ளது. அதற்கான பரிந்துரைகள் ஜனாதிபதி உள்ளிட்ட தொடர்புடைய அமைச்சு மட்டங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

1996-ம் ஆண்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச சட்டம்தான் இன்னும் நடைமுறையில் இருக்கிறது. உலகில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. உதாரணமாக கனடா மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அரச துறை மட்டுமன்றி தனியார் துறையைச் சார்ந்தவர்களின் மனித உரிமை மீறல்கள் பற்றி விசாரித்து தீர்த்துவைக்கமுடியும். இலங்கையில் அப்படியான நிலைமை இன்னும் இல்லை என்று மனித உரிமைகள் ஆணையாளர் கலாநிதி பிரதிபா மஹநாமஹேவா தெரிவித்தார்.

இப்போதுள்ள சட்டத்தின்படி, நாங்கள் முன்வைக்கின்ற பரிந்துரை ஒன்று நடைமுறைப்படுத்தப் படாவிட்டால் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க மிகவும் நீண்ட நடைமுறைகளை பின்பற்ற வேண்டியிருக்கிறது. அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்காமல் போகின்றன என்றும் கூறினார் ஆணையாளர்.

புதிய சட்டத்திருத்தத்தின்படி, மனித உரி 19ம் பக்கம் பார்க்க

## அமைதியான மனிதர்கள் மனிதவுரிமை மீறமாட்டார்கள்

### வன்னிக் கட்டளைத் தளபதி தெரிவிப்பு

(வன்னி)

இலங்கை அமைதியான கலாசாரத்தை கொண்ட மனிதர்கள் வாழும் நாடு என்பதால் இராணுவத்தினர் மனித உரிமைகளை மீற மாட்டார்கள் என வன்னிப் பிராந்திய இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா தெரிவித்தார்.

அம்பேபுஸ்ஸ இராணுவத்தினர் சிங்க படைப் பிரிவின் தலைமையகத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையானது புத்த சமயத்தை அடிப்படையாக கொண்டது. நாங்கள் பழிவாங்க மாட்டோம். காணிகளை கொள்ளையிடுவதில்லை. நாடுகளை கொள்ளையடிப்பதில்லை.

அமைதியான கலாசாரத்தை கொண்ட மனிதர்கள். இதனால் இராணுவத்தினர் மனித உரிமைகளை மீற மாட்டார்கள்.

உலகில் அதிகமாக கூறும் வார்த்தை என்னவென்று கேட்டால நாங்களும் அம்மா என்போம். இரண்டாவது வார்த்தை என்னவென்று கேட்டால் இராணுவம் என்போம். காரணம் அவர்களே எங்களை பாதுகாக்கின்றனர்.

இலங்கை தீவு மிகவும் அழகானது. இலங்கை என்ற நாடு மிக முக்கியமானது. வெளிநாட்டு சக்திகளுக்கு இந்த நாட்டைபெற முடிந்தால் பெற்றுக்கொள்வார்கள். இதன காரணமாகவே சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்துள்ளன. படையினர் இல்லா 19ம் பக்கம் பார்க்க

## மக்களுக்கு விஷமற்ற உணவு

(கொழும்பு)

விஷமற்ற தேசிய உணவு வேளையை இலங்கை மக்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டிய தருணம் வந்துள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அதற்கு நாட்டில் அனைத்து விவசாயிகளின் அர்ப்பணிப்பு அவசியம் என ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பு சிறி சம்போதி விகாரை ஆரம்பித்துள்ள விஷமற்ற உணவு மத்திய நிலையத்தை நேற்று திறந்து வைத்து 19ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பால் மாவிற்குப் பதிலாக யாழ்ப்பாணத்தில் ரின் பால்



(கொழும்பு)

பால்மா வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் யாழில் ரின்பாலுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. பால்மா வகைகளுக்கு விலை அதிகரிக்கப்படலாம் என்ற செய்தியை அடுத்து அனைத்து வர்த்தக நிலையங்களிலும் பால்மா வகைகளுக்கு குறிப்பாக அங்கர், லக்ஸ்பிறே, நெஸ்பிறே போன்றவற்றிற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பால்மா வகைகளைத் தேடி கடைக்கு கடை ஏறி இறங்கும் மக்கள் தற்பொழுது ரின்பாலை வாங்குவதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

இதனால் வர்த்தக நிலையங்களில் ரின்பாலுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டுள்ளது. முன்னர் ரின்பால் கேக் மற்றும் சிற்றுண்டி வகைகள் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்டு வந்தநிலையில் இப்போது தேநீருக்காக மக்கள் இதனை வாங்க ஆரம்பித்துவிட்டார்கள்.

இதேவேளை ஜனவரி இரண்டாம் திகதி முதல் பால்மாவின் விலை அதிகரிக்கப்படவுள்ளது. உலக சந்தையில் ஒரு மெட்றிக்தொன் பால்மாவின் விலை 5 ஆயிரத்து 400 டொலர்களால் அதிகரித்ததை அடுத்து, உள்நாட்டிலும் 400 கிராம் பால்மாவின் விலையை 115 ரூபாயாலும் ஒரு கிலோ கிராம் பால்மாவின் விலை 290 ரூபாயாலும் அதிகரிக்குமாறு பால்மா நிறுவனங்கள் நுகர்வோர் அதிகார சபையிடம் கோரிக்கை விடுத்திருந்தன.

இந்தக் கோரிக்கைக்கமையவே பால்மாவின் விலை ஜனவரியிலிருந்து அதிகரிக்கப்படவுள்ளது, எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால், ஜனவரி மாதம் வரை சந்தையில் பால்மாக்களுக்கு கடும் தட்டுப்பாடு நிலவலாம் என்று கூறப்படுகின்றது. (எ-4)



கச்சதீவு அருகே மீன்பிடியில் 6 படகுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 22 இந்திய மீனவர்கள் காங்கேசன்துறை கடற்படையினரால் பிடிக்கப்பட்டு யாழ். நீரியல் வளத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்கள் அனைவருக்கும் ஊர்காவற்றுறை நீதிமன்றம் எதிர்வரும் 10 ஆம் திகதிவரை விளக்கமறியல் விதித்துள்ளது. (4)

# கடத்தல் நாடகம் இளைஞன் கைது!

## பொலிஸ் தெரிவிப்பு!

(கொழும்பு)

கடத்தப்பட்டதாக பொலிஸாரிடம் பொய் கூறி நாடகமாடிய இளைஞர் ஒருவர் முல்லைத்தீவு பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞர் கடந்த 26ம் திகதி கடத்தப்பட்டதாக அவரது தந்தை பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்தார்.

இந்த முறைப்பாடு குறித்து விசாரணை செய்த பொலிஸார் குறித்த இளைஞரை முல்லைத்தீவு பகுதியில் உள்ள அவரது நண்பர் வீட்டில் இருந்து கண்டுபிடித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், அவர் பஸ்ஸில் முல்லைத்தீவு வந்ததாக தெரிவித்துள்ளார். அவுஸ்திரேலியாவில் அரசியல் தஞ்சம் பெறவென இலங்கையில் உயிர் அச்சுறுத்தல் இருப்பதாகக் காண்பிக்கவே இவ்வாறு கடத்தப்பட்டதாக நாடகமாடியதாக தெரியவந்துள்ளது.


இந்நிலையில் இது குறித்து தொடர்ச்சியாக விசாரணை செய்யப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார். (எ-4)

# நாகர்கோவில் பகுதியில் சுனாமி எச்சரிக்கை கோபுரம்

## விரைவில் அமைக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். நாகர்கோவில் பகுதியில் சுனாமி முன்னெச்சரிக்கை கோபுரம் ஒன்றை அமைத்து தருமாறு நாகர்கோவில் கிழக்கு, மேற்கு மீன்பிடி சங்கங்களின் சமாசங்கள் யாழ்.மாவட்ட செயலக அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளர் சங்கரப்பிள்ளை ரவியிடம் கோரிக்கை விடுத்தனர்.




அதற்கு பிரதிப் பணிப்பாளர் அடுத்த வருடத்திற்குள் இப்பிரதேசத்திற்கு புதிய முன்னெச்சரிக்கை கோபுரம் ஒன்றை அமைத்து தருவதாக உறுதியளித்தார்.

மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள நாகர் கோயில் பகுதியில் சுனாமி ஒத்திகையும் விழிப்பூட்டல் நிகழ்வும் கடந்த வெள்ளிக்கிழமை நாகர்கோவில் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதன்போதே மேற்படி கோரிக்கை விடப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் கடந்த 2004-ம் ஆண்டு இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தின் போது வடமராட்சி கிழக்கு பகுதியில் பல உயிர்கள் காவு கொள்ளப்பட்டதாகவும் இதனை இனிவரும் காலங்களில் தடுப்பதற்கு நாகர்கோவில் பகுதியிலும் சுனாமி முன்னெச்சரிக்கை கோபுரம் அமைக்கப்படவேண்டுமென்ற கோரிக்கை அந்நிகழ்வில் கலந்துகொண்ட அனைவரினாலும் ஏகமனதாகத் விடுக்கப்பட்டது.

இதன்போது பதிலளித்த அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் யாழ்.மாவட்டத்திலுள்ள கரையோரப் பிரதேசங்களில் இதுவரை 5 சுனாமி முன்னெச்சரிக்கை கோபுரங்களினை அனர்த்த முகாமைத்துவ அமைச்சு நிறுவியுள்ளது. அடுத்த வருடம் நாகர்கோவில் பகுதியில் புதிய முன்னெச்சரிக்கை கோபுரம் ஒன்றை பெற்றுத்தருவதற்கு தாம் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். (எ-6)

# பஸ் பணிப்புறக்கணிப்பு நேற்று இடைநிறுத்தப்பட்டது

(மல்லாவி)

வடக்கு மாகாணத்தில் உள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினராலும். இச் சங்கங்களில் கூட்டு இணையமான வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் ஒன்றியத்தினாலும் வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்திற்கு எதிராக எடுக்கப்பட்டு வந்த பேருந்துச் சேவை பணிப்புறக்கணிப்பு வடக்கு மாகாண சபையின் மீன்பிடி, போக்குவரத்து, கிராம அபிவிருத்தி வர்த்தகவாணிப அமைச்சர் பா. டெனிஸ்வரன் முயற்சியினால் தற்காலிக இணக்கப்பாட்டுக்குகொண்டுவரப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 10.00 மணிக்கு மன்னார் மாவட்ட நகரசபை ஒன்றுகூடல் மண்டபத்தில் மேற்படி ஐந்து மாவட்டத்தின் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் நிர்வாகத்துடன் வடமாகாண சபையின் மீன்பிடி, போக்குவரத்து, கிராம அபிவிருத்தி வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் பா. டெனிஸ்வரன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன், வடக்கு மாகாண சபையின் முல்லை மாவட்ட உறுப்பினர் து. ரவீகரன் ஆகியோர் பல மணிநேரம் நடத்திய பேச்சுவார்த்தையின் பின்னரே இவ் தற்காலிக இணக்கப்பாடு எட்டப்பட்டது.

வவுனியா மாவட்டத் தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினால் வவுனியாவில் இருந்து கிளிநொச்சி பரந்தன் ஊடாக விசுவமடு, புதுக்குடியிருப்புவரை நடத்தப்படும் போக்குவரத்து சேவையை வரும் ஜனவரி மாதம் 31ஆம் திகதிவரை நடத்த அனுமதிக்கும்படியும் எதிர்வரும் மாசி மாதம் முதலாம் திகதிக்குப் பின் இப்பாதையூடாக நடைபெறும் பேருந்து சேவையை வவுனியா - புளியங்குளம், நெடுங்கேணி ஊடாக முல்லைத்தீவுக்கும் மற்றும் வவுனியா மாங்குளம் ஒட்டுசுட்டான் ஊடாக முல்லைத்தீவுக்கும் மாற்றம் செய்து தருவதாக அமைச்சர் வாக்குறுதி அளித்தார்.

இதனையடுத்து பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்ட கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், யாழ். மாவட்ட உரிமையாளர்கள் ஏற்றுக் கொண்டதுடன். இதை வவுனியா மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தினரும் நடைமுறைப் படுத்துவதாக ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இதனையடுத்து கடந்த வெள்ளிக் கிழமை தொடக்கம் நடைபெற்று வந்த தனியார் பேருந்துச் சேவைப் பணிப் புறக்கணிப்பு நிறைவுக்கு வந்துள்ளது. (எ-15)

# 2014 மது அற்ற ஆண்டு

2014ம் ஆண்டை மது அற்ற ஆண்டாக பெயரிட சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பில் அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை தயாரிக்குமாறு சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறிசேன அறிவுரை வழங்கியுள்ளதாக அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் அதிகாரிகளுடன் அண்மையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

இந்த வருடத்தில் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட 54 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கைதுசெய்யப்பட்டுள்ளதோடு, பாடசாலைகளுக்கு அருகிலும் இவை விற்கப்படுவதாக சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதன்படி போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பில் மக்களுக்கு தெளிவூட்டும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த வேலைத்திட்டத்திற்கு அனைத்து அமைச்சுக்களின் உதவியையும் பெற்றுக் கொள்ளுமாறு சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறிசேன அறிவுரை வழங்கியுள்ளார். (எ-4)


16-வது நாள்



ஆத்மசாந்தி பிரார்த்தனை

15.12.2013 அன்று இறைவனடி சேர்ந்த

கார்த்திகேசு கதிர்காமநாதன் ஐயா

அவர்களின் ஆத்மசாந்தி பிரார்த்தனை இன்று திங்கட்கிழமை (30.12.2013) காலை 7 மணி தொடக்கம் நடைபெறும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய யாழ். வண. வடகிழக்கு கலட்டி சிறிவீரகத்தி விநாயகரை பிரார்த்திப்போம்.

இவ்வண்ணம்
பேரப்பிள்ளைகள்,
சங்கீதா, நிருஜன், கஜரூபன்,
செந்தூரன், பிரணவன், சூடனன்.

பறாளாய் வீதி,
சுழிபுரம்.

(C-6010)


# உள்ளூராட்சி வார இறுதி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு பிரதேச சபையினரின் உள்ளூராட்சி வார நிறைவு நாள் நிகழ்வுகள் இன்று காலை 9.30-க்கு சபையின் கலாசார மண்டபத்தில் தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராக வட மாகாண உள்ளூராட்சி நிவாரணம் மற்றும் சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன், கௌரவ விருந்தினர்களாக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கொ.ஜக்சீல், ஆசியான் நிறுவன சிரேஷ்ட தொழில்நுட்ப ஆலோசகர் சுபாகரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-9)


கண்ணீர் அஞ்சலி



மண்டைதீவு தில்லேஸ்வரம் சிவன்
ஆலய பரிபாலன சபையின் பொருளாளர்

திரு. குருசாமி கனகசபாபதி
(ஓய்வு பெற்ற உதவி விவசாயப் பணிப்பாளர்)

அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி!

பரிபாலனசபை
தில்லேஸ்வரம் சிவன் ஆலயம், மண்டைதீவு.

(இ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## இல்லாமல் இருப்பவர்கள்!

ஒரு பெரியவர் இருந்தார். அனைத்து அனுபவங்களையும் கடந்தவர். ஒரு நாள் ஒரு தேவதை திடீரென அவர் முன்வந்து நின்றது. அப்படியே அந்தப் பெரியவரின் காலிலே வீழ்ந்தது. அதன்பின் தனது கதையை கூறியது. "உங்களுக்கு வரம் கொடுப்பதற்காகவே வந்துள்ளேன். என்ன வேண்டுமோ கேளுங்கள்" என்றது. இதற்கு பெரியவர் சொன்னார்; "இதோ பாரம்மா! எனக்குத் தேவைகள் இருந்த போது நீ இருக்கிற இடம் எனக்குத் தெரியவில்லை! இப்போது எனக்கு எந்தத் தேவையுமில்லை! இந்தச் சமயம் பார்த்து என்னைத் தரிசிக்க வந்துள்ளாய்!

மிகவும் தாமதமாகவே என்னைத் தேடி வந்துள்ளாய். இப்போது கேட்பதற்கு எனக்கு எதுவுமே கிடையாது" "கேட்கிறவனே இல்லையா? என்ன சொல்கிறீர்கள்?" என்றது தேவதை "ஆமாம்! நீ யாரிடம் கேட்கிறாய் வரம் வேண்டுமென்று" "உங்களிடம் தான்" என்று தேவதை கூறியது.

"நான் இப்பொழுது இல்லவே இல்லையே! நீ பரமாத்மாவையே கேள்... இப்போது அவர் தான் இருக்கிறார்!" அப்படி என்றார்.

தேவதை மறுபடியும் அவர் காலைப் பிடித்துக் கொண்டது.

"நீங்கள் ஏதாவது கேட்டே ஆக வேண்டும்" எனக் கூறியது.

இதற்கு அவர் சொன்னார்" இதோ பாரம்மா! யார் யாசிக்கிறது? யாரிடம் யாசிக்கிறது? நான் யாசித்தால் பரமாத்மாவிடம் எனக்கு பூரண நம்பிக்கை இல்லை என்று ஆகிவிடும். எது உசிதமோ அது நடக்கும்: எது உசிதமில்லையோ அது நடக்காது! உண்மையில் எது நடக்கிறதோ அதுவே உசிதம்! அதனாலே நீ போய்விடு! நீ தவறான மனிதனிடம் வந்திருக்கிறாய்!" என்றார்.

தேவதை விடுகிற மாதிரி இல்லை.

"நாங்கள் உங்களை மாதிரி மனிதனைத்தான் தேடிக் கொண்டிருக்கிறோம். யாசிக்கிறவர்களிடம் நாங்கள் போவது இல்லை. யாசிக்காதவர்களிடம்தான் நாங்கள் போவோம்.

"யார் 'இருக்கிறார்களோ' அவர்களிடம் நாங்கள் போவது இல்லை...! ஏனென்றால் அவங்களுக்கு உள்ளே நாங்கள் வருவதற்கு அருகதையான இடமே கிடையாது. யார் 'இல்லாமல்' இருக்கிறார்களோ அவங்களுக்குள்ளேதான் வருவது வழக்கம். இதோ வந்துவிட்டோம். அதனாலே அவசியம் கேளுங்கள் என்றது. பெரியவர் பார்த்தார்.

"நான்செல்வதைக்கேட்காமல்கொடுத்துத்தான்தீரவேண்டுமென்றால் கொடுத்துவிட்டுப் போ! நான் கேட்க வேண்டிய பிரச்சினை இல்லை!" என்றார்.

தேவதை சொன்னது. "ஐயா! உங்களுக்கு நான் ஒரு வரம் கொடுக்கிறேன். நீங்கள் இறந்தவர்களைத் தொட்டால் அவர்களுக்கு உயிர் வந்துவிடும். நோயாளியைத் தொட்டால் அவர் குணமடைந்து விடுவார். கருகிப் போன மலரைப் பார்த்தால் அது மறுபடியும் மலரும்!" என்று கூறியது.

பெரியவர் சொன்னார்: சரி அப்படியென்றால் எனக்கு இன்னொரு வரமும் கொடுத்துவிடு" என்றார்.

தேவதைக்கு ஆச்சரியம். "என்ன இது? முதலில் எதுவுமே யாசிக் கமாட்டேன் என்று கூறினீர்கள்!" என்று கூறியது.

அதற்கு பெரியவர் "முதலிலே யாசிக்க வேண்டிய அவசியம் இல்லாமல் இருந்தது. ஆனால் ஒரு விடயம் கிடைத்த இடத்தில்... விடயங்களின் சங்கிலித் தொடர் ஆரம்பமாகி விடுகிறது. அதனாலே கேட்கிறேன். இன்னும் ஒரு வரமும் கொடு. அது என்ன வரம் என்றால்... இந்த சக்தியைப் பற்றிய அறிவு எனக்கு ஏற்படாத வரத்தைக் கொடு.

"இறந்தவன் பிழைத்தால் பிழைக்கட்டும். ஆனால் அவன் பிழைத்தான் என்ற விவரம் எனக்கு தெரியக் கூடாது. நோயாளி குணமடையட்டும். ஆனால் அது எனக்கு தெரியாமல் இருக்கட்டும்.

"ஏனென்றால் நான்தான் பிழைக்க வைத்தேன் என்ற நினைப்பு எனக்கு வந்துவிடும். மறுபடியும் அந்த 'நான்' எனக்குள்ளே வந்தால் அது வேதனை... அதை மறுபடியும் அனுபவிக்கத் தயார் இல்லை. அதனாலே ஒன்று செய்...

"இந்த வரத்தை எனக்குக் கொடுக்காதே! என்னுடைய நிழலுக்கு அந்த வரத்தைக் கொடுத்துவிடு. என் நிழல் பட்டால் நோயாளி பிழைக்கட்டும். பூ மலரட்டும். நான் இப்படியே இருப்பேன்!" என்று கூறினார்.

"நீ நிழல் மட்டுமாக ஆகிவிடு!"

இது கீதையில் கண்ணன் சொல்லுகிற வார்த்தை. அகங்காரம் இல்லாத வாழ்க்கை ஆனந்தமான வாழ்க்கை! அலவலகத்தில் ஒருவன் அமர்ந்திருந்தான்.

திடீரென்று ஒரு தேவதை அவன் முன்னாடி தோன்றி நின்றது. "என்ன வரம் வேண்டும் உனக்கு... கேள்... தருகிறேன்!" என்றது. இவன் யோசித்தான்... நான் நினைக்கிறது நடக்கக வேண்டும்! என்று.

"சரி... நீ நினைக்கிறது நடக்கும்" என்று வரம் கொடுத்து விட்டு தேவதை போய்விட்டது. இவன் உடனே நினைக்க ஆரம்பித்து விட்டான்.

"ஒரு அழகான தீவு வேண்டும்!" என்று நினைத்தான். கிடைத்தது.

"அதிலே ஒரு அழகான வீடு வேண்டும்!" என்று நினைத்தான். அதுவும் கிடைத்தது.

"அங்கே எல்லா வசதிகளும் வேண்டும்" என்று நினைத்தான். கிடைக்கப்பெற்றது.

"ஆகா! இனிமேல் நான் வேலையே செய்ய வேண்டாம் போலுள்ளது?" என்று நினைத்தான்.

பழையபடி அலுவலகத்திற்கு வந்து சேர்ந்தான்!

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# விசாரணையின்போது உளவியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டேன்

## தமிழ் பிரபாகரன் தெரிவிப்பு

(கொழும்பு)

விசா விதிகளை மீறியதாக இலங்கையில் கைது செய்யப்பட்டு இந்தியாவுக்கு திருப்பியனுப்பப்பட்ட தமிழ்நாட்டு ஊடகவியலாளர் மகா. தமிழ் பிரபாகரன், காவலில் வைக்கப் பட்டிருந்தபோது உளவியல் ரீதியில் துன்புறுத்தப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

அவர் நேற்றுமுன்தினம் விடுதலையாகி நாடு திரும்பியவுடன் பி.பி.சி.க்கு வழங்கிய பேட்டியின் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அளித்த பேட் டியில், கூறியதாவது"நான் எந்த வொரு ஊடக நிறுவனப் பிரதியா கவோ, பணியாளராகவோ இலங்கைக்கு செல்லவில்லை. விகடனில் புலித் தடம் தேடி... தொடர் கட்டுரை மட்டும் எழுதியிருந்தேன். அவ்வளவுதான் என்று குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், என்னைக் கடற்கரையோரமாக வைத்தே இராணுவத்தினர் கைது செய்தனர். நான் பல காட்சிகளை எனது புகைப்படக் கருவியில் பதிவு செய்திருந்தேன்.

ஆனால் இராணுவத்தினர் என்னைக குற்றச்சாட்டுவதற்காக இராணுவ உயர் பாதுகாப்பு பிரதேசங்களையும் முகாம்களையும் மட்டும் படமெடு த்ததாக தெரிவித்திருந்தனர் என் றும் அவர் கூறியுள்ளார்.

என்னைக் கைது செய்த மூன்று நாட்களும் ஆயுதபாணிகள் சகிதம் மிரட்டும் பாணியிலேயே நடத்தினார்கள். நீ சொல்வதை நாம் எழுத முடியாது. நாம் கேட்பதற்கு சாதகமான பதிலாகவே நீ சொல்ல வேண்டும் என என்னை வற்புறுத்தினார்கள் என்று மகா. தமிழ் பிரபாகரன் குறிப்பிட்டுள்ளார்.

விசாரணையின்போது என்னை ஒரு விடுதலைப் புலிகளின் ஆதரவாளராக, ஒரு தமிழராக மட்டும் அவர்கள் நோக்கினார்களே தவிர சாதாரண மகனாக அவர்கள் விசாரணை செய்யவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சுற்றுலா விசாவில் வந்ததாக இராணுவத்தினர் சுமத்திய குற்றச் சாட்டிற்கு பதிலளித்த தமிழ் பிரபாகரன், அதெல்லாம் ஒரு குற்றச் சாட்டும் கிடையாது.

ஊடகவியலாளர விசா பெற்று வந்து யாழ்ப்பாணம் சென்ற சனல் 4 நிறுவன த்தினர் உட்பட சர்வதேச செய்தியாளர் களை கடந்த மாதங்களில் வவுனியாவில வைத்து தடுக்கவில்லையா?

இவைகளெல்லாம் வேடிக்கையான குற்றச் சாட்டுக்கள். சரி. அப்படி யிருந்தாலும் ஏன் என்னை முன்னால தடுக்க வில்லை. போகவிட்டு பினனால் வந்து ஏன் தடுத்தார்கள்? நான் இலங்கை அரசின் அரா ஜகப் போக்குகளை உலக மறியச் செய்வேன்" என்று மகா. தமிழ் பிர பாகரன் மேலும் கூறியுள்ளார்.

இதேவேளை, இந்திய ஊடகவியலாளர் மகா. தமிழ் பிரபாகரனின் குற்றச்சாட்டுக்களை முழுமையாக மறுத்த பொலிஸ் ஊடக பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரு மான அஜித் ரோஹன, "இக்குற்றச் சாட்டுக்களை அவர் இலங்கையில் இருந்து புறப்படுவதற்கு முன்னர் முன்வைத்திருந்தால் வைத்தியரொருவருக்கு காணபித்து மருத்துவ பரிசோதனை செய்து அறிக்கை பெறப்பட்டதன் பின்னரே அவரை நாடு கடத்தியிருப்போம என்றார்.

இலங்கை பாதுகாப்பு தரப்பு மீது வேண்டுமென்றே குற்றசாட்டுக்களை முன்வைக்கும் நோக்கி லேயே அவர் மேற்கண்டவாறான கருத்துக்களை முன்வைத்துள்ளார் என்றும் பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார். (அ-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 90 | 100 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 50 | 80 | 120 | 80 |
| பச்சைமிளகாய் | 80 | 60 | 80 | 100 |
| தக்காளி | 60 | 50 | 60 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 | 40 |
| கோவா | 20 | 20 | 40 | 40 |
| கரட் | 40 | 30 | 60 | 80 |
| பூசணி | 25 | 25 | 25 | 40 |
| புடோல் | 30 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 40 | 30 | 30 | 50 |
| சின்ன வெங்காயம் | 100-180 | 160 | 160 | 160 |
| பெரிய வெங்காயம் | 50-90 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 120 | 140 | 160 | 120 |
| வெண்டிக்காய் | 50 | 30 | 30 | 80 |
| கருணைக் கிழங்கு | 20 | 25 | 40 | 50 |
| பயற்றங்காய் | 100 | 120 | 100 | 80 |
| லீக்ஸ் | 60 | 80 | 80 | 100 |
| பீற்றூட் | 50 | 60 | 60 | 80 |
| கறிமிளகாய் | 100 | 120 | 130 | 160 |
| முருங்கைக்காய் | - | 400 | - | - |
| போஞ்சி | 70 | 60 | 80 | 80 |
| கத்தரி தம்புள்ள | 80 | — | 40 | 80 |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 50 | 40 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 60 | 40 | 30-40 |
| இராசவள்ளி | 90 | 120 | 100 | 120 |

# இராசி பலன்

30.12.2013
(மார்கழி 15, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.21 மணிக்கு
திரயோதசி முன்னிரவு 9.53 மணிவரை
அனுசம் பிற்பகல் 2.35 மணிவரை
இராகுகாலம் 7.59-9.29 மணிவரை
சுபநேரம்- 12.29-1.59 மணிவரை
பிரதோச விரதம்

**மேடம்** ஒரு வேலையை முடிக்க ஒன்றுக்கு இரண்டு முறை அலைய நேரிடலாம், உடல் நலனில் கவனம் தேவை, விரயங்கள் கூடும், மற்றவர்களுக்காக பொறுப்புச் சொல்வதைத் தவிர்ப்பது நல்லது.

**இடபம்** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், நம்பிவந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**மிதுனம்** உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், வியாபார விருத்தியுண்டு, பழைய கடனில் ஒரு பகுதியைக் கொடுத்து தீர்க்கும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு, அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**கடகம்** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், பிரபலமாணவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறலாம், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

**சிங்கம்** தாய்வழி உறவினர்களால் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், கல்வியில் ஆர்வம் காட்ட முற்படுவீர்கள்.

**கன்னி** மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறும் நாள், உயர்வான சிந்தனைகள் மனதில் குடிகொள்ளும் நாள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உடன்பிறப்புக்கள் உதவி செய்ய முன்வரலாம்.

**துலாம்** புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் பெறுவீர்கள், பொருளாதார நிலை உயரும், பெரிய மனிதர்கள் வீடு தேடி வரலாம், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள்.

**விருச்சிகம்** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர் பகை அகலும், தொலைபேசி வழியில் அனுகூலமான செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**தனுசு** உறவினர் நலன் கருதி சில செலவுகள் ஏற்படலாம், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம்.

**மகரம்** வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு.


**கும்பம்** அன்பு நண்பர்கள் ஆதரவு தர முன்வருவர், புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும், வீட்டை அழகாக வைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**மீனம்** திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், மனக் குழப்பம் தீர்ந்து மகிழ்ச்சி கூடும் நாள், பயணங்களால் பலனுண்டு, தேக நலனில் முன்னேற்றம் ஏற்படலாம், புதிய முயற்சிகள் கைகூடும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு பணியாளர்களை இலக்குவைக்கும் பங்குச்சந்தை



வெளிநாட்டு வேலைவாய்ப்பினை பெற்றுச் சென்றுள்ள பயிற்றப்பட்ட தொழிலாளர்களுக்கு கொழும்பு பங்குச்சந்தை தொடர்பான புரிந்துணர்வை ஏற்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய கொழும்பு பங்குச் சந்தை மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம என்பன இணைந்து இந்தத் திட்டத்தினை முன்னெடுக்கவுள்ளன.

இதன் முதல் கட்டமாக, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக பொகவந்தலாவை மற்றும் அத்துருகிரிய ஆகிய பிரதேசங்களில் கருத்தரங்குகளை மேற்கொண்டுள்ளது.

·பங்குச் சந்தை தொடர்பான ஆரம்ப அறிவு குறித்து எந்தவிதமான தகவல்களும் தெரியாத தொழிலாளரகள் இந்த கருத்தரங்கின்போது பெரும் ஆர்வம் காட்டியதாக கொழும்பு பங்குச் சந்தை விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வெளிநாடு சென்று அந்நிய செலாவணியைப் பெற்றுவரும் இவர்கள் தமது பொருளாதார நிலைப்பாட்டை மேம்படுத்துவதுடன், நாட்டின் பொருளாதாரத்திற்கும் உந்து சக்தியாகத் திகழ்வதாக கருத்தரங்கினை முன்னெடுத்துச் சென்ற அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வெளிநாடுகளில் கடின உழைப்பின் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் நிதியினை உரிய முறையில் கொழும்பு பங்குச் சந்தையின் முதலீடு செய்வதன் மூலம் ஏனைய முதலீடுகளை விட அதிகளவில் பலாபலன்களை எதிர்பார்க்க முடியும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

# ஜனசக்தியின் பிரதீபா 2013 நிகழ்வு



ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் வருடாந்த திறன் காண் போட்டி "பிரதீபா 2013" (ஜனசக்தி விளையாட்டு மற்றும் நலன்புரி கழகத்தின் மூலம் ஒழுங்கமைக்கப்பட்டது) அண்மையில் மஹிந்த ராஜபக்ஷ தாமரை தடாகத்தில் நடைபெற்றது. ஜனசக்தி நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் பிரகாஷ் ஷாஃப்ட்டர் இந் நிகழ்வின் பிரதம அதிதியாகவும், கௌரவ விருந்தினராக சந்திரா ஷாஃப்ட்டரரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந் நிகழ்வை ஜனசக்தியின் நாட்காட்டியில் வர்ணமயமான நிகழ்வாக பதியும் நோக்கில் ஜனசக்தியின் பல்வேறு கிளைகளைச் சேர்ந்த 106 திறமையாளர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தியிருந்தனர். இந் நிகழ்வில ஜனசக்தி ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் பங்கேற்றிருந்தனர்.




# அமெரிக்காவில் 13 லட்சம் பேருக்கு உதவித்தொகை நிறுத்தம்

அமெரிக்காவில் பொருளாதார சீர்திருத்தம் என்ற பெயரில், பணக்காரர்களை விடுத்து சாமானிய மக்களை வாட்டும் போக்கு அதிகரித்து வருகிறது. இதன்ஒரு கட்டமாக அங்கு வழங்கப்பட்டுவந்த உதவித்தொகை நிறுத்தப்பட்டுள்ளது.

வேலையில்லாதவர்கள் 13 லட்சம் பேருக்கு கொடுத்து வந்த மாதந்திர உதவித்தொகையை அமெரிக்க அரசு நிறுத்தியுள்ளது. அந்நாட்டு பொருளாதாரத்தை சீரமைக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வேலையில்லாதவர்கள் மாதந்தோறும் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெற்று வந்தது நிறுத்தப்பட்டுள்ளதால், அவர்களின் குடும்பத்தினர் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. கலிபோர்னியா மாகாணத்தில் மட்டும் 2 இலட்சத்து 14 ஆயிரம் பேருக்கு உதவித் தொகை நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த உதவித்தொகை நிறுத்தம் மூலம் இம்மாகாணத்தில் மட்டும் ஆண்டுக்கு 60 ஆயிரம் கோடி ரூபாய் அரசுக்கு மிச்சமாகயுள்ளது.

இந்த அறிவிப்பால் அமெரிக்காவில் வேலையில்லாதவர்கள் எண்ணிக்கை குறையும் என்றாலும் மக்களின் வாங்கும் திறனும் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வேலையில்லாதவர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம் ஜார்ஜ் புஷ் அதிபராக இருந்த காலத்தில் அறிமுகம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5,857.36 | 5,876.66 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 3228.17 | 3240.63⇧ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 1,962.115 |

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** புளூ டைமண்ட்ஸ் (x) (1.30), செரண்டிப் இன்.(138.20), ரேடியன் ஜெம்ஸ்(48.00), சிலோன் பிறிண்டர்ஸ்(1675.00), மேர்ஷண்ட் சிப்பிங்(140.00).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** லங்கா சென்சரி(w) (0.20), எஸ்.எம்.பி லீசிங் (x)(0.30), ரெஸ் அக்ரோ(x)(1.00), சிஜரி(97.30), ரெஸ் அக்ரோ(1.30).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# திவிநெகும திணைக்களம் ஜனவரி முதல் இயங்கும்

MINISTRY OF ECONOMIC DEVELOPMENT

திவிநெகும திணைக்களம் ஜனவரி 03ஆம் திகதி முதல் செயற்படவுள்ளதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

50 இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் இந்தத் திட்டத்தின் ஊடாக பயனடையவுள்ளதுடன், 18 இலட்சம் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

திவிநெகும திட்டத்தின் கீழ் 12 ஆயிரத்து 533 மனை கைத்தொழில்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் இதனூடாக ஒரு இலட்சம் கடற்றொழிலாளர்கள் நன்மையடைவார்கள் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தெரிவிக்கின்றது.

இலங்கை சமுர்த்தி அதிகார சபை, மலைநாட்டு அபிவிருத்தி அதிகார சபை, தெற்கு அபிவிருத்தி அதிகார சபை உள்ளிட்ட 05 நிறுவனங்களின் கூட்டாக திவிநெகும திணைக்களம ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


# ஷன்சைன், வட்டவளை அறிக்கைகளுக்கு விருது



சன்ஷைன் ஹோல்டிங்ஸ் மற்றும் அதன் பெருந்தோட்ட நிறுவனமான வட்டவளை ப்ளான்டேஷனுக்கு இலங்கை பட்டயக் கணக்காளர் கழகம் ஏற்பாடு செய்திருந்த வருடாந்த நிதி அறிக்கை விருது வழங்கும் நிகழ்வில் இரண்டு விருதுகள் கிடைத்துள்ளன.

5 நிறுவனங்களையோ அல்லது அதற்கு குறைவாகவோ கொண்ட நிறுவனப் பிரிவின் கீழ் சன்ஷைன் ஹோல்டிங்ஸ் நிறுவனம் வெண்கல விருதை வென்றெடுத்ததுடன் வட்டவளை ப்ளான்டேஷனுக்கு சொந்தமான பெருந்தோட்ட துறையில் தங்க விருதை தொடர்ச்சியாக ஆறாவது தடவையாக வென்றெடுத்ததும் குறிப்பிடத்தக்கது.

# சீனாவின் பொருளாதாரம் அமெரிக்காவை முந்தும்



2030-ம் ஆண்டாகும்போது, ஐரோப்பாவின் மிகச் சிறந்த பொருளாதார பின்னணியை கொண்ட நாடாக இங்கிலாந்து பரிணமிக்கும் என்று புதிய ஆய்வு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

த கார்டியன் இணையத்தளம் நடத்திய ஆய்வில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின்படி, 2028-ம் ஆண்டாகும் போது சீனாவின் பொருளாதார வளர்ச்சி அமெரிக்காவின் வளர்ச்சியையும் கடந்துச் செல்லும் என்று கணிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் இந்தியா, பிரேசில் மற்றும் ரஷ்யா போன்ற நாடுகள் நிலையான பொருளாதாரத்தை கொண்ட நாடுகளாக மாறும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரூ.20 மில். முதலீட்டில் அட்லஸ் ஆய்வுகூடம்




காகிதாதிகள் தயாரிப்புகள் உற்பத்தியில் நீண்ட காலமாக ஈடுபடும் முன்னணி வர்த்தக நாமமான அட்லஸ், பாடசாலை மற்றும் அலுவலக காகிதாதிகள் தயாரிப்புகளின் தரத்தை மேலும் மேம்படுத்தும் வகையில் உயர் தரம் வாய்ந்த நவீன வசதிகளை கொண்ட ஆய்வுகூடமொன்றை நிறுவ முன்வந்துள்ளது.

இதற்காக மொரட்டுவ பல்கலைக்கழகத்துடன் 20 மில்லியன் ரூபாவுக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் அண்மையில் கைச்சாத்திட்டுள்ளது.

இந்த ஆய்வு கூடத்தை கம்பனி வளாகத்தில் நிறுவாமல், பல்கலைக்கழக வளாகத்தில் நிறுவுவதற்கான தீர்மானத்தை மேற்கொண்டமையானது, உள்நாட்டு பொறியியல் திறமைகளை மேம்படுத்தும் நோக்கத்தை முன்னிறுத்தி உள்நாட்டு கல்விச் சூழலில் காணப்படும் வாய்ப்புக்களையும் கிடைக்கப்பெற்ற வளங்களையும் ஊக்குவித்து மேம்படுத்துவதன் மூலம் பிராந்திய ரீதியில் அவர்களை தேர்ச்சி நிலையில் வைத்திருக்க முடிவதாக அட்லஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி நிர்மல் மதநாயக்க தெரிவித்தார்.

இந்த ஆய்வுகூடமானது, வலு மற்றும் நிதிச் சிக்கனமான பொருட்களை உற்பத்தி செய்வது தொடர்பில் அதிகளவு கவனம் செலுத்தவுள்ளதுடன், தற்போது சந்தையில் காணப்படும் பொருட்களுக்கு பெறுமதி சேர்த்து மேமபடுத்தவும் திட்டமிட்டுள்ளது.

# கலர்ஸ் போ ஒரெஞ்ச் கையடக்க தொலைபேசிகள் அறிமுகம்



இலங்கை மின் உதிரிப்பாகம் மற்றும் கையடக்க தொலைபேசி ஆகிய துறைகளில் புதிய புரட்சியை ஏற்படுத்தியுள்ள நாட்டின் முன்னிலை மின் உதிரிப்பாக நிறுவனமான ஒரெஞ்ச் முதற்தடவையாக அதிநவீன தொழில்நுட்பங்களை உள்ளடக்கிய கையடக்க தொலைபேசிகளை சந்தைக்கு அறிமுகப்படுத்தியுள்ளது.

ஹொங்கொங்கில் அமைந்துள்ள டெலி டோக் நிறுவனத்துடன் இணைந்து ஒரெஞ்ச் நிறுவனம் இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளதுடன் அதற்கான வைபவம் கொழும்பு கலதாரி ஹோட்டலில் அண்மையில் நடைபெற்றது.

மின்சாரமுள்ள வீடுகளிலுள்ள மின் உபகரணங்களை கையடக்க தொலைபேசி ஊடாக கட்டுப்படுத்தக்கூடிய புதிய அப் (App) ஒன்றையும் தமது நிறுவனம் தயாரித்துள்ளதாக ஒரெஞ்ச் நிறுவனத்தின் கையடக்க தொலைபேசி பிரிவின் பொது முகாமையாளர் கிஹான் சிகேரா தெரிவித்துள்ளார்.

டெலி டோக் நிறுவனத்துடன் இணைந்து எதிர்காலத்தில் பல்வேறு நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ளவுள்ளோம். டெலி டோக் நிறுவனம் கையடக்க தொலைபேசி உற்பத்தியில் முன்னிலை வகிக்கின்றதை போன்று ஒரெல் கோப்பரேஷன் சுவிச் உற்பத்தியில் முன்னிலையிலுள்ளது.

# 2013ஐ வெற்றியுடன் நிறைவு செய்யும் கொமர்ஷல் கிரெடிட்

COMMERCIAL CREDIT

கொமர்ஷல் கிரெடிட் அன்ட் ஃபினான்ஸ் பி.எல்.சி. நிறுவனமானது, உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் பல்வேறு முக்கிய விருதுகளை பெற்று 2013ஆம் ஆண்டை நிறைவு செய்கின்றது.

லண்டனில் இடம்பெற்ற "பூகோள வங்கியியல் மற்றும் நிதி மீள்நோக்கு விருதுகள் 2013" (Global Banking and Financial Review Awards 2013) நிகழ்வில் கொமர்ஷல கிரெடிட் நிறுவனம் "இலங்கையில் மிக வேகமாக வளர்ச்சியடையும் நிதிக் கம்பனி 2013" மற்றும் "இலங்கையில் மிகவும் புத்தாக்கமான நிதிக் கம்பனி 2013" ஆகிய இரு பெருமைக்குரிய விருதுகளை வெற்றி கொண்டுள்ளது.

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 129.27 | 132.23 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 211.75 | 217.94 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 176.19 | 182.13 |
| சுவிஸ் பிராங் | 143.53 | 148.90 |
| கனேடிய டொலர் | 120.80 | 124.98 |
| அவுஸ்திரேலிய டொலர் | 113.94 | 118.35 |
| சிங்கப்பூர் டொலர் | 101.44 | 104.81 |
| ஜப்பான் யென் | 1.22 | 1.26 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.10 | |
| ஐக். அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.58 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதமரை பதவியிலிருந்து விலக்க வேண்டிய எண்ணம் எமக்கில்லை

(கொழும்பு)

ஹெரோயின் போதைப் பொருள் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட சம்பவம் தொடர்பில் பிரதமர், அவரது இணைப்புச் செயலாளர் மற்றும் ஆளும் கட்சியின் நகர சபை உறுப்பினர் மீது குற்றம் சுமத்தப்பட்டபோது பிரதமர் உடனடியாக பதவி விலக வேண்டும் எனக் கூறிய ஜாதிக ஹெல உறுமய தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டுள்ளது.

கொழும்பில் வெளியாகும் வார இதழ் ஒன்று பேட்டியளித்துள்ள அந்த கட்சியின் தலைவர் ஓமல்பே சோபித தேரர், பிரதமர் தொடர்பில் அவ்வாறான சந்தேகம் எழுந்துள்ளதால் பிரதமர் தவறு செய்திருந்தால் அவர் பதவியில் இருந்து விலக வேண்டும் என தெரிவித்துள்ளார்.

பிரதமரின் பணிக்குழுவை சேர்ந்தவர்களுக்கு மிகவும் அழிவை ஏற்படுத்தக் கூடிய ஹெரோயின் போதைப் பொருள் வர்த்தகத்துடன் சம்பந்தம் உள்ளது என்ற சந்தேகம் எழுந்த பின்னரே பிரதமர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

பிரதமரை பதவியில் இருந்து விலக்க வேண்டும் என்ற எந்தத் தேவையும் எமக்கில்லை. குற்றம் குறித்து விசாரணை நடத்தி விசாரணைகளில் பிரதமர் குற்றவாளி என்றால் மட்டுமே அவரை பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்றே நாங்கள் கூறுகிறோம் என ஓமல்பே சோபித தேரர் கூறியுள்ளார்.

ஜாதிக ஹெல உறுமய தேர்தல்கள் நெருங்கும் போது ஒரு சில கருத்துக்களை வெளியிட்டாலும் எப்போதும் அதனை செயற்படுத்தியதில்லை என்பது செயற்படுத்தவும் முடியவில்லை என தெரிவிக்கும் அரசியல் அவதானிகள், அந்த கட்சியின் இவ்வாறான பிதற்றல்களுக்கு பல உதாரணங்கள் இருப்பதாக கூறியுள்ளனர்.

13ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டத்தில் உள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை நீக்காது தேர்தல் நடத்தினால் கடும் நடவடிக்கையில் இறக்கப் போவதாக அந்த கட்சி குறிப்பிட்டிருந்தது.

கசினோ சூதாட்ட சட்டத்திற்கு வாக்களித்து விட்டு சமூகத்திற்கு முன்னால் அதற்கு எதிராக பொய்யான எதிர்ப்புகளில் ஈடுபட்டமை, தொலைக்காட்சி விவாதங்களில் வரவு செலவுத் திட்டத்திற்கு எதிரான கருத்துக்களை முன்வைத்து விட்டு அதற்கு ஆதரவாக வாக்களித்தமை போன்ற பல உதாரணங்கள் இருப்பதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-2)

# வட, கிழக்கில் கணக்கெடுப்பு நடத்த கூட்டமைப்பு தீர்மானம்

மோதலின்போது உயிர் மற்றும் பொருள் இழப்புகளை கணக்கிடுவதற்கான அரசாங்கத்தின் கணக்கெடுப்புக்கு மாற்றாக வடக்கிலும் கிழக்கிலும் தனியான கணக்கெடுப்பை நடத்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பு திட்டமிடுகின்றது.

தனது கட்சியினர் அரசாங்கத்தின் கணக்கெடுப்பை நம்பகமானதென அங்கீகரிக்கவில்லையென இரா.சம்பந்தன் கூறினார்.

அந்த வகையில் அரசாங்கம் எவரையும் தவறாக வழிநடத்துவதை தடுப்பதற்காக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சில நடவடிக்கைகளை மேற்கொள்ளுமென அவர் கூறினார்.

அரசாங்கம், ஜெனீவாவில் சில பிரச்சினைகளை தூண்டுவதற்காக இதை செய்யக் கூடும். ஆனால் எமக்கு இது எமது மக்களின் அடிப்படை உரிமைகள் தொடர்பானதாகும் என அவர் கூறினார்.

தவறான தகவல்களை பரப்புவதை தடுப்பதனால் உண்மையை நிலைநிறுத்த தனது கட்சி விரும்புகின்றதென அவர் கூறினார்.

ஆயினும் இதை எவ்வாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நிறைவேற்றும் என்ற விபரங்களை வெளியிடுவதற்கு அவர் மறுத்து விட்டார். (அ-2)

# தொடரூந்து நிலையத்திற்கு புதிய பெயர் சூட்ட யோசனை

ஆனையிறவு தொடரூந்து நிலையத்துக்கு புதிய பெயர் சூட்ட வேண்டும் என கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன யோசனை ஒன்றை முன்வைத்துள்ளார்.

இதன்படி ஆனையிறவு தொடரூந்து நிலையம் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் இருந்து திரட்டும் 15.5 மில்லியன் ரூபாவைக் கொண்டு புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

பந்துல குணவர்த்தன இந்த புனரமைப்புத் திட்டத்துக்கான யோசனைக்கு ஒப்புதல் பெற்றுள்ளார்.

இதன் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கு இலங்கை இராணுவப் பொறியியல் படைப்பிரிவின் உதவியைப் பெறுவது குறித்து பேச்சுக்கள் நடத்தப்படுகின்றன.

கிளிநொச்சிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான தொடரூந்து சேவை ஆரம்பிக்கப்படும் போது ஆனையிறவு தொடரூந்து நிலையத்தின் பெயரை சேனஹசக்க தொட்டுபொல என்று மறுபெயர்சூட்ட வேண்டும் என்றும் கல்வி அமைச்சர் கோரியுள்ளார்.(அ-2)

# க.பொ.த.(சா/த) விடைத்தாள் மதிப்பீட்டு பணி ஆரம்பம்

கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படும் 76 பாடசாலைகள் எதிர்வரும் ஜனவரி மாதம் எட்டாம் திகதி வரை மூடப்பட்டிருக்கும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாளை தொடக்கம் ஜனவரி ஏழாம் திகதி வரை சாதாரண தரப் பரீட்சையின் முதற்கட்ட விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம். என். ஜே.புஸ்பகுமார கூறியுள்ளார்.

விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளுக்காக 103 நிலை யங்கள் தயார்படுத்தப்பட்டுள்ளன.

சாதாரண தரப் பரீட்சையின் இரண்டாம் கட்ட விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் ஜனவரி மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் 24 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படவுள்ளன.

இதற்காக 19 பாடசாலைகளில் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இம்முறை கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் 40 ஆயிரம் ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மொத்தமாக 110 இலட்சம் விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யப்படவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# அரசாங்கத்தில் இணையுமாறு அழைப்பு விடுக்கப்படுகிறது

## ஹர்ச டி சில்வா எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளுமாறு தனக்கு தொடர்ந்தும் அழைப்பு விடுக்கப்பட்டு வருவதாகவும் அரசாங்கத்தில் இணைந்தால் கட்டாயமாக தனக்கு பதவி ஒன்று வழங்கப்படும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ச டி சில்வா தெரி வித்துள்ளார்.

வார இதழ் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை இன்று அறிந் தவன் அல்ல. அவரை எனக்கு பல காலமாக தெரியும்.

என்னைவிட எனது தந்தை ஜனாதிபதியுடன் பழக்க மானவர். நெருக்கமான நண்பர்கள். ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகி வருமாறு அரசாங்கம் என்னை பல காலமாக கோரி வருகிறது. அங்கு சென்றால் எனக்கு பதவி வழங்கப்படும். ஆனால் நான் கொள்கைவாதி என்பதால் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ள போவதில்லை என்றார். (அ-2)


இவர்களுக்கு மணமகள் தேவை

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1980 இந்து (V)<br>நட்சத்திரம்: சுவாதி 3<br>கி.பா: 12 ½ உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L /சுவிஸ் PR<br>தொ.இ: B/595 | பிறப்பு: 1985 இந்து (V)<br>நட்சத்திரம்: கேட்டை 1<br>கி.பா: 17உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSc, MSc / Executive Post<br>தொ.இ: G/1266 |
| பிறப்பு: 1980 இந்து (V)<br>நட்சத்திரம்: சதயம் 1<br>கி.பா: 17 ½ செவ் 12இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L, Emergency Medical Technician, Dip. in English / Fever Surveillance Assistant<br>தொ.இ: B/597 | பிறப்பு: 1981 இந்து (Vis)<br>நட்சத்திரம்: சுவாதி 3<br>கி.பா: 06 ½உயரம்: 5'<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/1267 |
| பிறப்பு: 1985 இந்து (V)<br>நட்சத்திரம்: பூசம் 2 கி.பா: 7 ½<br>தகைமை/தொழில்: O/L / அலுவலக உதவியாளர்<br>தொ.இ: B/790 | பிறப்பு: 1986 இந்து (Sivi)<br>நட்சத்திரம்: உத்ராடம் 3<br>கி.பா: 20 ¼ செவ் 4 ல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L, HNDA<br>தொ.இ: G/1272 |
| பிறப்பு: 1979 இந்து (V)<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி 2<br>கி.பா: 72 சூரி செவ் 8இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L / இலிகிதர் (தனியார்)<br>தொ.இ: B/793 | பிறப்பு: 1986 இந்து (V)<br>நட்சத்திரம்: திருவோணம் 4<br>கி.பா: 54<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: மருந்தாளர் (UK – PR)<br>தொ.இ: G/1273 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பன் வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் இல்லை

வடமராட்சிகிழக்கு மருதங்கேணி அம்பன்பிரதேசவைத்தியசாலைகளில்நிரந்தரவைத்தியர்கள் இன்மையாலும் வைத்தியர் பற்றாக்குறையினாலும் அப்பிரதேசத்தில்வாழ்கின்ற மக்கள்சொல்லொணாத்துயர்களைஅனுபவித்து வருகின்றனர்.

யுத்தத்தாலும் சுனாமி அனர்த்தத்தாலும் மிக மோசமாக பாதிக்கப்பட்ட மேற்படி பிர தேசம் தொடர்ந்தும் பின்தங்கிய நிலையிலே உள்ளது. மக்களின் அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக மருத்துவ சேவைகூட உரிய முறையில் பெறாமல் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளார்.

மேற்படி பிரதேசத்திலுள்ள இரண்டு பிரதேச வைத்தியசாலைகளில் நிரந்தர வைத்தியர் இல்லாமல் ஓய்வு நிலை வைத்தியர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வருகின்றனர்.


ஆயினும், நாளொன்றுக்கு 12 மணித்தியாலயங்கள் மாத்திரமே வைத்திய சேவை இடம் பெறுகின்றது.

இதனால், அப்பிரதேசத்தில் திடீரென ஏற்படும் விபத்துக்கள், அதி தீவிர சிகிச்சை நோயாளர்களை நீண்ட தூரத்திலுள்ள பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டிய நிலையுள்ளது.

அத்துடன்புதிதாகவெளியேறும்வைத்தியர்கள் இப் பிரதேசத்தில் பணிபுரிய செல்ல விரும்புவதில்லையெனஅப்பகுதிமக்கள்சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் பல தடவைகள் சம்பந்தப்பட்ட வைத்திய அதிகாரிகளிடமும் அமைச்சர்களிடமும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லையென மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (அ-9-24)

நன்றி:- ஐலன்ட்




# எமது இயற்கை வளங்கள் சூறையாடப்படுகின்றன

## வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன்

ஈழத்தைப் போரினால் நலிந்த மண் என்று எவரும்ஈவிரக்கம்கொள்ளவில்லை. தமிழர்களின் அரசியல் காயத்தை அபிவிருத்திக் களிம்பு தடவி ஆற்றலாம் என்றநப்பாசையிலும் தடுப்பார்.

இல்லாத நேரம் பார்த்து இருப்பைப் பங்கு போடும் அவசரத்திலும் இயற்கை வளங்கள் வேக வேகமாகச் சூறையாடப்படுகின்றன என்று வட மாகாண விவசாய, கமநல சேவைகள், கால் நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றுச் சூழல் அமைச்சர்பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மணற்காட்டில் கடந்த வியாழக் கிழமை காலை நடைபெற்ற கடற்கோளில் மரணித்தவர்களின் நினைவஞ்சலியில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலக முதல் உயிரினத்தின் தாய்மடி கடல் உயிரிகளின் பரிமாணத்தில் முதற் கருவைச் சுமந்தவள் என்ற வகையில் மனுக்குலத்தின் அன்னையும் அவள்தான். எமது நாடி, நாளங்களில் சுற்றோடிக் கொண்டிருக்கும் இரத்தத்தில் இன்றளவும் கடல்நீரின் உப்புக் கரித்துக் கொண்டுதான் இருக்கிறது. ஆனால், எமக்கு வாழ்வளித்த அவள்தான் சாவும் அளித்தாள்.

2004 ஆம் ஆண்டு மார்கழி 26 ஆம் திகதி நத்தார் குதூகலமும் கடுங்குளிரும் கலையாத காலைப்பொழுதில்கடல்மாதா பெரும்கோபம் கொண்டெழுந்தாள். அலைக்கரங்களில் கொடுவாள் ஏந்தி உக்கிர தாண்டவமாடினாள்.

கடற்தாய் காளிவேடம் பூண்டு கரையெங்கும் உயிரெடுத்துப் புதைத்துத் திரும்பியதில் இலங்கையின் கரையோரம் எங்கும் பிணக்காடாகி இருந்தது. ஏறத்தாழ முப்பத்தையாயிரம் பேர் கொல்லப்பட்டிருந்தனர்.

யாழ்.மாவட்டத்தில் எங்களது உறவுகளில் ஆயிரத்து இருநூறுக்கும் அதிகமானோரைக் கடல் காவு கொண்டது. இந்த மணற்காட்டிலும் எழுபத்திரெண்டு பேர் கொல்லப்பட்டனர். தமிழர்களின் வரலாற்றில் சொல்லில் வடிக்க முடியாத பெரும் தேசியத் துயரம் இது.

ஒன்பது ஆண்டுகள் கழிந்துவிட்ட போதும் இன்னும் ஆற்ற முடியாத அளவுக்கு வலியைத்தந்த கடற்கோள் கூடவே எமக்கு வலிமையான பாடம் ஒன்றையும் போதித்து விட்டுச் சென்றிருக்கிறது.

ஆனால், கடல் மாதா உலகு அதிர எச்சரித்த பின்னும் நாம் இன்னும் கேட்பதாக இல்லை. பட்டும் திருந்தாதவர்களாகத் தொடர்ந்தும் இயற்கையைச் சூறையாடி வருகிறோம்.

காங்கேசன்துறைக்கடல்அருகேசுண்ணாம்புக் கற்பாறை அதலபாதாளத்துக்குத் தோண்டப்படுகிறது. இங்கே நாகைக்கடல் அருகே மணல் கொள்ளை போகிறது., வடமராட்சி கிழக்கில் காணப்படும் இந்த மண் மேடுகள் கடல் அலைகளின் தாக்கத்தில் இருந்து எம்மைப் பாதுகாப்பதற்காக இயற்கை எங்களுக்கு அழித்த பாதுகாப்புச் சுவர்கள்.

ஆனால் அளவுகணக்கு இல்லாமல் கடல் மட்டத்துக்குக் கீழாகவும் கூட மணல் தோண்டி எடுக்கப்படுகிறது. முள்ளிவாய்க்காலில் நாம் சிந்திய இரத்தத்தின் நெடி இன்னும் அடங்கவில்லை.

அதற்குள்ளாக முல்லைத்தீவுக் கடல் அருகே இறால் பண்ணைகளுக்கு இடம் தோண்டப்படுகிறது. நந்திக் கடலில் சீனாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கு என்று கொடுவாமீன் வளர்ப்புத் திட்டம் பரிசீலனையில் உள்ளது.

எங்களது எல்லாக் கடல்களிலும் கடல் வளங்களை இழுவைப் படகுகள் ரணகளமாக்கிக் கொண்டிருக்கின்றன.

கடற்கோள் நினைவு நாளான இன்று கடற்தாயின் போதனையை ஏற்று இயற்கை வளங்களை பாதுகாத்து அளவோடு நுகர்ந்து வளமோடு வாழ்வோம் என்று உறுதியேற்படும். இதுவே மாண்ட உறவுகளுக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலியாக அமையும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

யாழ்.செய்திகள்

# வரவு செலவுத் திட்ட தோற்கடிப்புக்கு ஒற்றுமையின்மையே காரணம்

## வடக்கு மாகாண சபை அவைத்தலைவர்

(சாவகச்சேரி)




அண்மைக்காலமாக பிரதேச சபைகளில் வரவு செலவுத்திட்டம் தோற்கடிக்கப்பட்டமைக்குக் காரணம், எம்மத்தியிலுள்ள ஒற்றுமையின்மையே என வட மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் உள்ளூராட்சி வார நிறைவு நாள் நிகழ்வுகள் நேற்று முன்தினம் நடைபெற்ற போது, அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், எமது சமூகம் நம்மை நாமே நிர்வகிக்க தெரியாதவர்களுமல்ல. பதவிக்காக போராடுபவர்களுமல்ல. மாகாண சபையின் நேரடிக் கட்டுப்பாட்டுக்குள்ளானவற்றில் உள்ளூராட்சி சபையும் அடங்குகின்றன. மக்களுக்கு ஏதோவொரு விதத்தில் சேவையாற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடு மாகாண சபையை ஏற்றுள்ளோம்.

ஆயினும் நாங்கள் அனைவரும் சட்டத்தின் சிருஷ்டிகளாகவிருப்பதால் இதன் பிரகாரம் செயற்பட வேண்டியவர்கள். வடமாகாண சபையின் வரவு செலவுத் திட்டம் எதிர்க்கட்சியினரின் ஆதரவுடனேயே நிறைவேறியுள்ளது. இந்நிலையில், பிரதேச சபைகளின் வரவு செலவுத் திட்டங்கள் தொடர்ச்சியாக தோற்கடிக்கப்பட்டு வருகின்றன.

தென்மராட்சியிலுள்ள இரு சபைகளும் நல்ல முறையில் ஒற்றுமையாக செயலாற்றி வரவு செலவுத் திட்டத்தினை நிறைவேற்றியுள்ளமையிட்டு நான் பெருமைப்படுகின்றேன். வடமாகாண சபையில் நிதி பற்றாக்குறை காணப்படுகின்றது. அதற்கான மூலங்களை விரைவில் ஏற்படுத்தவுள்ளோம். அத்தோடு, உள்ளூராட்சி சபைகள் வருவதனால் அந் நிதிப்பற்றாக்குறை உங்கள் மூலமும் நிறைவேற்றப்பட வாய்ப்புக்கள் உள்ளது என்றார். (அ-9-29)

# சுங்கம்குளம் வீதியை புனரமைக்க கோரிக்கை

(கரணவாய்)

நவிண்டிலில் சுங்கம்குளம் வீதி போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையிலுள்ளதால் அவ் வீதியை புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இவ் வீதி சுமார் 30 வருடங்களாக புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் காணப்படுகின்றது.

இவ் வீதியினூடாக வல்வெட்டித்துறை, உடுத்துறை ,உடுப்பிட்டி ஆகிய பகுதிகளுக்கு மக்கள் போக்குவரத்தைச் செய்து வருகின்றனர். குண்டும் குழியுமாக குறித்த வீதி காணப்படுவதனால் மழை காலங்களில் மழை நீர்தேங்கி நிற்கின்றது.

கரவெட்டிப் பிரதேச சபைக்குச் சொந்தமான இவ் வீதியைத் திருத்துமாறு பிரதேச உறுப்பினரிடம் மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். இந்நிலையில் குறித்த பிரதேச சபை உறுப்பினர் கரவெட்டி பிரதேச சபைத் தவிசாளரிடம் இவ் வீதிப் புனரமைப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தியுள்ளதாக தெரிவித்துள்ளார். எனவே, பிரதேச சபையினர் குறித்த வீதியை புனரமைத்துத் தரவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-60)




சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் உள்ளூராட்சி வார நிறைவு நாள் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இந் நிகழ்வில், மன்றத்தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை மங்கல விளக்கேற்றுவதையும் மாணவிகளின் கலை நிகழ்வையும் விருந்தினராக கலந்து கொண்ட ஆசிரியர் மார்க்கண்டு மாணவியொருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சாவகச்சேரி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபத்தான நகர்வை மேற்கொள்ள வேண்டிய நிலையில் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம்

## ஆங்கில ஏடு தகவல்

மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் 2013 ஆம் ஆண்டை கடந்து 2014 ஆம் ஆண்டில் கால் வைக்கும் போது ஆபத்தான நகர்வை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக ஆங்கில செய்தித்தாள் ஒன்று தெரிவித்ததாக கூறி இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

ஏற்கனவே நாட்டில் பொருட்களின் விலைகள் உயர்ந்துள்ளன. அதிக கடன் நாட்டை ஆட்கொண்டுள்ளது.

அபிவிருத்தி என்ற பெயரில் அதிகளவான ஊழல்கள் இடம்பெற்றுள்ளன. பெருமளவான பணம் விரயமாக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு பாரிய அபிவிருத்தி திட்டத்துக்கும் கேள்விப்பத்திரங்கள் கோரப்படவில்லை என்பதை பிரதான எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன.

இதன்மூலம் அபிவிருத்திக்கு செலவிடப்படுவதாக கூறப்படும் பணத்தில் பெருந்தொகை பணம் தரகாக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சிகள் கூறுகின்றன.

பொதுநலவாய நாடுகள் மாநாட்டின் போது அரசாங்கம் தகுதிக்கு அப்பாற்பட்டு செலவுகளை மேற்கொண்டது.

இவையாவும் 2014 ஆம் ஆண்டு தேர்தல் ஆண்டு என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அறிவித்துள்ள நிலையில் அதற்கு முன்னுள்ள சவால்களாக உள்ளன.

மறுபுறத்தில் சர்வதேசத்தில் 2014 ஆம் ஆண்டு மார்ச்சில் ஜெனீவாவில் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அமர்வின் போது இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்படவுள்ள மேற்குலக தீர்மானம் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனினும் உள்நாட்டின் ஆதரவை குறைத்துக்கொள்ளக்கூடாது என்பதற்காக இலங்கை அரசாங்கம் இந்த விடயத்தை பொருட்படுத்தாததை போன்று செயற்படுகிறது.

அதேநேரம் தமது நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாத அரசாங்கம் தென்னாபிரிக்காவின் உண்மையை கண்டறியும் ஆணைக்குழு போன்ற அமைப்பை உருவாக்கப் போவதாக அறிவித்துள்ளது.

இது சர்வதேசத்தை ஜெனீவா மாநாட்டுக்காக ஏமாற்றும் வித்தை என்பதை அரசியல் வல்லுநர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனினும் சர்வதேச விசாரணை மற்றும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் என்பவற்றை தவிர்ப்பதற்காக இலங்கை அரசாங்கம் உண்மையை கண்டறியும் குழுவை அமைக்கும் தேவையையும் நிராகரிக்க முடியாது.

அத்துடன் தேசிய இனப்பிரச்சினை தீர்வுக்காக நாடாளுமன்ற தெரிவுக்குழுவை தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு மீண்டும் நிராகரித்துள்ளது.

இது அரசாங்கத்துக்கு முன்கூட்டியே தெரியும் என்ற போதும் கூட்டமைப்பின் இந்த தீர்மானத்தின் பின்னணியில் அண்டை நாடு ஒன்று இருக்கலாமா? என்ற சந்தேகமும் அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் கட்டளை தளபதி மஹிந்த ஹத்துருசிங்க கொழும்புக்கு மாற்றம் செய்யப்படுவதும் அண்டை நாட்டின் அழுத்தம் என்றே இராஜதந்திர தரப்புக்கள் கருதுகின்றன.

இந்நிலையில் இந்தியாவினால் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாணசபை முறை வடக்கில் உரிய முறையில் செயற்படவேண்டும் என்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்துள்ள யோசனைகளில் ஆளுநர் சந்திரசிறியை மாற்றுவது மாத்திரம் தற்போது எஞ்சியுள்ளது என அச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

## புலமைப்பரிசில் பரீட்சை குறித்து சபையில் விவாதிக்க வேண்டும்

(கொழும்பு)

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை தொடர்பில் நாடாளுமன்ற விவாதம் நடத்தப்பட வேண்டுமென ஜே.வி.பி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையை இரத்து செய்ய கல்வி அமைச்சு தீர்மானம் எடுத்துள்ளது.

நாடாளுமன்றிடமோ அல்லது நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றிடமோ கேட்காது எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்து விரிவான விவாதம் நடத்தப்பட வேண்டும்.

நாட்டின் முக்கியமான கல்வித் தீர்மானங்களை ஒரு கல்வி அமைச்சரோ அவரது உதவியாளர்களோ எடுக்க முடியாது.

கிராம பாடசாலைகளை சேர்ந்த மாணவ, மாணவியர் வசதிகள் கூடிய நகர பாடசாலைகளுக்கு செல்ல புலமைப் பரிசில் பரீட்சை வழியமைத்துக் கொடுப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இலவச கல்வியின் உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)



யாழ். நாக விகாரையின் அபிவிருத்திப் பணிகளுக்காக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி 4.44 இலட்சம் ரூபா பெறுமதியான கட்டட பொருட்களை விகாராதிபதி மேஹகயன்டுறே சிறி விமலதேரரிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

(படம்:- என்.குமார்)

## ஐந்து உறுப்பினர்கள் கட்சியிலிருந்து நீக்கம்

உள்ளூராட்சி மன்றங்களில் அங்கம் வகிக்கும் ஐந்து உறுப்பினர்கள் கட்சியில் இருந்து நீக்கப்படவுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் ஹசன் அலி இதனை தெரிவித்துள்ளார்

வடக்கு உள்ளூராட்சிசபைகளில் இருந்து நான்கு உறுப்பினர்களும் வடமேல் உள்ளூராட்சி சபையில் இருந்து ஒருவரும் நீக்கப்படவுள்ளார்.

கட்சி தலைமையுடன் கலந்தாலோசிக்காமல் முடிவுகளை மேற்கொண்டமையே இதற்கான காரணம் என்று அலி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை எதிர்வரும் மேல் மற்றும் தென் மாகாண சபை தேர்தல்களில் தனித்து போட்டியிடுவது என்று காங்கிரஸ் முடிவு எடுத்துள்ளதாகவும் ஹசன் அலி தெரிவித்துள்ளார். (அ-2)

## இந்திய மீனவர்கள் பிரச்சினை குறித்து ஆராய 20 ஆம் திகதி பேச்சுவார்த்தை

(சென்னை)

இலங்கை- இந்திய மீனவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் இருதரப்பு பேச்சுவார்த்தை அடுத்தாண்டு ஜனவரி மாதம் 20 ஆம திகதி சென்னையில் நடைபெறவுள்ளதாக இந்திய அரசாங்கம் அறிவித்துள்ளது.

இலங்கை சிறையில் உள்ள தமிழக மீன்வர்களையும், அவர்களின் படகுகளையும் மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக அரசியல்வாதிகள் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கிடம் விடுத்த கோரிக்கையை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் படகுகள் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறித்து இலங்கை மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரத்னவுடன் கடந்த வெள்ளிக்கிழமை கலந்துரையாடப்பட்டபோது இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான இருதரப்புப் பேச்சுவார்த்தை இந்தியாவில் நடைபெறும் என அமைச்சர் அறிவித்தார்.

சர்வதேச கடல் எல்லையைத் தாண்டி இலங்கை கடற்பரப்பில் மீன்பிடித்து வரும் இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுவருகின்றனர்.

இப்பிரச்சினை மிகவும் உக்கிரமடைந்துள்ள நிலையில், இருநாட்டு கடற்படையினரும் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடும் மீனவர்களை கைதுசெய்து வருகின்றனர்.

அத்துடன், இருநாட்டுக்கும் இடையிலான கடற்பகுதியில், இருதரப்பு மீனவர்களுக்குமிடையில் முறுகல் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (அ-2)

## சூடானில் உள்ள இலங்கையர்கள் உகண்டாவில் தஞ்சமடைவு

(கொழும்பு)

தென் சூடானில் இடம் பெற்றுவரும் மோதல்களால் உகண்டாவில் தஞ்சமடைந்துள்ள இலங்கையர்கள் நாடு திரும்புவதற்கான விமான பயணச் சீட்டுக்களை பெற்றுக் கொள்வதில் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளனர்.

விமான பயணச் சீட்டுக்களை பெற்றுத் தருவதாக தமது நிறுவனங்கள் ஏற்கனவே உறுதியளித்தபோதிலும் தற்போது அவர்கள் அதனை மறுத்துள்ளதாக உகண்டாவில் தஞ்சமடைந்துள்ள இலங்கையர்கள் கூறியுள்ளனர்.

இந்நிலையில் அரசாங்கம் தலையீடு செய்து தமக்குரிய விமானப் பயணச் சீட்டுக்களைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் எனவும் அவர்கள கோரிக்கை விடுத்துள்ளனர்.

தாம் பணியாற்றிய நிறுவனம் வழங்கிய பணம் இன்னும் இரண்டு நாட்கள் உகண்டாவில் தங்கியிருப்பதற்கு மாத்திரமே போதுமானதாக உள்ளதெனவும் அங்குள்ள இலங்கையர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்

இந்த விடயம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகமவிடம் வினவிய போது, குறித்த இலங்கையர்களை நாட்டுக்கு திருப்பியழைப்பதற்கான ஒழுங்குகளை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

இந் நடவடிக்கைக்கு தூதரகங்கள் ஊடாக வெளிவிவகார அமைச்சு ஒத்துழைப்பை வழங்குவதாக அவர் மேலும் கூறியுள்ளார். (அ-2)

## தமிழ் தேசிய கூட்டமைப்பு ஜெனீவாவுக்கு செல்லும்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் குழுவொன்று ஜெனீவாவிற்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சர்வதேச சுயாதீன விசாரணைகளை வலியுறுத்தி கூட்டமைப்பினர் ஜெனீவாவிற்கு விஜயம் செய்யவுள்ளனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரனை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

அதில் ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகள் நடைபெறவுள்ள நிலையில், நிலைமைகள் குறித்து இராஜதந்திரிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார். சர்வதேச சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்பதே தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நிலைப்பாடு.

இதற்கு முன்னரும் மனித உரிமைப் பேரவை அமர்வுகளின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜெனீவாவிற்கு விஜயம் செய்துள்ளது.

எனினும் இம்முறை கடுமையான அழுத்தங்களை பிரயோகிக்க உத்தேசித்துள்ளது.

இலங்கைக்கு எதிராக மனித உரிமைப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றபடலாம் என அவர் அதில் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சுண்டெலி எழுதிய சிறுகதை!

...அதை திடீரென்று எழுப்பியது நகரத்துச் சுண்டெலி. "எழுந்து வா, எழுந்து வா...இப்போது உணவு மேசைக்கருகில் எந்தப் பூனையும் இல்லை. கீழே போனால் ஏதாவது சாப்பிடக் கிடைக்கும். சீக்கிரம் வா! சோர்வுடன் எழுந்த கிராமத்துச் சுண்டெலி தன் நண்பனைப் பின்தொடர்ந்து சென்றது. இரண்டு சுண்டெலிகளும் தயங்கித் தயங்கி உணவு மேசையை நெருங்கின. மேசை மீது இனிப்புப் பணியாரங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

தாளமுடியாத பசியுடன் அவற்றைக் கடித்தன சுண்டெலிகள். அப்போது...

"லொள் லொள்..." என்ற பயங்கரமான சத்தம் கேட்டது.

"ஐயோ! சீக்கிரம் ஓடு, சீக்கிரம் ஓடு! நாய் நம்மைக் கொல்ல வருகிறது!" என்று அலறியபடி நகரத்துச் சுண்டெலி ஓடியது. அதன் பின்னால் தலைதெறிக்க ஓடியது கிராமத்துச் சுண்டெலி. விழுந்து புரண்டு ஓடி, இரண்டு சுண்டெலிகளும் பரணை அடைந்தன. களைப்பு மிகுதியால் அப்படியே படுத்துவிட்டன.

"இங்கே நாய்கூட இருக்கிறதா? எத்தனை நாய்கள் இருக்கின்றன?" என்று கிராமத்துச் சுண்டெலி பரிதாபமாகக் கேட்டது.

"அதை ஏன் கேட்கிறாய் போ! நாம் தப்பித்ததே பெரிய காரியம். இங்கே இரண்டு நாய்கள் இருக்கின்றன. நம்மைக் கடித்துக் குதறுவதற்காக எப்போதும் இங்கேயே அவை சுற்றிக்கொண்டிருக்கும்!" என்று மூச்சுத் திணறியபடி, நகரத்துச் சுண்டெலி சொன்னது.

இரண்டும் மறுபடியும் படுத்தன. பசி தாங்காமல கிராமத்துச் சுண்டெலி முனங்கியது. வயிறு நிறையாவிட்டாலும் பரவாயில்லை. கொஞ்சம் உணவு கிடைத்தாலும் நன்றாக இருக்குமே என்று ஏங்கியது. நாய்கள் மோப்பம்பிடித்து பரணுக்கு வந்துவிடுமோ என்று நினைத்துப் பதறியது.

நீண்ட நேரத்திற்குப் பிறகு கிராமத்துச் சுண்டெலி உறங்கியது. சற்று நேரத்திற்குள் தட்டி எழுப்பியது நகரத்துச் சுண்டெலி.

"எழுந்திரு, எழுந்திரு...இப்போது பூனைகளும் நாய்களும் வெளியே சென்றுவிட்டன. வா, கீழே போய் ஏதாவது சாப்பிடுவோம்"என்று சொன்ன நகரத்துச் சுண்டெலி முன்னால் சென்றது. கிராமத்துச் சுண்டெலி பயத்துடனும் தயக்கத்துடனும் பின்னால் சென்றது. இரண்டும் உணவு மேசையை நெருங்கின.

"இந்தா, இந்த இட்டிலியை வேகமாகச் சாப்பிடு!" என்று இட்டிலிகள் இருந்த பாத்திரத்தை நகரத்துச் சுண்டெலி சுட்டிக்காட்டியது. ஆவலுடன் இட்டிலியை ஒரு கடி கடித்தது கிராமத்துச் சுண்டெலி. பிறகு ஆவேசத்துடன் மேலும் மேலும கடித்துத்தின்றது. இட்டிலிப் பாத்திரத்திற்குள் அமர்ந்து இரண்டு கைகளாலும் அள்ளி அள்ளித் தின்றது. வயிறு நிறைந்தது.



பிறகு சப்பாத்தியைக் கொஞ்சம் தின்றது. தோசையைக் கடித்தது. இதையும் கொஞ்சம் தின்று வைப்போமே என்று பிஸ்கட்டில் வாய் வைத்தது. அப்போது நகரத்துச்சுண்டெலி உயிரே போவது போல அலறியது: "ஐயோ! ஓடு ஓடு! வீட்டு அம்மாள் கையில் தடியுடன் வருகிறாள்!"

விரைந்து வந்த எஜமானி, ஓடும் சுண்டெலிகளை நோக்கி தடியை வீசி எறிந்தாள். கிராமத்துச் சுண்டெலியின் முதுகில் அடிபட்டுவிட்டது. அதற்கு மிகவும் வலித்தது. நிறையச் சாப்பிட்டுவிட்டதால் வேகமாக ஓட முடியவில்லை. ஆயினும் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளப்பாடுபட்டது. தட்டுத்தடுமாறி ஓடியது. பரணை அடைந்தது. அதற்கு முன்பே பரணுக்கு வந்திருந்தது நகரத்துச் சுண்டெலி.

அடிபட்டு வந்த தன் நண்பனை நகரத்துச் சுண்டெலி சமாதானப்படுத்தியது: "பரவாயில்லை... வருத்தப்படாதே! சற்று நேரம் வலிக்கும், அவ்வளவுதான். நான் எத்தனையோ முறை இதுபோல அடிபட்டிருக்கிறேன்...சரி, அதை விடு. அந்த உணவுகள் எவ்வளவு சுவையாக இருந்தன! வருகிறாயா, நாம் இன்னொரு முறை உணவு மேசைக்குச் செல்வோம்".

கிராமத்துச் சுண்டெலி எதுவும் பேசவில்லை.

நீண்டநேரம் ஏதோ யோசித்தபடி இருந்தது. பிறகு மென்மையாகச் சொன்னது:

"என் அன்பான நண்பனே, இனி நான் அந்த உணவு மேசைக்கு வரமாட்டேன்...இந்த இடத்தைவிட என் கிராமம் எவ்வளவோ மேலானது. என் கிராமத்தில் வசதி குறைவுதான். ஆனால நான் அங்கே நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும், அச்சமில்லாமலும் இருந்தேன். நாளை, காலையில் நான் புறப்படுகிறேன் நண்பனே. என் கிராமத்திற்கே சென்றுவிடுகிறேன்!"

நகரத்துச் சுண்டெலி, நகரத்திலேயே தங்கும்படி கேட்டுக்கொண்டது. மீண்டும் மீண்டும் கட்டாயப்படுத்தியது. ஆனால் கிராமத்துச் சுண்டெலி கேட்கவில்லை. அது அடுத்தநாள் காலையில் தன் கிராமத்திற்கு கிளம்பியது.

தனக்கு ஏற்பட்ட அனுபவத்தை கிராமத்துச் சுண்டெலியால் மறக்க முடியவில்லை. தனக்கு ஒரு பெரிய பாடம் கிடைத்துவிட்டதாக அது உணர்ந்தது. அதை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்பியது. எனவே அது தன் அனுபவத்தை ஒரு கதையாக எழுதியது.

சில மாதங்கள் கடந்தன. ஒருநாள் தபாற்காரப் பெருச்சாளி கிராமத்தில் ஒரு முகவரியைத் தேடி அலைந்தது. "இங்கே எழுத்து வேந்தன் என்னும் பெயரில் ஏதேனும் எலி இருக்கிறதா?" என்று எல்லா எலிகளிடமும் விசாரித்தது. அந்த வழியாக வந்த சிட்டுக்குருவி, "எழுத்து வேந்தன் என்னும் சுண்டெலியை எனக்குத் தெரியும். வாருங்கள் காட்டுகிறேன்" என்று அழைத்துச் சென்றது.

தன் பொந்தின் வாயிலில் வந்து நிற்கும் சிட்டுக்குருவியையும், தபாற்காரப் பெருச்சாளியையும் குழப்பமாகப் பார்த்தது கிராமத்துச் சுண்டெலி.

பெருச்சாளி சொன்னது: "அடே, உன்னைக் கண்டுபிடிப்பதற்குள் இந்தக் கிராமம் முழுவதும் சுற்றிவிட்டேன் அப்பா! நீதான் எழுத்து வேந்தனா? சரி, இந்தா உனக்கொரு பதிவுக் கடிதம் வந்திருக்கிறது. கையெழுத்துப்போட்டு வாங்கிக் கொள்..."

கையெழுத்துப் போட்டுக் கடிதத்தை வாங்கியது கிராமத்துச் சுண்டெலி. தபாறகாரப் பெருச்சாளி மற்ற கடிதங்களை உரியவர்களிடம் சேர்ப்பிப்பதற்காகச் சென்றுவிட்டது.

அந்தக் கடிதத்தைப் பிரித்துப் படித்த கிராமத்துச் சுண்டெலி சந்தோஷக் கூச்சலிட்டது. அப்படியும் இப்படியும் துள்ளி நடனமாடியது. "அப்படி என்னதான் அந்தக் கடிதத்தில் எழுதியிருக்கிறது? எனக்கும்தான் சொல்லேன்!" என்று கேட்டது சிட்டுக்குருவி.

கிராமத்துச் சுண்டெலி சொன்னது: "கிராமத்துச் சுண்டெலியும் நகரத்துச் சுண்டெலியும் என்னும் தலைப்பில் நான் ஒரு கதை எழுதி அனுப்பியிருந்தேன். "எலி தேசம" பத்திரிகை ஆசிரியர் அதைப் பரிசுக்குரியக் கதையாகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்."

சுண்டெலியிடம் கைகுலுக்கி மகிழ்ச்சியைத் தெரிவித்தது சிட்டுக்குருவி. பிறகு இந்த நல்ல செய்தியை கிராமத்தில் உள்ள எல்லா எலிகளிடமும் சொல்வதற்காகப் பறந்து சென்றது.

விரைவிலேயே "எலிதேசம"பத்திரிகையில், கிராமத்துச் சுண்டெலியின் கதை வந்தது. அதை இலட்சக்கணக்கான எலிகள் விரும்பிப்படித்தன. பிறகு கிராமத்துச் சுண்டெலி உலகப் புகழ் பெற்ற எழுத்தாளரானது. **(முற்றும்)**




- 1853- ஐக்கிய அமெரிக்கா தொடருந்து போக்குவரத்துப் பாதை அமைப்பதற்காக மெக்சிக்கோவிடம் இருந்து 76,770 கி.மீ$^2$. பரப்பளவு கொண்ட காட்சென் என்ற இடத்தை 10 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு வாங்கியது.
- 1870-ஸ்பெயின் பிரதமர் ஜுவான் பிறிம் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1880-டிரான்ஸ்வால் குடியரசு ஆகியது.
- 1906-அகில இந்திய முஸ்லிம் லீக் கட்சி டாக்காவில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1922-சோவியத் சோசலிசக் குடியரசுகளின் ஒன்றியம் உருவாக்கப்பட்டது.
- 1924-யாழ்ப்பாணம் வாலிபர் சங்க மாநாட்டில் சாதி ஒழிப்புத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.
- 1941-மகாத்மா காந்தி காங்கிரஸ் தலைமைப் பதவியிலிருந்து விலகினார்.
- 1943-சுபாஷ் சந்திர போஸ் அந்தமான் தீவுகளின் போர்ட் பிளையர் நகரில் இந்திய விடுதலைக் கொடியை ஏற்றினார்.
- 1947-ருமேனியாவின் மன்னர் மைக்கல் சோவியத் ஆதரவு கம்யூனிச அரசால் பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.
- 1949-இந்தியா சீனாவை அங்கீகரித்தது.
- 1953- உலகின் முதலாவது என்ரிஎஸ்சி வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டி 1,175.00 அமெரிக்க டொலர் விலைக்கு விற்பனைக்கு விடப்பட்டது.
- 2006-முன்னாள் ஈராக் அதிபர் சதாம் உசேன் தூக்கிலிடப்பட்டார்.

### பிறப்புக்கள்

- 1865-றூடியார்ட் கிப்லிங், இந்தியாவில் பிறந்த பிரித்தானிய எழுத்தாளர், கவிஞர், நோபல் விருதாளர் (இ.1936)
- 1879-இரமண மகரிஷி, தமிழகத்தைச் சேர்ந்த ஆன்மீகவாதி (இ.1950)

### இறப்புக்கள்

- 1691-ராபர்ட் பொயில், அறிவியலாளர் (பி.1627)
- 1789-இராயரகுநாத தொண்டைமான், புதுக்கோட்டை சமஸ்தான மன்னர் (பி.1738)
- 1944-ரொமாயின் ரோலாண்ட், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் (பி.1866)
- 1947-ஆல்பிரட் நார்த் வொய்ட்ஹெட், பிரித்தானியக் கணிதவியலாளர் (பி.1861)
- 1988-இசாமு நொகுச்சி, சிற்ப, கட்டடக் கலைஞர் (பி.1904)
- 2006-சதாம் உசேன், முன்னாள் ஈராக் அதிபர் (பி.1937)

## சோவியத் ஒன்றியம்



சோவியத் ஒன்றியம் எனப் பொதுவாக அழைக்கப்பட்ட சோவியத் சோசலிசக் குடியரசுகளின் ஒன்றியம் என்பது 1922 இல் இருந்து 1991 வரை இருந்த ஒரு சோசலிச நாடாகும். இது போல்ஷெவிக் ரஷ்யாவின் வாரிசாக உருவானது. 1945 இல் இருந்து 1991 இல் கலைக்கப்படும் வரை உலகின் இரண்டு வல்லரசுகளில் ஒன்றாக இது திகழ்ந்தது.

சோவியத் ஒன்றியம் உலகில் உள்ள அனைத்து நாடுகளுக்குமான முன்மாதிரியாக அமைந்திருந்தது. நாட்டு அரசும், அரசியல் நிறுவனமும் அனுமதிக்கப்பட்ட ஒரே அரசியல் கட்சியான சோவியத் ஒன்றியப் பொதுவுடமைக் கட்சியின் கீழேயே இயங்கின.

சோவியம் ஒன்றியம் ரஷ்யப்பேரரசின் மற்றும் அதன் அற்பாயுசு சந்ததியான கெரென்ஸ்கி தலைமையிலான தற்காலிக அரசின் சந்ததி என கருதப்படுகிறது. கடைசி ரஷ்ய சார் மன்னன், இரண்டாம் நிக்கோலாஸ், மார்ச் 1917 வரை ஆண்டான். அப்போது சாம்ராச்சியம் தூக்கி எறியப்பட்டது. ரஷ்ய தற்காலிக அரசு பதவி ஏற்றது. அது நவம்பர் 1917 இல் விளாடிமீர் லெனினால் கவிழ்க்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடலில் உயிர் நுழையும் இரகசியம்!



ஆன்மீகம் 78

கேள்வி:- எனக்கு உச்சந்தலையில் ஒரு அழுத்தம். மேல்நோக்கி இழுப்பதுபோல் உணர்கிறேன். அது யோகா சம்பந்தமானதா? அல்லது உடல் கோளாறா?

சத்குரு:- புதிதாகப் பிறந்த குழந்தைக்கு மண்டையோட்டின் குறிப்பிட்ட பகுதி இன்னமும் சரியாக உருவாகாமல் இருப்பதை கவனிக்க முடியும். அந்தப் பகுதி இன்னமும் தோலாகத்தான் இருக்கிறது. எலும்பு உருவாகவில்லை. இந்தப் பகுதி யோகாவில் பிரம்மரந்திரா அல்லது ரந்த்ரா என அழைக்கப்படுகிறது. அதற்கு சிறிய துவாரம் அல்லது வழி என்று பொருள். கருவில் குழந்தை வளரும்போது இந்தப் பகுதி வழியாகத்தான் உயிர் அந்த குழந்தைக்குள் இறங்குகிறது. இறங்கிய உயிர் இந்த (குழந்தையின்) உடல் தன்னை தாங்கக் கூடிய அளவில் இருக்கிறதா என்று தொடர்ந்து கவனிக்கிறது. அந்த அளவிற்கு அதற்கு விழிப்புணர்வு இருக்கிறது. தன் இருப்பிற்கு அந்த உடல் தகுதியானதல்ல என்று அது கருதினால் தான் வந்த வழியாகவே திரும்பிப் போய்விடும். எனவே, கடைசி வரை அந்த இடத்தை, தான் போவதற்கு வசதியாக அப்படியே வைத்திருக்கிறது. வேறு எந்த வழியாகவும் போவதற்கு அது விரும்புவதில்லை. ஒரு நல்ல விருந்தாளி எப்போதும் முன்வாசல் வழியாகத்தான் வருவார். முன் வாசல் வழியாகத்தான் போவார். முன் வாசல் வழியாக வந்து பின் வாசல் வழியாகப் போனால் உங்களை சுத்தமாக துடைத்துவிட்டார் என்று பொருள். மருத்துவர்கள் அறிந்திருப்பார்கள், இறந்தே பிறக்கும் குழந்தை மிக நன்றாக, ஆரோக்கியமாகத்தான் இருக்கும், ஆனாலும் உயிர் இருக்காது. ஏனெனில் உயிருக்குத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு கடைசி வரைக்கும் இருக்கிறது.

இறங்கிய உயிர் இந்த (குழந்தையின்) உடல் தன்னை தாங்கக்கூடிய அளவில் இருக்கிறதா என்று தொடர்ந்து கவனிக்கிறது. அந்த அளவிற்கு அதற்கு விழிப்புணர்வு இருக்கிறது. தன் இருப்பிற்கு அந்த உடல் தகுதியானதல்ல என்று அது கருதினால் தான் வந்த வழியாகவே திரும்பிப் போய்விடும்.


உயிர் தனது கர்ம வினையைக் கொண்டிருக்கிறது. கருவில் வளரும் பிண்டமோ பெற்றோரின் கர்ம வினையைக் கொண்டிருக்கும். எனவே, உயிர் தனது விருப்பப்படி தேர்ந்தெடுக்கிறது. 90 சதவீதம் சரியாகத் தேர்ந்தெடுத்து விடுகிறது. சில நேரங்களில் அதனுடைய தேர்வு தவறாகிவிடுகிறது. எனவேதான் ஒருவர் கர்ப்பமாக இருக்கும்போது அவருக்கு சரியான சூழ்நிலையை உருவாக்க முயற்சிக்கின்றனர். இப்போது அப்படி யாரும் பார்ப்பதில்லை. ஏனெனில் பெண்கள் இப்போது வேலைக்குச் செல்ல ஆரம்பித்து விட்டனர். அதுமட்டுமல்ல கர்ப்ப காலத்திலும் வேலைக்குச் செல்கின்றனர். சினிமா பார்க்கின்றனர். எல்லா இடத்திற்கும் செல்கின்றனர். தங்களை விட ஒரு நல்ல உயிர் அந்த கர்ப்பத்தில் தங்க வேண்டுமென் பதற்காக ஆணும் பெண்ணும் முன் காலத்தில் எல்லா முயற்சியும் எடுத்தனர். எனவே, கர்ப்பமாக இருக்கும் தன் மனைவியைப் பார்க்க கணவன் கூட ஒரு காலகட்டத்திற்கு மேல் அனுமதிக்கப்படுவதில்லை. ஏனெனில், சுகமான சூழ்நிலையில், மகிழ்ச்சிகரமான சூழ்நிலையில், எண்ணங்கள் பாதிக்கப்படாத சூழ்நிலையில், எல்லா நிலையிலும் பாதுகாப்பாக கர்ப்பமுற்ற பெண் இருக்குமாறு பார்த்துக்கொண்டனர். சரியான உயிரை வரவேற்க வசதியாக அப்பெண்ணின் தன்மை இருக்கும்படி, சரியான உணர்ச்சிகள், சரியான சப்தங்கள், சரியான மந்திரங்கள், சரியான உணவு ஆகியன அனைத்தும், இருக்குமாறு பார்த்துக்கொண்டனர். ஒருவேளை இன்றைய உலகத்தில் இவையனைத்தும் பொருந்திவராமல் இருக்கலாம். எனவே, ஒரு உயிர் குறிப்பிட்ட ஒரு கருவில் இறங்கி, நாளடைவில், தான் குழந்தையாக மாற அந்தக் கரு தகுதியானதல்ல என்று கருதினால், கருவை விட்டுப் போய்விடுகிறது. எனவேதான், அந்த வளரும் பிண்டத்தில் ஒரு வழி எப்போதும் திறந்தே வைக்கப்படுகிறது.



இந்த வழிதான் பிரம்மரந்திரா. உங்கள் வாழ்வின் இறுதியில் ஒருநாள் நீங்கள் இந்த உடலை விட்டுப் போகும் போது எந்த வழியாக வேண்டுமானாலும் போகமுடியும். ஆனால், போவதற்கு சிறந்த வழி பிரம்மரந்திராதான். (தொடரும்)

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# பாரதத்தின் சிறைச்சுவர்களுக்குளிருந்து...



...அன்று வருந்தி ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க முன்வந்தோம் என்று கூறியவர்கள்தான் இன்று எங்கள் மீது வருந்தவில்லை என்ற குற்றச்சாட்டினை எழுப்புகிறார்கள். நான் கொடுத்திருந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எனது உண்மையான சொந்தப்பெயர், தந்தை பெயர், முகவரி வேறாக உள்ளது. அதற்கு காரணம் நான்தான். ஏற்கனவே எனது தாயார் என் அண்ணனை இழந்த வேதனையில், ஆபத்தில் இருந்தார். அந்த நேரத்தில் என் கைது செய்தி போனால் என் தாயார் உயிருக்கு ஆபத்தாகிவிடும் என்ற பயத்தினாலும் சில நாட்களில் விட்டுவிடுவார்கள் என்ற நம்பிக்கையிலும் நான் அப்படி மாற்றிச் சொல்லியிருந்தேன். இப்படி எனது சொந்த அடையாளங்களையே சொல்ல முன்வராத ஒருவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்க தானாக முன்வந்தார் என எப்படிச் சொல்ல முடியும். அதனை எப்படி நம்பினார்கள்....?

நளினி கைது செய்யப்பட்டபோது கழுத்தில் தாலி, காலில் மெட்டியுடன் கர்ப்பிணியாக இருந்தார் என்றும் எனக்கு தாஸ் என்ற பெயர் மட்டும் தான் இருந்தது என நளினிக்கு தெரிந்திருந்தது எனவும் சி.பி.ஐயினரின் ஆவணங்களே ஒப்புக்கொள்கிறது. அப்படியிருக்க எமது காதல், கல்யாணம், கர்ப்பம் பற்றி எவ்வித குறிப்பும் நளினி பெயரில் உள்ள ஒப்புதல் வாக்குமூலத்தில் இல்லை. மேலும் அதில் என்னை நளினிக்கு தெரிந்திராத முருகன் என்பதைப் போலத்தான் குறிப்பிட்டிருக்கிறார்கள். மேலும் நளினியின் வாக்குமூலத்தில் அரசியல் படுகொலை என்று ஆங்கிலத்தில் பல இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது குற்றம் சாட்டப்பட்டவர்கள் பயன்படுத்தும் வார்த்தையல்ல என்பது எல்லோருக்கும் தெரிந்ததே.

மேலும் எனது மூத்த சகோதரர் விபத்தில் இறந்தார் என்று சி.பி.ஐ. சமர்ப்பித்த மாவீரர் குறிப்பேட்டில் உள்ளது. அதுதான் உண்மையும்கூட. ஆனால், நான் கொடுத்ததாக சொல்லும் ஒப்புதல் வாக்குமூலத்தில் இந்திய இராணுவத்துடனான மோதலில் அவர் இறந்ததாக வழக்கின் தேவைக்கு ஏற்ப வசதியாக எழுதியிருக்கிறார் திரு.தியாகராஜன்.


1988,1989 ஆண்டுகளில் யாழ். கோட்டை இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது உலகிற்கே தெரியும். ஆனால், அக் காலத்தில் நான் எல்.ரி.ரி.ஈ.யில் இருந்து அந்த யாழ். கோட்டையில் பணி செய்ததாக எழுதி வைத்திருக்கிறார். மேலும் ஈழத்தமிழனான எனக்கு பரிச்சயம் இல்லாத, தெரிந்திருக்க வாய்ப்பில்லாத பல தமிழ் நாட்டு வழக்கிலுள்ள சொற்களையும் ஆங்கிலச் சொற்களையும் பயன்படுத்தி எழுதியுள்ளார். இவைகள் அனைத்தும் நாம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை. அவைகள் அவர்களாகவே எழுதிக்கொண்டவை எனக் கருத போதாதா...? போதாதெனில் இன்னும் ஏராளமான அழுத்தமான ஆதாரக் குறிப்புக்களை என்னால் கூற முடியும்.

உங்களின் பிரச்சினை மற்றும் சிக்கல் முன்பிருந்ததைவிட இப்போது மாறியிருக்கின்றன என நினைக்கிறீர்களா? மாற்றங்கள் குறித்து உங்கள் மனைவி நளினி உங்களிடம் ஏதும் விவாதிப்பாரா?

ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது எம்மை எதிர்நோக்கி உள்ள வழக்கின் சிக்கல் கொஞ்சம் குறைந்ததுபோல் தோன்றினாலும் எமக்கு எதிராக தனிப்பட்ட ரீதியில் புதிய சிக்கல் உருவாக்கப்பட்டுள்ளது. திரு.தியாகராஜன் உயிர்வலி ஆவணப்படத்தில் நீதிப் பிழை நேர்ந்துவிட்டதாக சொல்கிறார். அதே படத்தில் சிவராசன் பொட்டு அம்மானுடன் நடத்திய வயர்லெஸ் பேச்சை மேற்கோள் காட்டி ராஜீவ் படுகொலை சதி நளினிக்கும் தெரியும் என்பது போன்ற விஷ வார்த்தைகளையும் தெளித்திருக்கிறார். நளினியைப் பற்றிய எதிர்மறையான கருத்துக்கள் அவசியம் இல்லாமல் பரப்பப்பட்டு வருகிறது. நளினியின் உயிருக்கு ஆபத்து இருக்கிறது என்று ஏற்கனவே நான் பயந்துபோய் இருக்கேன். இதில் நளினியைவிட எனக்குத்தான் வேதனை அதிகம். எனது மரண தண்டனைக்கு



நளினி





சிறைக்குள்ளிருந்து முருகன் தீட்டிய- ஓவியங்களில் சில...

ஒரு விடிவு கிடைக்கும் என்ற நம்பிக்கையின் ஆறுதலில், தனக்கு எதிராக எழும் குற்றச்சாட்டையும் நளினி புதைத்துக் கொண்டார். சிறைக்குள் சிறிதளவு மன நிம்மதி கிடைப்பது மிகப்பெரிய விடயம். அவர் கலங்கிடக்கூடாது என்று நானும், நளினியிடம் எதுவும் விளக்கிச் சொல்லவில்லை.

பேசுகிற போக்கில் ஒரு வார்த்தை கூறினீர்கள். அதாவது நளினிக்கு ஆபத்து இருக்கிறது. உயிருக்கு என்னாகும் என்ற கவலையில் இருப்பதாக... ஏன் அப்படி கூறினீர்கள்?

23 ஆண்டுகளாக சிறையில் வாடுகிறார் நளினி. எத்தனையோ சோதனைகளையும் கொடுமைகளையும் சந்தித்திருக்கிறார். ஆனால், இப்போதுள்ள சிறை அதிகாரியால் அனுபவிக்கும் கொடுமை அதிகம். ஒரு கைதியின் குழந்தையை நளினி தூக்கி கொஞ்சினார் என்பதற்காகவே அந்தத் தாயை அங்கேயே போட்டு அடித்து உதைத்து வதைத்தார்கள். ஏன் இப்படி என கேட்டால் உயிர் இருக்காது. முகத்தில் அசிட் அடிக்க சொல்வேன். பைத்தியம் என பட்டம் கட்டிவிடுவோம். தற்கொலைக்கு முயன்றதாக கூறுவோம். அதிகாரியை அடித்ததாக பதிவு செய்வோம். உயிர்ப் பிச்சை வேணுமா? என்று தொடர்ந்து மிரட்டி வருகிறார் அந்த அதிகாரி. வீண் வதந்திகளை கூறி வருகிறார். எங்களை சந்திக்கவும் அனுமதிக்கவில்லை.

கடந்த ஜூன் மாதமே அந்த அதிகாரியைப் பற்றியும் அவரால் ஆபத்து இருக்கிறது என்பது பற்றியும் உயர் அதிகாரிகளுக்கு நானும் நளினியும் தனித்தனியாக மனு அளித்துள்ளோம். இது எல்லாவற்றிற்கும் சேர்த்து உண்ணாவிரதம் இருக்கப்போகிறேன். தமிழக முதல்வருக்கும் கோரிக்கை மனு அளிக்க இருக்கிறேன்.

-இணையம்- (முற்றும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஜெனீவாவில் பிரித்தானியா யோசன்னை ஒன்றை முன்வைக்கும்

இலங்கையின் அரச தலைவர்கள் மற்றும் இராணுவ தலைவர்கள் வெளிநாட்டுப் பயணங்களுக்கு தடைவிதிக்கவும் பொருளாதார ரீதியான தடைகளை ஏற்படுத்தவும் பிரித்தானியா யோசனை முன்வைக்கவுள்ளதாக இணையதளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. அந்தச் செய்தி குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

ஜெனீவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் ஆரம்பமாகும் ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான யோசனை ஒன்று முன்வைக்கப்பட வுள்ளது.

பிரித்தானியா தலைமையிலான நாடுகளின் இந்த யோசனையில், பிரித்தானியாவின் முதலீடுகளை இலங்கையில் குறைப்பது, அரச மற்றும் இராணுவ தலைவர்களின் வெளிநாட்டுப் பயணங்களுக்கு தடை விதிப்பது, டொலர்களின் மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்களை குறைப்பது உட்பட பொருளாதார மற்றும் அரசியல் ரீதியான பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதனிடையே கடந்த 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் முன் வைக்கப்பட்ட யோசனைகள் சம்பந்தமாக இலங்கை அரசாங்கம் செயற்பட்டுள்ள விதம் குறித்து விசாரணை செய்வதற்காக அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர் நிஷா தேசாய் எதிர்வரும் ஜனவரி மாதம் இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

இலங்கை வரும் அவர் அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தமிழ் அரசியல் கட்சிகளை சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளார். இதனடிப்படையில் நிஷா தேசாய் அமெரிக்க அரசாங்கத்திற்கு முன்வைக்கும் அறிக்கையின் பிரகாரம் அமெரிக்கா இலங்கை சம்பந்தமான தனது யோசனையை முன்வைக்க உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# மன்.புதைகுழிக்கு காரணமானவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்

## ஜ.ம.முன்னணி ஊடகச் செயலர் தெரிவிப்பு

திருக்கேதீஸ்வரம் சமய குரவர் இருவரால் தேவாரம் பாடப்பட்டு இந்துக்களால் பழைமை வாய்ந்த புனித தலமாக மதிக்கப்படும் இடமாகும்.

இத்தல வளாகத்தில் மனித புதைகுழி காணப்படுவது உலக வாழ் இந்துக்களின் மனதில் வெந்த புண்ணில் வேல்பாய்ச்சும் செயலுக்கு ஒப்பானது என ஜனநாயக மக்கள் முன்னணி ஊடக செயலாளரும் கொழும்பு மாநகர சபை உறுப்பினரும் வீடமைப்பு துறை தலைவருமான சி.பாஸ்க்கரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிக்கையொன்றை விடுத்துள்ளார். அவ் அறிக்கையில் தெரிவிக்கையில்,

இலங்கையில் இனவாதம் தாண்டவம் ஆடுவது உலகறிந்த விடயமாகும். தற்போது மதவாதம் தலைவிரித்தாடுவதும் உலகம் அறிந்த விடயமேயாகும். குறுகிய காலத்தில் பல இந்து, கிறிஸ்தவ, பள்ளிகள் உடைக்கப்படுவதும், திருடப்படுவதும் யாவரும் அறிந்ததேயாகும்.

இதை வன்மையாக மனச்சாட்சியுள்ள மனிதர்களும் உலக நாடுகளும் கண்டித்தமை நாமறிந்த விடயமாகும்.

அதைவிட மேலாக திருக்கேதீஸ்வர வளாகத்தில் காணப்படும் மனித புதைகுழிகள் புலப்படுகின்றன. இப் பாதகச் செயலை எவர் எப்போது செய்திருப்பினும் மன்னிக்க முடியாத குற்றமும் கண்டிக்கத்தக்கதும் ஆகும்.

புதை குழியில் கண்டெடுக்கப்பட்ட 1982 ஆம் ஆண்டு தயாரித்து பாவனைக்கு விடப்பட்ட 25 சதம் முக்கிய ஒரே தடயமாக கருதப்படுகின்றது. அக்காலத்து சூழ் நிலையை நாம் கவனமாக நோக்கப்படுதல் வேண்டும்.

கோவில் வளாகம் முழுக்க முழுக்க இராணுவ கட்டுப்பாட்டிலும் இராணுவத்தின் கண்காணிப்புக்கும் உட்பட்ட பிரதேசமாக கடந்த 1982 ஆம் ஆண்டுக்கு பின் இருந்தமை தரவுகள் மூலம் காணக் கூடியதாகவுள்ளது.

1982 ஆம் ஆண்டு தொடக்கம் 1990 முதல் பூசை வழிபாடுகளுடன் கோவில் இருந்தமையும் 1990 முதல் 2002 ஆம் ஆண்டு இராணுவ கட்டுப்பாட்டுடனும் பூசை வழிபாடுகள் இன்றியிருந்தமையும் 2002 ஆம் ஆண்டுக்கு பிற்பட்ட காலம் முதல் இராணுவ அனுமதியுடன் 2003 ஆம் ஆண்டு கும்பாபிஷேகத்துடன் பூசை வழிபாடு இன்றுவரை நடைபெறுகின்றனதையும் காணக் கூடியதாகவுள்ளது.

இதனை கவனித்துப் பார்க்கும்பொழுது இராணுவம் கொலை குற்றவாளிகளை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டிய கடமைப்பாட்டை தட்டிக்கழிக்க முடியாதது புலனாகிறது.

இதனை கருத்திற் கொண்டு கிருசாந்தி கொலையை அரசு மறுத்து உச்ச ஆதாரத்துடன் நிரூபிக்கப்பட்ட பின் கொலை செய்யப்பட்டவர்களுக்கு சட்டத்தின் உச்ச தண்டனையான மரண தண்டனை கொடுக்கப்பட்டது யாமறிந்ததே.

மேலும் மரண கைதி தனது இறுதி விருப்பமாக கிருசாந்தி கொலையை விபர்மாக தெரிவிக்க முன்வந்த போது மரண தண்டனை கைதி விபரம் தெரியாமல் போனதும் நாமறிந்த உண்மையாகும்.

அரசு மேலும் காலத்தைத் தாழ்த்தாமல் கிருஷாந்தி வழக்குப் போல் நடைபெற இடமளிக்காமல் தக்க பக்கச் சார்பற்றவிசாரணை நடத்தி கொலைப்பாதகர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன்னிறுத்தி உச்ச தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

அப்போதுதான் மார்ச் மாதம் நடைபெறும் மனித உரிமைப் பேரவையின் கூட்டத் தொடரில் தொடர் சிக்கலில் இருந்து அரசு ஓரளவு மீள்வதற்கான சூழ்நிலை ஏற்படும்.

இல்லையேல் இலங்கைக் கான இன்னல் நிரந்தரமாக மாறிவிடும் என பாஸ்கரா மேலும் தெரிவித்தார். (அ-2)

# நாட்டை ஒப்படைப்பதற்கான பலமிக்க சந்ததியை உருவாக்குங்கள்

எதிர்காலத்தில் நாட்டை ஒப்படைப்ப தற்கான பலமிக்க சந்ததியினரை உருவாக்க வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்தராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.


சர்வதேச கணித மற்றும் ஒலிம்பியாட் போட்டிகளில் கலந்து கொண்ட மற்றும் வெற்றிபெற்ற மாணவர்கள் நேற்றுமுன்தினம் மாலை அலரி மாளிகையில் ஜனாதிபதியை சந்தித்துள்ளனர். இதன் போது அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

கடந்த யுத்த சூழ்நிலையை நிறைவுக்கு கொண்டு வந்து சமாதான நிலையை ஏற்படுத்தி அபிவிருத்திகள முன்னெடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, நாட்டை முன்கொண்டு செல்வதற்கு பலமிக்க எதிர்கால சந்ததியொன்று உருவாக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதன்போது, இலங்கைக்கு பதக்கங்களை பெற்றுத்தந்த மாணவர்களை ஜனாதிபதி பாராட்டியுள்ளார். (அ-2)



யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியின் பொன்விழா நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட கல்லூரியின் பழைய மாணவனும் பொலிஸ் ஊடகத்துறையின் பொறுப்பதிகாரியும் பரிசோதகருமான ஜனப் எ.எவ்.புவாத் உட்பட விருந்தினர்கள் மேடையில் நிற்பதை படத்தில் காணலாம்.

# யுத்த வெற்றியை காக்கவேண்டியது அனைத்து மக்களினதும் கடமை

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத்திற்கு எதிரான வெற்றியை பாதுகாக்க வேணடியது அனைவரதும் கடமை யாகும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனநாயக இடதுசாரி முன்னணியின் 14ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வை முன்னிட்டு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அதில் அவர் குறிப்பிட்டுள்ள விடயங்கள் வருமாறு

கடுமையான போராட்டத்திற்கும் தியாகத்திற்கும் மத்தியில் பயங்கரவாதம் இல்லா தொழிக்கப்பட்டது.

பயங்கரவாதத்திற்கு எதி ரான வெற்றியை பாதுகாக்க வேண்டிய பொறுப்புஅனைவருக்கும் உண்டு.

அனைத்து இன மக்களும் ஏனைய இனங்களை மதிக்க வேண்டியது அவசியமானது. மும்மொழிச் சமூகமொன்றை உருவாக்கும் முனைப்புக்களில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதது.

மக்கள் நல இலக்குகளை அடைவதற்கு ஜனநாயக இடதுசாரி முன்னணி வழங்கி வரும் ஒத் துழைப்பு பாராட்டுக்குரியது என ஜனா திபதி தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# ஐக்கிய தேசிய கட்சி விரைவில் ஆட்சியமைக்கும்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி விரைவில் ஆட்சிக்கு வரும் நிலைமையை உணர்வதாக அக்கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

சிங்கள வார இதழுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் ஏற்கனவே வீழ்ச்சியடைந்துள்ளது. மக்கள் எதிர்பார்க்கும் உண்மையான மாற்றத்தை ஏற்படுத்தினால் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியை பிடிக்க முடியும்.

இதற்கு கூட்டணிகள் அவசியமில்லை. சரியான தலைவர் கட்சியில் உருவானால் எம்மால் வெற்றி பெறமுடியும்.

பலமான தலைவர் ஒருவரினால் மட்டுமே இந்த சுமை சுமக்க முடியும். அவர் தளராது ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்தவராக இருக்க வேண்டும்.

ரணில் விக்ரமசிங்கவுக்கு இந்த தகுதி இருக்கின்றது. ஆனால் அவர் வெற்றி பெற இருபது வருடங்கள் இருந்தது. ஆனால் அவரால் வெற்றிபெற முடியவில்லை.

ஒருமுறை அல்லது இரண்டு முறை முயற்சித்து பார்த்து விட்டு இன்னுமொருவருக்கு சந்தர்ப்பத்தை கொடுக்க வேண்டும். அதற்கு தகுதியானவராக சஜித் பிரேமதாச இருக்கின்றார் என்றார். (அ-2)

# மாகாண சபைத் தேர்தல்கள் மார்ச் மாதத்தில் நடைபெறும்

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதத்தில் தென் மற்றும் மேல் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறும் என அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனவரி மாதம் 3ஆம் திகதி மாகாணசபைகளை கலைத்து மார்ச் மாதம் 3ஆம் திகதி தேர்தல் நடத்த முன்னர் திட்டமிடப்பட்டிருந்தது.

குறித்த இரண்டு மாகாண சபைகளும் பெரும்பாலும் ஜனவரி மாதம் 11ஆம் திகதி கலைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தலவில தேவாலய திருவிழா நடைபெறவுள்ள காரணத்தினால் தேர்தலை தாமதப்படுத்த தீர்மானிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

தேவாலய திருவிழாவன்று தேர்தலை நடத்தினால் பெரும் எண்ணிக்கையிலான வாக்காளர்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ள மாட்டார்கள் என்பதனால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகக் குறிபிடப்படுகிறது.

சுப நேரமொன்றில் மாகாண சபை கலைப்பது குறித்த ஆவணத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கையொப்பமிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, மாகாணசபைத் தேர்தலில் இரண்டு நடிகைகளை களமிறக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தடை செய்யப்பட்ட பிளைங் பிஸ என்னும் திரைப்படத்தின் நாயகி கயேஷா பெரேராவை களமிறக்குவது குறித்தும் ஆராயப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை, பிரபல பாடகர் அமல்பெரேராவை மேல் மாகாண சபையின் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளராக நிறுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனினும், வேட்பாளர்கள் தொடர்பில் இதுவரையில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என குறிப்பிடப்படுகிறது. (அ-2)

# அமைதியின் வேந்தனை வரவேற்க



# மனுக்குலமே விழித்தெழு!

சமயங்களைப் பிறப்பித்த பெரியோர் களின் பிறப்பு விழாவை அச் சமயத்தின் அடியார்கள் மகிழ்ந்து கொண்டாடுவது உலக மரபு. எத்தனையோ சமயப் பெரியோர்கள் பிறந்த போதிலும், ஒரே ஒருவரின் பிறப்பு விழா மட்டும் மனுக்குலத்தையே விழிக்க வைக்கும் விழாவாக மாறியது.

அவரது பிறப்பு அன்றைய உலகிற்கு அமைதியை காட்டியது. அவரது பிறப்பிலே புதுமை, அவரது வாழ்விலே புரட்சி, அவரது பிறப்பால் வரலாற்றிலே திருப்பம், மாந்தர் தம் வாழ்வினில் மகத்தான மாற்றம்.

அவர்கள் சாவிலும் கூட ஒரு நம்பிக்கையின் தோற்றம். "உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக" (லூக் 13-14). என்ற கீதம் அந்த அமைதியான இரவீலன்றி வேறெப்போதும் பாடப்படவில்லை.

அமைதியின் பேரோலி வேறு யார் பிறப்பிலும் விண்ணில் முழுங்கவில்லை.

வானவர் குழாம் ஒன்றாக வானிலே தோன்றி சாந்தி கீதம் இசைத்ததும், பேரோளி வீசி திசை காட்டிய விண்மீன் ஒன்று உதித்ததும் அந்த இரவிலேதான்.

எனவே அன்று பாடிய கீதமும், அன்று உதித்த விண்மீனும் கிறிஸ்துவின் வருகை உலகிற்கு அமைதியைத் தந்தது என்பதனை எமக்கு சாற்றி நிற்கின் றன.

மனிதன் இறைவனை நாடினான். இறைவன் மனிதனைத் தேடினான்.

மனிதனின் நாட்டமும், இறைவனின் தேட்டமும் ஒன்றிணைந்த அதிசயத்தை காண வேண்டுமா? வாருங்கள் அந்த இரவில் மரியா பெற்றெடுத்த ஞானத்தின் பொக்கி சமாம் பாலகன் இயேசுவைப் பாருங்கள்.



"இதோ கருவுற்றிருக்கும் அந்த இளம் பெண் ஓர் ஆண் மகவைப் பெற்றெடுப்பார் அக்குழந்தைக்கு அவர் இம் மானுவேல் எனப் பெயரிடுவார் (ஏசாயா 7: 14).

என ஏசாயா கூறும் மெசியா இவரே. சாலமோன், சோக்கிறட்டீஸ், அரிஸ்ரோட்டில், பிளேட்டோ போன்ற ஞானிகளின் ஞானத்தை எல்லாம் ஒன்று சேர்த்த அமைதி யின் அரசர் பிறந்திருக்கும் பெத்தலகேம் நகரைப் பாருங்கள்.

"நீயோ எப்ராத்தா எனப்படும் பெத்லகேமே! யூதாவின் குடும்பங்களில் மிகச் சிறியதாய் இருக்கிறாய். ஆயினும் இஸ்ராயேலை என் சார்பாக ஆளப்போகிறவர் உன்னிடமிருந்தே தோன்றுவார் (மீக் 5: 2).

இயேசுவைப் பெற்றெடுத்த அந்த அமைதியான இரவு இன்று முழுமையாக மாறிவிட்டது.

ஒவ்வொரு நத்தார் பண்டிகையிலும் அமைதி யான இரவு, புனிதமான இரவு என்று இசைக்கின்றோம் அதன் யதார்த்தத்தை எம்மால் புரிந்து கொள்ள முடிகி றதா? எமது மனங்களில் அமைதி யில்லை, வாழ்வில் நிம்மதி யில்லை, எமது பேச்சில் உண்மையில்லை, செயலில் நம் பிக்கையில்லை, மாறாக குழப்பமும் பயமும் நிறைந்த இரவுதான் எங்கள் கண்களில் காட்சி தருகின்றன ஏன்? போரும் நெருக்கடியும், அபாயமும், கோடிக்கு மேற்பட்ட அகதிகளின் அவல நிலையும், இயற்கையின் சீற்றமும் அதனால் ஏற்பட்ட சேதமும், கூட்டுக்கொலைகளும் கொடுமையும் தாண்டவமாடும் இக்காலத்தில் அந்த அமைதியான இரவு இன்னொரு அமைதியின் அரசரை, இயேசு கிறிஸ் துவை எங்களுக்குத் தராதா? அன்பு அமைதி நீதியை எங்கள் மத்தியில் நிலைநாட்டாதா?

நாடு, சமூகம், மொழி, இனம், குலம் யாவும் மனிதனை மனிதனின்று பிரிக்கும் பின்னிப்பின் சின்னங்களாக இன்று காட்சியளிக்கின்றன.

கிறிஸ்து ஆண்டவா அவனிக்களித்த அன்பு, அமைதி, ஈகை, இரக்கம் இவை யாவும் மண்ணோடு மண்ணாய் மறைந்து விட்டன.

அடிமைத்தனம், அறியாமை, கொள்ளை நோய இவைகளை நாகரிகம் ஒழித்திருக் கலாம்.

அனால் இந்த நாகரிகமும் பண பாடும் போரை இந்த உலகில் நின்று ஒழிக்கவில்லை.

அமைதியை நிலவச் செய்வது எங்கள் ஒவ்வொருவருடைய தார்மீகக் கடமை என்பதனை நாம் மறந்து போகக் கூடாது.

அன்று தோன்றிய அமைதியான இரவு இன்றும் எம்மத்தியில் தோன்ற நான் என்னால் முடியுமானவற்றை செய்து ஆண்டவர் கண்களில் கருணை பெறவேண்டும்.

நான் காவது உலக அமைதி நாளன்று திருத்தந்தை ஆறாம் சின்னப்பர் உலகிற்கு விடுத்த செய்தி "ஒவ்வொரு மனிதனும் எனது உடன்பிறப்பு" போராலும் பூசலாலும் சின்னாபின்னமாகும் உலக நாடுக ளுக்கு அன்று திருத்தந்தை விடுத்த நற்செய்தி அது.

இந்த நற்செய்தியை உள்வாங்கி எமது கிறிஸ்தவ வாழ்வில் வெளிக்காட்ட நாம் இன்றே புறப்பட வேண்டும்

மனுக்குலமே விழித்தெழு! அன்று உதித்த விண்மீன் இன்று எமக்கு தரும் தூதை எண்ணிப் பார்.

அன்று வந்த மீட்பர் இன்று தரும் போதனையின் பாதையிலே நடந்து செல். துன்பமும், போரும், பூசலும், பொறாமையும் நீங்கி அன்பும் அமைதியும் அருளும் இன்பமும் பெற நம்பிக்கையோடு ஆண்டவரிடம் செல்.

அன்று வந்த அமைதியின் வேந்தன் இன்றும் எங்கள் நடுவில் மீண்டும் வருவார் என்ற நம்பிக்கையில் மகிழ்ச்சியோடு அமைதியின் வேந்தனை வரவேற்க இப்போதே புறப்படுவோம்.

**அருட்தந்தை**
**றமேஸ்**
**அ.ம.தி.**

# பால்மா விலை அதிகரிப்பு குறித்து அரசு ஆராய்வு

இலங்கையில் பால்மா விலையை அதிகரிக்க அனுமதி தருமாறு பால்மா நிறுவனங்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளன. அந்தக் கோரிக்கை பற்றி அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

அதற்கிடையில், பால்மா நிறுவனங்கள் தங்களின் கையிருப்புகளை பதுக்கிவைக்கும் வேலைகளில் ஈடுபட்டுவருவதாக அதிகாரிகளிடம் முறையிடப்பட்டுள்ளது.

அதனை முறியடிக்கும் முயற்சியாக, பால்மா நிறுவனங்கள் தங்களின் களஞ்சியசாலைகளை நுகர்வோர் வவகார அதிகாரசபையில் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்ற உத்தரவை கூட்டுறவு மற்றும் உள் நாட்டு வர்த்தகத்துறை அமைச்சு கொண்டுவந்துள்ளது.

இதற்கான வர்த்தமானி உத்தரவு கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வந்துள்ளதாக இலங்கை நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் ரூமி மர்ஷுக் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

அனைத்து பால்மா கம்பனிகளின் களஞ்சியசாலைகளையும் நுகர்வோர் அதிகாரசபையில் பதிவுசெய்து கொள்ள வேண்டும் என்பது முதல் தடவையாக கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, பால்மா நிறுவனங்களின் களஞ்சியசாலைகளுக்குள் நேரடியாகச் சென்று நுகர்வோர் விவகார அதிகார சபை அதிகாரிகள் சோதனை நடத்த முடியும்.

சில நாட்களுக்கு முன்னர் சில கம்பனிகள் தங்களின் பால்மா கையிருப்புகளை அநாவசியமான முறையில் பதுக்கி வைத்திருப்பதாக அமைச்சருக்கு முறைப்பாடு கிடைத்தது.

எமது அதிகாரிகள் அப்படியான பதுக்கல்களை கைப்பற்றி நீதிமன்றத்தின் முன்னால் ஒப்படைத்துள்ளனர்.

பால்மா கையிருப்பை பதுக்கி வைத்திருப்பதன் மூலம் திறந்த சந்தையில் பால்மா தட்டுப்பாட்டை ஏற்படுத்தி, அதன்மூலம் பின்னர் நல்ல விலைக்கு விற்பதுதான் அப்படியான நிறுவனங்களின் நோக்கம் என்றும் நுகர்வோர் விவகார அதிகாரசபை கூறுகிறது.

பால்மா விலை உயர்வு பற்றிய பேச்சுவார்த்தைகள் நடந்துவருவதாகவும் கூடிய விரைவில் முடிவு வெளியாகி விடும் என்றும் அதிகாரசபை தெரிவித்தது.

பதுக்கிவைக்கப்பட்டிருந்த பால்மா கையிருப்புகளை அதிகாரிகள் கைப்பற்றி சட்டநடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அதிகாரசபையின் தலைவர் கூறினார்.

இலங்கைச் சந்தைகளில் ஏற்கனவே 810 ரூபாவுக்கு விற்கப்படும் ஒரு கிலோ பால்மாவுக்கு மட்டும் மேலும் 250 ரூபா அதிகரிப்பை நிறுவனங்கள் கோரியுள்ளன.

அதற்கு அனுமதி கிடைப்பதற்கு முன்னதாக நாடெங்கிலும் கடைகளில் பால்மா தட்டுப்பாடு தொடங்கி விட்டதாக மக்கள் முறையிடுகின்றனர்.

சில கடைகளில் இப்போதே ஒரு கிலோ பால்மா பக்கெட் 1000 ரூபாவுக்கு விற்கப்படுவதாகவும், விலை உயர்வு கோரப்படாத 325 ரூபாவுக்கு இருந்த 400 கிராம் பக்கெட் 410 ரூபாவுக்கு விற்கப்படுவதாகவும் உள்ளூர் மக்கள் கூறுகின்றனர்.

இலங்கையை பசும்பாலில் தன்னிறைவு அடையச் செய்யும் செயற்றிட்டத்தை முன்னெடுத்து வருவதாக அரசாங்கம் பல ஆண்டுகளாக கூறிவருகின்றது.

ஆனால், இன்னும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பால் மாவிலேயே பெரும்பாலும் நாடு முழுவதும் தங்கியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# இந்திய மீனவர்கள் 22 பேர் கைதாகினர்

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 22 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்கள் காங்கேசன்துறைக்கு அழைத்துவரப்படுவர் என அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

கச்சதீவு அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த நாகை மாவட்ட மீனவர்கள் 22 பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜெகதாபட்டிணம், கோட்டை பட்டிணம் பகுதிகளை சேர்ந்த மீனவர்கள் 500இற்கும் மேற்பட்ட படகுகளில் மீன்பிடிக்க கடலுக்குச் சென்றனர். அவர்களில் 6 படகுகளில் சென்ற 22 மீனவர்கள் கச்சதீவு அருகே மீன்பிடித்து கொண்டிருந்தனர்.

அப்பொழுது அங்கு சென்ற இலங்கை கடற்படையினர் படகுகளுடன் அவர்களை கைது செய்தனர்.

தமிழக மீனவப் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து பேசிய நிலையில், நேற்றைய தினம் இலங்கை கடற்படையினர் அத்துமீறலில் ஈடுபட்டது மீனவ மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# நிறைவேற்று அதிகாரமுறைமை நீக்கப்பட வேண்டும்-வாசுதேவ

புதிய அரசியல் சாசனமொன்றை அமைக்க வேண்டுமென தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். ஜனநாயக இடதுசாரி முன்னணியின் 14ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வுகளில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

அரசியல் சாசனத்தில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டுமென தமது கட்சி கோரவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

தற்போதைய தேர்தல் முறைமையும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையும் இல்லாதொழிக்கப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த இரண்டு விடயங்கள் குறித்தும் தமது கட்சிக்கு உடன்பாடு கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்களினால் நாட்டின் தலைவிதியை தீர்மானிக்கக் கூடிய வகையிலான பொறிமுறைமை ஒன்றை உருவாக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.(அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவும், தென்னாசியாவிற்கான வெளியுறவுக்கொள்கையும்-நிருபமா ராவ்



இந்தியாவானது தென்னாசியாவின் மையமாக விளங்குகிறது. இந்தியாவின் உள்ளகப் பாதுகாப்பிற்கு எழும் அச்சுறுத்தலானது, இந்திய மாக்கடல் பிராந்தியத்திற்கே அச்சுறுத்தலாக எழும் என்கின்ற நியாயத்தை இந்தியா கவனத்திற் கொள்ள வேண்டும்.

**இவ்வாறு இந்தியாவின் முன்னாள் வெளியுறவுச் செயலரான நிருபமா ராவ் தனது உரையொன்றில் தெரிவித்துள்ளார்.**

பொருளாதார விவகாரங்களைப் பொறுத்தவரையில் பூகோள மூலோபாய விவகாரங்களில் ஏற்பட்டுள்ள துரித மாற்றங்கள் இந்தியாவிற்கும் பசுபிக் சமுத்திர நாடுகளுக்கும் முக்கியமானதாக உள்ளன. இந்த மாற்றங்கள் இந்தியாவின் தென்னாசியாவிலுள்ள அயல்நாடுகளும் வளைகுடாப் பிராந்திய நாடுகளும் தமக்கான கொள்கைகளை வகுப்பதில் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள இவ்வாறான துரித மாற்றங்கள் இந்தியாவிற்குப் பெரும் அச்சுறுத்தலாக எழுந்துள்ளன.

அதாவது இந்தியாவானது இவ்வாறான ஆபத்துக்களிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக உலக நாடுகள் மற்றும் தனது அயல்நாடுகளின் பக்கம் தனது கவனத்தைச் செலுத்தியுள்ளது என்பதல்ல. நாங்கள் பொருளாதாரம், விஞ்ஞானம், தொழில்நுட்பம், இராணுவம் மற்றும் தொடர்பாடல் துறைகளில் சவால்களுக்கு முகம் கொடுக்கக்கூடிய வகையில் எமது முழுமையான தேசிய பலத்தைக் கட்டியெழுப்புவதற்கான மூலோபாயங்களை வகுத்துக் கொள்ள வேண்டும்.

இந்தியாவின் பூகோள அமைவிடம், பிராந்திய அளவு, பொருளாதாரம், அபிவிருத்தி, இராணுவத்திறன், மக்கள் தொகை போன்ற பல்வேறு சாதகமான காரணிகள் மூலம் இந்தியாவானது தென்னாசியாவில் ஒரு வல்லாதிக்க நாடாகவும் மத்திய பிரசன்னம் மிக்க ஒரு நாடாகவும் விளங்குகிறது. எமது ஒவ்வொரு அயல்நாடுகளும், மறைந்த இலங்கையின் முன்னாள் வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் கூறியதை நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது இந்தியாவின் பூகோள அமைவிடம், வரலாற்று அனுபவம், தேசிய அவாக்கள் போன்றன தொடர்பாக பிராந்திய நாடுகள் விளங்கிக்கொள்ள வேண்டிய தேவையுள்ளதாக லக்ஸ்மன் கதிர்காமர் குறிப்பிட்டிருந்தார்.

ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் தவிர இந்தியாவின் ஏனைய அயல்நாடுகள் தமக்கிடையில் தொடர்புகளையும் போக்குவரத்துக்களையும் மேற்கொள்வதற்கு இந்தியாவை நாடுகின்றன. அதாவது இந்த நாடுகள் இந்தியக் கடல், இந்தியாவின் வான் பிரதேசம், தரைப் பிரதேசம் ஆகிய மூன்று மார்க்கங்களையும் பயன்படுத்துகின்றன. இந்தியாவும் இதன் தென்னாசிய அயல்நாடுகளும் இனம், மொழி, கலாசாரம், பொதுவான வரலாற்று அனுபவங்கள் போன்றவற்றால் தமக்கிடையே கட்டுப்பட்டுள்ளன.

இமயமலை மற்றும் இந்திய மாக்கடல் போன்றன இந்தியாவின் பௌதீக எல்லைகளாக உள்ளன. இதேபோன்று இவையிரண்டும் தென்னாசியாவுக்கும் இதன் பிராந்தியத்திற்கும் எல்லைகளாக உள்ளன. இந்தியாவானது தென்னாசியாவின் மையமாக விளங்குகிறது. இந்தியாவின் உள்ளகப் பாதுகாப்பிற்கு எழும் அச்சுறுத்தலானது இந்திய மாக்கடல் பிராந்தியத்திற்கே அச்சுறுத்தலாக எழும் என்கின்ற நியாயத்தை இந்தியா கவனத்திற் கொள்ள வேண்டும். இதனால் இந்தியாவானது தனது உள்நாட்டில் மேற்கொள்கின்ற பாதுகாப்பு ஏற்பாடுகள் தென்னாசியாவின் பாதுகாப்பு ஏற்பாடுகளில் செல்வாக்குச் செலுத்துவது தவிர்க்க முடியாததாகும்.

இந்தியாவானது தனது பாதுகாப்பில் எவ்வித இடைவெளியும் இல்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காகவே தனது தென்னாசிய நாடுகளுடன் மிகச்சிறந்த அயல்நாட்டு கொள்கையைக் கடைப்பிடித்துவருகிறது. இந்தியாவானது தனது உறவுநிலையைத் தொடர்வதில் மூலோபாயக் கணிப்பீட்டைப் பயன்படுத்தி வருகிறது. இதனால் இந்தியாவானது தனது பாதுகாப்பில் மிகத் தீவிர ஏற்பாட்டை மேற்கொண்டுள்ளது. பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள தீவிரவாதக் கிளர்ச்சிகள் மற்றும் இந்தியாவிற்குள்ளே அதிகரித்துள்ள பயங்கரவாத நடவடிக்கைகள் போன்றன இந்தியாவின் பாதுகாப்பிற்கு சவாலாக உள்ளன. இதனால் இந்தியாவானது தனது பாதுகாப்பைத் தானே மீளாய்வு செய்துகொள்ள வேண்டும்.

இந்தியாவானது தனக்கு எதிராக எழுந்துள்ள இராணுவ அச்சுறுத்தல்கள், இராணுவ ஊடுருவல்கள் மற்றும் ஏனைய நாடுகளின் இராணுவப் பலங்களுக்கு ஈடுகொடுக்க வேண்டியுள்ளது. இந்தியாவின் எல்லைகளில் போரை மேற்கொண்டுவரும் பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் போன்றவற்றில் செயற்படும் பயங்கரவாதக் குழுக்கள் மூலம் அங்கு வாழும் மக்களுக்கு சமாதானத்தை கொண்டு வர முடியாது என்பதை நாம் அறிகிறோம்.

ஆப்கானிய மக்களைப் பாதுகாக்க வேண்டிய தேவை இந்தியாவுக்கு உண்டு. ஆப்கானுக்கு இந்தியாவின் உதவி தேவை. இதனால் இந்தியா ஒருபோதும் ஆப்கான் மக்களைக் கைவிடமாட்டாது. இதனால் இந்தியாவானது தொடர்ந்தும் ஆப்கானில் சுமுகமான நிலையைத் தோற்றுவிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறது.

இதேபோன்று பாகிஸ்தானில் ஜனநாயக ஆட்சி சீர்குலைந்துள்ளது. இந்நிலையில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான மோதல்கள், முரண்பாடுகள் போன்றனகளையப்பட்டு இவ்விரு நாடுகளும் தாமாகவே தமது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள வேண்டும். மிகப்பெரிய அனைத்துலக அரங்கில் இந்தியாவானது பாகிஸ்தானுடன் நல்லுறவை ஏற்படுத்துவதற்கான நகர்வுகளை முன்னெடுக்க வேண்டும்.

இந்தியாவானது அமெரிக்காவுடன் நல்லுறவைப் பேணிவருகிறது. 2014 இல் அமெரிக்காவும் இதன் கூட்டணிப் படைகளும் ஆப்கானிலிருந்து முற்றுமுழுதாக வெளியேறுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன. இந்நிலையில் ஆப்கான் விவகாரம் தொடர்பில் இந்தியாவானது தனக்குச் சாதகமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். இந்தியாவின் மூலோபாயக் கொள்கைத் திட்டமிடலாளர்கள் இதனை தமது கருத்திற் கொள்ள வேண்டிய தேவையுள்ளது. ஆப்கானில் நிலைகொண்டுள்ள தலிபான் தீவிரவாதிகள் தமது நடவடிக்கைகளை நிறுத்திக் கொள்வதற்கான எவ்வித அறிவிப்புக்களையும் மேற்கொள்ளவில்லை. ஆப்கானில் இந்தியா தனது தலையீடுகளை மேற்கொள்ளாவிட்டால், இது இந்தியாவின் பாதுகாப்பிற்கு பெரும் தலையிடியாக அமையும்.

2001லிருந்து இந்தியாவானது இவ்வாறானதொரு சூழலுக்கு முகங்கொடுத்து வருகிறது. ஆப்கானின் ஆட்சியை தலிபான்கள் கைப்பற்றிக் கொள்வார்கள் என்கின்ற நிலை உருவானால் கூட, இந்தியாவானது தனது நடவடிக்கைகளிலிருந்து தளர்ந்து விடக்கூடாது. தொடர்ந்தும் அனைத்துலக மற்றும் பிராந்தியக்கூட்டணி நாடுகளின் உதவியுடனும் பலத்துடனும் ஆப்கானில் ஜனநாயக ஆட்சியை நிலைநிறுத்துவதில் இந்தியா தயக்கம் காண்பிக்கக்கூடாது. இதன்மூலம் ஆப்கானில் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஜனநாயக அரசாங்கமானது தனது நாட்டில் செயற்படும் தீவிரவாதிகளுக்கு எதிராக யுத்தத்தை மேற்கொள்வதில் தளர்வடையக்கூடாது என்பதை இந்தியா நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டும்.

இந்தியாவின் வடகிழக்கில் அமைந்துள்ள நாடுகள் பங்களாதேசின் ஊடாக இந்தியாவுடன் தொடர்புகளைப் பேணுவதால் இவை பல நலன்களை அடைந்துகொள்கின்றன. இது வட கிழக்கில் குறிப்பிடத்தக்க ஒரு அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது என்பதை சுட்டி நிற்கிறது. இந்திய மத்திய அரசாங்கத்தின் ஆதிக்க சக்தியாக இதன் வெளியுறவுக் கொள்கையே அமைந்துள்ளது. பங்களாதேசின் அனைத்து மாநிலங்களும் அதன் மத்திய அரசாங்கத்தின் கீழ் ஒன்றிணைந்து செயற்படுகின்ற நிலையை இந்திய மத்திய அரசாங்கம் தோற்றுவிக்க வேண்டும். இதன்மூலம் தேசிய நலனை தியாகம் செய்யாது மிக முக்கியமான மூலோபாயச் சமநிலையை இந்தியா தனது எல்லை நாடுகளில் தோற்றுவிக்க முடியும்.

இதேபோன்று நேபாளத்துடன் உறவைப் பேணவேண்டியது இந்தியாவுக்கு மிக முக்கியமானதாகும். நேபாளமானது இந்தியாவின் ஆதரவுடன் தனது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான மூலோபாயத்தை இந்தியா வகுத்துக்கொள்ள வேண்டும். நேபாளம், பங்களாதேஷ் போன்ற அயல்நாடுகளின் தேவைகளைக் கவனத்திற் கொண்டு அவற்றை இந்தியா பெருந்தன்மையுடன் வழங்குவதன் மூலம் பிராந்தியத்தில் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அதேவேளையில், இந்தியாவின் தேசிய பாதுகாப்பையும் இது வலுப்படுத்தும்.

தென்கிழக்காசியாவின் பிரதான நுழைவாயிலாக மியன்மார் உள்ளது. இதன் வடக்குப் பகுதியானது இந்திய- சீன- மியன்மார் முக்கோணத் தரைத்தோற்றத்துடன் தொடர்புபட்டதாகும். மியன்மாரில் எழுந்துள்ள தீவிரவாதக் கிளர்ச்சிகளை முறியடிப்பதற்கு இந்தியாவால் வழங்கப்படும் பாதுகாப்பு ஒத்துழைப்பானது மிகவும் முக்கியமானதாகும். இதனால் மியன்மாருடன் மிகவும் நெருக்கமான உறவை இந்தியா பேணிக்கொள்ள வேண்டும்.

இலங்கையைப் பொறுத்தளவில், இந்தியா மட்டுமே இதன் அயல்நாடாகும். இலங்கையில் முப்பது ஆண்டுகளாகத் தொடரப்பட்ட உள்நாட்டு யுத்தமானது அங்கு வாழும் பல சமூகங்களின் வாழ்வைச் சின்னாபின்னமாக்கியுள்ளது. ஆனால், வடகிழக்கில் வாழும் தமிழ் மக்களை விட வேறெந்த சமூகத்தவரும் மிக மோசமான பாதிப்பைச் சந்திக்கவில்லை. ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டதானது இந்தியாவுக்கு மிகப் பெரும் துன்பியல் சம்பவமாக உள்ளது.

இலங்கையில் நீண்ட காலமாகத் தொடரப்பட்ட உள்நாட்டு யுத்தமானது தற்போது முடிவுக்குக்கொண்டுவரப்பட்டதானது இலங்கையில் மீளிணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கும் போரின் காயங்களை ஆற்றுவதற்கும் கிடைத்துள்ள மிகவும் அற்புதமான வாய்ப்பாகும். இதன்மூலம் இலங்கையில் வாழும் சமூகங்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள கசப்புக்கள் தீர்க்கப்பட முடியும். இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் சுய மரியாதையுடன், சம உரிமை வழங்கப்பட்டு மதிக்கப்பட வேண்டும். இதற்கு இந்தியாவானது தனது உதவியை வழங்க வேண்டும்.

இந்தியா, இலங்கை மற்றும் மாலைதீவு போன்றன கடற்பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பில் தமக்கிடையே முத்தரப்பு உடன்படிக்கையைக் கொண்டுள்ளன. இதன்மூலம் எமது பிராந்தியத்தில் பயனுள்ள வினைத்திறனான அபிவிருத்தியை மேற்கொண்டு பிராந்திய பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

சீனா எம்முடைய மிகப்பெரிய அயல் நாடாக உள்ளது. சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுநிலையில் விரிசல் ஏற்பட்டாலும் கூட அதனை சீர்செய்துகொள்ள வேண்டும். இதற்கான சவால்களை இந்தியா ஏற்றுக்கொள்ள வேண்டும். சீனா என்கின்ற காரணி எமது பாதுகாப்பு ஏற்பாட்டில் செல்வாக்குச் செலுத்துகின்றது. சீனாவின் பிராந்தியச் செல்வாக்கு மற்றும் இராணுவ ஆற்றல்கள் போன்றன இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் முரண்பாட்டைத் தோற்றுவிக்கின்றன. கடந்த 50 ஆண்டுகளாக பிராந்திய எல்லைப் பிரச்சினை தொடர்ந்தாலும்கூட இந்தியாவானது எல்லாவற்றையும் சமாளித்து சீனாவுடன் நல்லுறவைப்பேண வேண்டும்.

பூகோள அரசியலைப் பயன்படுத்தி அதனைச் சரியான முறையில் கையாள்வதன் மூலம் எல்லா நாடுகளுடனும் குறிப்பாக சீனா போன்ற செல்வாக்கு மிக்க நாடுகளுடன் சுமூகமான உறவை இந்தியா பேணிக்கொள்ள முடியும். இதுவே தற்போதைய தேவையாகவும் உள்ளது.

பயங்கரவாதத்திற்கு எதிரான போரை முன்னெடுப்பதில் இந்தியாவுக்கு மேற்கு ஆசியா மிகவும் முக்கியமானதாகும். மேற்கு ஆசியாவில் வாழும் 6.5 மில்லியன் வரையான இந்தியர்களின் நலன்கருதி அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக இந்தியாவானது மேற்காசியாவில் பயங்கரவாதத்தைத் தோற்கடித்து கடற்கொள்ளையர்களை முற்றாக ஒழிக்க வேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ளது. பாலஸ்தீனிய விவகாரமோ அல்லது ஈரானின் அணுவாயுதப் பிரச்சினையோ எதுவானாலும் இந்தியா மிகவும் விழிப்புடனும் ஆர்வத்துடனும் தலையீடு செய்து பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறான அனைத்துலக பிரச்சினைகளையும் இந்தியா முகங்கொடுத்து மிகவும் உறுதியான, தெளிவான மூலோபாயக் கணிப்பீட்டை கடைப்பிடித்து, பாதுகாப்பு நலன்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான நகர்வுகளை இந்தியா மேற்கொள்ள வேண்டும். நீண்ட காலமாக நாடுகளில் நீடித்திருக்கும் பிரச்சினைகளைத் தீர்வுக்குக் கொண்டு வருவதற்கான கலந்துரையாடல்கள் மற்றும் சமரசங்களில் ஈடுபடுவதற்கேற்ற வெளியுறவுக்கொள்கையை இந்தியா வகுத்துக்கொள்ள வேண்டும்.

தற்போதைய பிரச்சினைகளையும் அதற்கான சாத்தியங்களையும் தெளிவாக விளங்கிக்கொண்டு அனைத்துலக அரங்கில் ஒரு சுமூகமான சூழலை ஏற்படுத்துவதற்கான வழிவகைகளை இந்தியா ஆராய்ந்து செயற்பட வேண்டும்.

-புதினப்பலகை-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுவருட பலன்கள் 2014

## எண்ணற்ற இனிய மாற்றங்களை வழங்கப்போகிறது இந்த புதுவருடம்!



**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

**ஏப்ரல் மாதத்துக்குமேல் எதிர்பார்ப்புகள் நிறைவேறும்!**

**மகத்தான சாதனை புரிந்து மற்றவர்களுக்கு வழிகாட்டியாக விளங்கும் மேட இராசிநேயர்களே!**

நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த புத்தாண்டு பிறக்கப் போகிறது. கேதுவின் ஆதிக்கத்தில் பிறக்கும் இந்தப் புத்தாண்டு உங்களுக்கு கீர்த்தியையும், செல்வத்தையும் அள்ளி வழங்கும் விதத்தில் கிரக நிலைகளைக் கொண்டிருக்கிறது. ஞான காரகன் கேது உங்கள் ராசியிலேயே சஞ்சரிக்கிறார். தன சப்தமாதிபதி சுக்ரனும் வக்ரம் பெற்றிருக்கிறார். 9,12-க்கு அதிபதியான குருவும் வக்ரம பெற்றிருக்கிறார். உச்ச சனியின் பார்வையும் உங்கள் ராசியில் பதிகிறது.

இத்தனைக்கும் மத்தியில் பிறக்கும் இந்தப் புத்தாண்டு எண்ணற்ற மாற்றங்களை உங்களுக்கு கொடுக்கப் போகிறது.

**சிவல்புரி சிங்காரம்**

திசாபுத்தியும், கிரகங்களும் பலம்பெற்றிருந்தால் உங்களுக்குப் பணத்தேவைகள் பூர்த்தியாகும். பக்கபலமாக இருப்பவர்கள் உதவி செய்வார்கள். இணைந்து வரும் எதிர்ப்புகள் எல்லையை விட்டு ஓடும். மணந்து கொண்ட வாழ்க்கைத் துணையால் மறுமலர்ச்சி உண்டாகும். துணிந்து நீங்கள் செயறபட்டு தொல்லைகளை அகற்றிக் கொள்ளலாம். இல்லையேல் பணிந்து வணங்கி பரிகாரங்களை செய்து கொள்வது நல்லது.

2014-ம் ஆண்டு கேதுவிற்குரிய '7' எண் ஆதிக்கத்தில் அமைவதால், உங்கள் சுய ஜாதகத்தில் கேதுவின் பலம் மற்றும் ராசிநாதன் செவ்வாய், தனாதிபதி சுக்ரனின் பலம் ஆகியவற்றை எடைபோட்டுப் பார்த்து சுய ஜாதகத்தில் பாக்கியாதிபதி நிலையறிந்து அதற்குரிய ஸ்தலங்களைத் தேர்ந்தெடுத்து யோகபலம் பெற்ற நாளில் சென்று வழிபட்டு வந்தால் தேக நலம் சிறப்பாக இருக்கும். செல்வ வளமும் அதிகரிக்கும்.

**1.1.2014 முதல் 12.6.2014 வரை**

வருடத் தொடக்கத்தில் உங்கள் ராசியிலேயே ஞானகாரகன் கேது சஞ்சரிக்கிறார். சப்தம ஸ்தானத்தில் ராகு சனியுடன் கூடிச் சஞ்சரிக்கிறார். ராசிநாதன் செவ்வாய் 6-ல் சஞ்சரித்து விபரீத ராஜயோகத்தை உணடாக்குகிறார். தனாதிபதி சுக்ரனும், விரயாதிபதி குருவும் வக்ரம் பெற்றிருக்கிறார்கள்.

எனவே, இக்காலத்தில் பணம் வந்த மறுநிமிடமே செலவாகலாம். பக்கபலமாக இருப்பவர்களை பகைத்துக் கொள்ளாமல் பார்த்துக் கொள்வது நல்லது. குடும்பத்தினர்களின் குறைகளை முழுமையாகத் தீர்த்து வைக்க முடியவில்லையே என்று கவலைப்படுவீர்கள். ஆரோக்கியத்தில் அடிக்கடி தொல்லைகள் ஏற்பட்டு அகலும். ஜென்ம கேதுவின் ஆதிக்கத்தால் பயணங்கள் அதிகரிக்கும், அலைச்சல் கூடும். வேலைப் பளு அதிகரிக்கும்.

ஆரோக்கியம் சீராகவும், ஆதாயம் அதிகரிக்கவும் சனிக்கிழமை தோறும் சனீஸ்வர வழிபாட்டையும், வெள்ளிக் கிழமை தோறும் விநாயகப்பெருமான் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள். ஜென்ம கேதுவின் ஆதிக்கம் இருப்பதால் பிறரை நம்பி காரியங்களை செய்ய இயலாது. எனவே சர்ப்ப சாந்தி பரிகாரத்தை அனுகூலம் வரும் நாளில் யோகத்தை வரவழைத்துத் தரும் ஸ்தலங்களில் செய்து வழிபட்டு வருவது நல்லது.

**சந்தோஷம் தருமா? சனிப்பெயர்ச்சி!**

இதுவரை ஏழாமிடத்தில் சஞ்சரித்து வந்த சனி பகவான் உச்சம் பெற்று விளங்கினார். அதன் பார்வை உங்கள் ராசியில் பதிந்ததால் காரியத்தடைகளும், கவலைகளும் உங்களுக்கு அதிகரித்திருக்கலாம். அந்த நிலை இனி மாறப்போகிறது. இந்த ஆண்டு வருடக் கடைசியில் 15 நாட்களுக்கு முன்னதாகவே சனிப்பெயர்ச்சி நிகழவிருக்கிறது. 7-ம் இடத்தில் சஞ்சரித்த சனியைக் காட்டிலும் 8-ம் இடத்தில் சனி சஞ்சரிக்கும் பொழுது கொஞ்சமேனும் அவர் நன்மை செய்வார்.

ஆயினும் இட மாற்றம், ஊர் மாற்றம், உத்தியோக மாற்றம், வீடு மாற்றம், நாடு மாற்றம், வாகன மாற்றம் என ஏதேனும் ஒரு மாற்றத்தை உருவாக்கி அதன்மூலம் நற்பலன்களை உங்களுக்கு வழங்கலாம். இக்காலத்தில் எதையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வதே நல்லது.

**மேடம்**



தொடர்ந்து சனிக்கிழமைதோறும் சனி கவசம் பாடி, சனி பகவானை வழிபடுவது நல்லது. உங்கள் ராசிக்கு 10, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனி பகவான் தொழில் மாற்றங்களைக் கொடுப்பார். இளைய சகோதரத்தோடு இணக்கம் ஏற்பட வைப்பார். கூட்டாளிகளால் ஏமாற்றங்களைச் சந்திப்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. சனி-செவ்வாய் சேர்க்கைக் காலத்தில் அனுமன் மற்றும் துர்க்கை வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். வருடக்கடைசியில் சனிப்பெயர்ச்சிக்குப் பிறகு அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் வருவதால் விழிப்புணர்ச்சியோடு செயறபடுவது நல்லது.

**யோகம் தரும் ராகு-கேது பெயர்ச்சி!**

மேஷத்தில் சஞ்சரித்து வந்த கேதுவும், துலாத்தில் சஞ்சரித்து வந்த ராகுவும் தன் வான்வழிப் பயணத்தில் பின்னோக்கிச் சென்று கன்னியில் ராகுவும், மீனத்தில் கேதுவுமாக இருக்கப் போகிறார்கள். இது புத்தாண்டில் ஜூன் 21-ம் திகதி நிகழவிருக்கிறது. 6-ல் ராகு இருந்து, குரு கேந்திரத்தில் இருந்தால் அஷ்டலட்சுமி யோகம் என்பார்கள். அந்த அடிப்படையில் அஷ்டலட்சுமிகளும் உங்கள் இல்லத்தில் வந்து குடியேறி, கொட்டும் பண மழையில் நீங்கள் நனைய இந்த ராகு-கேது பெயர்ச்சி வழி வகுக்கும்.

ராகுவின் பார்வை 4, 8, 12 ஆகிய இடங்களில் பதிகிறது. இந்த ராகு-கேது பெயர்ச்சியின் பலனால் உங்களுக்கு வருமானம் திருப்திகரமாக இருக்கும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். உத்தியோகத்தில் உயர் பதவிகள் கிடைப்பதில் இருந்த தாமதம் மாறும்.

12-ம் இடத்தில் சஞ்சரிக்கும் கேதுவால் காமலிருக்க அப்போதைக்கபபோது வரும் இலாபத்தைப் பிரித்து எடுத்துக் கொள்வது நல்லது.

**குரு மற்றும் சனியின் வக்ர காலம்!**

குருவின் வக்ர காலத்தில் பாகப் பிரிவினை சுமூகமாக முடியும். பங்காளிப்பகை மாறும். சனியின் வக்ர காலத்தில் தொழிலில் சில ஏமாற்றங்களை சந்திக்க நேரிடும். அயல்நாடு சென்றவர்கள் தாய் நாடு திரும்புவர். புத்திர ஸ்தானத்தை சனி பார்ப்பதால் பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது.

**மேஷ ராசி பெண்களுக்கு!**

மேஷ ராசியில் பிறந்த பெண்களுக்கு வருடத் தொடக்கத்தில் தெய்வ பலம் கூடுதலாக இருக்கும். திடீர் தனலாபங்கள் வந்து சேரும். சனியின் பார்வை ராசியில் பதிவதால் இனிய பலன்கள் உங்களுக்கு ஏற்படுவதில் சில இடையூறுகளை சிலர் விளைவிக்கலாம். குருப்பெயர்ச்சிக்குப் பிறகு குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும்.

கணவன்-மனைவிக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும். அன்யோன்யம் அதிகரிக்கும். குழந்தைச் செல்வம் கிடைப்

புத்திசாலித்தனமாக செயற்பட்டு புதிய வாய்ப்புகளை வரவழைத்துக் கொள்வீர்கள். கட்டடங்களை கட்டி வாடகைக்கு விடவேண்டுமென்ற உங்கள் நோக்கம் நிறைவேறலாம். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். உறவினர்களின் மனஸ்தாபங்கள் மாறும்.

**குதூகலம் தரும் குருப்பெயர்ச்சி!**

ஆண்டின் தொடக்கத்தில் மிதுனத்தில் சஞ்சரித்து வந்த குருபகவான் ஜூன் மாதம் 13-ம் திகதி கடக இராசியில் உச்சம் பெறுகிறார். அர்த்தாஷ்டம குருவாக சஞ்சரிப்பதால் அமைதிக்குறைவு ஏற்படுமோ என்று நீங்கள் நினைக்க வேண்டாம். 9, 12 ஆகிய இடங்களுக்கு குரு அதிபதியாவதால் தந்தை வழியில் தகுந்த நற்பலன்கள் கிடைக்கும். சுபவிரயங்கள் அதிகரிக்கும். குடும்பச்சுமை கூடும்.

'மன்னவன் 4-ல் நின்றால் மலைபோல் துயர்வந்தாலும், கண் எதிரில் பனியாய் மாறும், கச்சிதமாய் நோய்கள் தீரும்' என்பார்கள். எனவே, உடல்நல குறைபாடுகள் அகன்று உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். கடன் சுமை குறைய புதிய வழிபிறக்கும்.

குருவின் பரிபூரண பார்வை 8, 10, 12



ஆகிய இடங்களில் பதிகிறது. அதன் பலனால் சிக்கல்கள் விலகும். சிரமங்கள் தீரும். அந்த அடிப்படையில் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப் படுத்தும்.

சென்ற குருப்பெயர்ச்சியில் ஏற்பட்ட இழப்புகளை எல்லாம் இப்பொழுது ஈடுகட்டும் வாய்ப்பு உருவாகலாம். உத்தியோகத்தில் நீங்கள் நினைத்த இடத்திற்கு மாற்றம் கிடைக்கலாம்.

குருவின் பார்வை தொழில் ஸ்தானத்தில் பதிவதால் தொழில் வளம் சிறப்பாக இருக்கும். கூட்டாளிகள் ஏமாற்றி விட்டார்களே என்று கவலைப்பட வேண்டாம். புதிய தொழில் தொடங்கும் திட்டங்களை அரங்கேற்றம் செய்வீர்கள்.

குருவின் பரிபூரண பார்வை 12-ம் இடத்தில் பதிவதால் பயணங்களால் பலன் கிடைக்கும். அனனிய தேசத்தில் இருந்து அனுகூலச் செய்தி வந்து சேரும். வருமானத்தை அசையாத சொத்துக்களாக மாற்றி அமைத்துக் கொள்ள முன்வருவீர்கள்.

வாகன ஸ்தானத்தில் குரு சஞ்சரிப்பதால் வாகன மாற்றம் செய்யும் எண்ணம் மேலோங்கும். உங்களுக்கு அதிர்ஷ்ட எண் ஆதிக்கத்தில், எண்கணித அடிப்படையில் வண்ணங்களும், எண்களும் யோகம் தரும் வித்தில் அமைந்தால் அந்த வாகனத்தை எடுத்துச் செல்லும் இடங்களில் எல்லாம் காரிய வெற்றி ஏற்படும். குரு வழிபாடு குதூகலம் தரும்.

**செல்வவளம் தரும் சிறப்பு வழிபாடு!**

உங்கள் இராசிநாதன் செவ்வாய் என்பதால், அதற்குரிய முருகப்பெருமான் வழிபாட்டை மேற்கொள்வதோடு, செவ்வாய்க் கிழமை தோறும் விரதமிருப்பது நல்லது. பிறந்த திகதி மற்றும் கூட்டுத் தொகைக்குரிய எண்களின் ஆதிக்க நாளில், யோகபலம் பெற்ற நட்சத்திரமும் கூடும் நேரத்தில் சிறப்பு வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது. குறிப்பாக அருகிலுள்ள ஆலயத்திற்குச் சென்று பஞ்சார்ச்சனை செய்து வழிபட்டு வருவது நல்லது.

நாளை இடபம்....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியாவில் சந்தை, மருத்துவமனை மீது உலங்குவானூர்தி குண்டுத்தாக்குதல்




(பெய்ரூட்)

சிரியாவில் சந்தைக் கட்டடம் மற்றும் மருத்துவமனை மீது உலங்கு வானூர்திகள் மூலம் குண்டுகள் வீசப்பட்டு தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலில் 2 குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள் உட்பட 20 பேர் பலியாகினர். இச் சம்பவம் வடக்குப் பகுதியிலுள்ள வர்த்தக நகரமான அலெப்போவில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இது தொடர்பாக தெரியவருவதாவது,

சிரியாவில் புரட்சிப் படைவசம் உள்ள இடங்களில் ஜனாதிபதி ஆசாத்தின் படை அடிக்கடி விமானத் தாக்குதல் நடத்தி வருகிறது.

சட்டத்திற்கு புறம்பாகவும் கண்மூடித்தனமாகவும் விமானத் தாக்குதல் நடப்பதாக மனித உரிமை அமைப்புகள் குற்றம் சாட்டி வருகின்றன. ஆனால் தீவிரவாதிகளை குறிவைத்து தாக்குதல் நடத்துவதாக அரசு கூறுகிறது.

இந்நிலையில் வடக்குப் பகுதியில் உள்ள வர்த்தக நகரமான அலெப்போவில் மக்கள் அதிகம் நடமாட்டம் உள்ள ஒரு காய்கறி மார்க்கெட் மீதும் மருத்துவமனை அருகிலும் உலங்கு வானூர்திகள் மூலம் குண்டுகள் வீசப்பட்டன.

இதனால் கட்டடங்கள் கடுமையாக சேதம் அடைந்தன. ஒரு கட்டடம் இடிந்து விழுந்தது.

அப்பகுதியில் இருந்த மக்கள் தூக்கி வீசப்பட்டனர். இதில் 2 குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள் உட்பட 20 பேர் இறந்தனர்.

இந்த தாக்குதல் படுகொலை என்று சிரிய புரட்சி பொது ஆணைக் குழு கண்டித்துள்ளது. (2)

# பிரித்தானியாவை மீண்டும் சூறாவளி தாக்கும் அபாயம்

(லண்டன்)



பிரித்தானியாவில் மீண்டும் சூறாவளி தாக்கும் அபாயம் உள்ளதாக அறிவிக்கப்பட்டது.

பிரித்தானியாவில்கடும் சூறாவளி காற்று வீசியதில் அங்கு வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

மேலும் நிலச்சரிவு, மின்வெட்டு காரணமாகவும் அங்கு இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

இதையடுத்து அந்நாட்டு சுற்றுச் சூழல்துறை 52 புயல் எச்சரிக்கை செய்தியை வெளியிட்டும் 157 வெள்ள அபாய எச்சரிக்கையை விடுத்தும் மக்களை உஷார்ப்படுத்தியது.

இந் நிலையில் பிரித்தானியாவின் தென்மேற்கு பகுதி, வேல்ஸ் மற்றும் ஸ்கொட் லேண்ட் போன்ற இடங்களில் இன்று திங்கட்கிழமை மீண்டும் சூறாவளி தாக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் ஏற்கனவே அங்கு ஏற்பட்டிருந்த சூறாவளியின் பாதிப்புக்களின் மீட்பு நடவடிக்கைகள் தாமதமடையும் என்று கூறப்படுகிறது. (2)

# அமெரிக்காவில் வேலையில்லாதவர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை நிறுத்தம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் வேலையில்லாதவர்களுக்கு மாதந்தோறும் அரசு சார்பில் வழங்கப்பட்டு வந்த உதவித் தொகை நிறுத்தப்பட்டுள் ளது.

நாட்டின் பொருளாதார சீரமைப்பிற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க அரசு தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் முன்னாள் ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் காலம் முதல் வேலை இல்லாதவர்களுக்கு மாதந்தோறும் உதவித் தொகை வழங்கப்பட்டு வந்தது. இத் தொகை தற்போது நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் 1.3 மில்லியன் மக்கள் பாதிக்கப்படுவார்கள் என தெரிகிறது. (2)




தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படை தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து பா.ஜ.க.சார்பில் நடைபெறவிருக்கும் போராட்டத்திற்கான சின்னத்தை மாநில தலைவர் பொன்ராதாகிருஷ்ணன் வெளியிடுவதைப் படத்தில் காணலாம்.



டில்லி மாநில முதல்வராக பதவியேற்பதற்கு முன் மகாத்மா காந்தியின் நினைவிடத்தில் ஆம் ஆத்மி கட்சி தலைவர் அர்விந்த் கெஜ்ரிவால் மலரஞ்சலி செலுத்தியதைப் படத்தில் காணலாம்.

# ஜோன் கெர்ரி அடுத்தவாரம் மத்திய கிழக்கு நாடுகளுக்கு பயணம்

(வோஷிங்டன்)

மத்திய கிழக்கு நாடுகளான ஜெருசலேம், ரமல்லா ஆகியநாடுகளுக்கு அடுத்த வாரம் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெர்ரி விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

குறித்த நாடுகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடவே அவர் விஜயம் செய்யவுள்ளதாக அமெரிக்கா நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள தகவலில் தெரிவிக்கப்பட்டது.



மத்திய கிழக்கு நாடுகளான இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்திற்கும் இடையில் நிலம் ஆக்கிரமிப்பு தொடர்பான பிரச்சினைகள் இருந்து வந்தன. இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க அமெரிக்கா முயற்சி செய்து வந்தது.

இதன் விளைவாக கடந்த ஜுலை மாதம் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகளில் இஸ்ரேல் தங்கள் நாட்டின் சிறையிலுள்ள பாலஸ்தீனியக் கைதிகளை பல கட்டங்களாகத் தொடர்ந்து விடுதலை செய்ய ஒப்புக்கொண்டது.

அதன்படி இரண்டு கட்ட கைதிகள் திருப்பி அனுப்பப்பட்ட நிலையில் மூன்றாவது கட்டமாக 26 கைதிகள் இன்று அல்லது நாளை விடுவிக்கப்படவுள்ளார்கள். இந்த விடுதலை பேச்சுவார்த்தைக்கான ஒரு பலமான அடிப்படையைத் தருவதாக அமெரிக்கா கருதுகின்றது.

இதனைத் தொடர்ந்து பேச்சுவார்த்தைக்காக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன்கெர்ரி அடுத்த வாரம் மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பயணமாகின்றார்.

கிறிஸ்துமஸ் விடுமுறைக்குப் பின்னர் ஜெருசலத்திற்கும் ரம்லாவிற்கும் செல்லும் ஜோன் கெர்ரி அங்கு முறையே இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாஹுவையும் பாலஸ்தீனிய ஜனாதிபதி மஹ்மூத் அபாசையும் சந்தித்துப் பேச்சுவார்த்தைநடத்துவார்.

அப்போது மற்றைய விடயங்களுடன் அமைதிப் பேச்சுவார்த்தைக்கான இறுதிக் கட்டப்பேச்சுவார்த்தைகளை பற்றியும் அவர் விவாதிக்க இருப்பதாக அமெரிக்க வெளியுறவுத்துறையின் தகவல் தொடர்பாளர் ஜென் சகி தெரிவித்துள்ளார்.

ஜோன்கெர்ரி தற்போது நடத்த இருக்கும் பேச்சுவார்த்தையில் முழுமையான அமைதி ஒப்பந்தம் ஏற்படுவதற்கு வழிகோலும் வகையிலான ஒரு இடைக்கால ஒப்பந்த கட்டமைப்பை இரு நாடுகளும் மேற் கொள்ளவேண்டும் என்று கருது கின்றார்.

இத்தகைய ஏற்பாடே இறுதி வடிவத்திற்கான வெளிப்பாடாக இருக்கக் கூடும்என்று அமெரிக்க அரசு எண்ணுகிறது.

இந்தக் கட்டமைப்பில் இரு நாடுகளின் பாதுகாப்பு, ஜெருசலத்தின் எதிர்காலம் மற்றும் அகதிகளின் மறுவாழ்வு போன்ற அனைத்தும் அடங்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (2)

# தமிழகத்தில் பாரதீய ஜனதா கூட்டணி பெரும்பான்மை இடங்களை கைப்பற்றும்

## பொன்.ராதாகிருஷ்ணன் நம்பிக்கை

பாரதீய ஜனாதாகூட்டணியில் தே.மு.தி.க. இணைந்தால் மகிழ்ச்சி. அந்தக் கட்சி பா.ஜ.கவுடன் கூட்டணி அமைக்கும் என நம்புகிறோம்.

அப்படி கூட்டணி ஏற்படும் பட்சத்தில் பாரதீய ஜனதா கூட்டணி வலுவான கூட்டணியாக தமிழகத்தில் பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றும் என மாநில பாரதீய ஜனதா தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

பாரதீய ஜனதா குமரி மாவட்ட செயற்குழு கூட்டம் மார்த்தாண்டத்தில் நேற்று நடைபெற்றது. இக் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

தமிழகத்தில் பாரதீய ஜனதா கூட்டணி ஓரளவு முடிவுக்கு வந்துள்ளது. ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைகோ, ஐ.ஜே.கே. தலைவர் பச்சமுத்து ஆகியோர பாரதீய ஜனதா அகில இந்திய தலைவர்களை சந்தித்து பேசிவிட்டனர். பா.ம.க.வுடன் பேச்சு நடத்தப்பட்டு வருகிறது.

பாரதீய ஜனதா கூட்டணியில் தே.மு.தி.க. இணைந்தால் மகிழ்ச்சி. அந்த கட்சி பா.ஜ.கவுடன் கூட்டணி அமைகக்கும் என நம்புகிறோம். அப்படி கூட் டணி ஏற்படும் பட்சத்தில் பாரதீய ஜனதா கூட்டணி வலுவான கூட்டணியாக தமிழகத்தில் பெரும்பான்மை இடங்களை கைப்பற்றும்.

இலங்கையில் நடந்த இறுதிக் கட்ட யுத்தத்தில் ஒன்றரை இலட்சம் தமிழர் கொல்லப்பட்டனர். ஒரு இலட்சம் பெண்கள் கணவர்களை இழந்து விதவைகள் ஆனாரகள். 50 ஆயிரம் குழந்தைகள் அநாதைகளாக்கப்பட்டனர்.

அங்குள்ள தமிழர்களின் உடைமைகள், நிலங்கள், வீடுகள் இலங்கை அரசு, இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ளது. அங்கு தமிழர்கள் கொத்தடிமைகள் போல் நடத்தப்படுகிறார்கள். இவ்வாறு இலங்கை தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் இங்குள்ள தமிழர்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் தமிழக மீனவர்களை நிம்மதியாக கடலுக்கு போய் மீன்பிடிக்க விடாமல் இலங்கை இராணுவம் சித்ரவதை செய்கிறது. இவற்றையெல்லாம் வேடிக்கை பார்க்கும் காங்கிரஸ் மற்றும் அதன் கூட்டணி கட்சிகளுக்கு கடலோர கிராமங்களில் ஒரு வாக்கு கூட விழாது.

ப.சிதம்பரம் மத்திய உள்துறை மற்றும் நிதி அமைச்சர் பதவி வகித்துள்ளார். ஆனால் அவரால் தமிழகத்துக்கோ, அவர்து தொகுதிக்கோ ஒரு நன்மையும் கிடைக்க வில்லை. தமிழகத்தில் ஒரு வளர்ச்சித்திட்ட பணிகள் கூட அவரால் செய்யப்படவில்லை.

டில்லியில் ஆம் ஆத்மி கட்சி தலைவர கெஜ்ரிவால் காங்கிரசின் ஊழலுக்கு எதிராக போராடினார். தற்போது அந்த கட்சியுடனேயே கூட்டணி சேர்ந்து ஆட்சி அமைத்து உள்ளார். ஆட்சிக்கு நெருக்கடி ஏற்படும் பட்சத்தில் ஏதாவது ஒரு காரணத்தை சொல்லி அவரே வெளியே வருவார என்றார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கம் இதய சுத்தியுடன் பேச்சுக்கு அழைக்கவில்லை

## மன்னார் ஆயர் இராயப்பு யோசப்பு தெரிவிப்பு

**ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, மன்னார் ஆயர் புலிகளுக்குச் சார்பாகவே செயற்பட்டு வந்தார் என்று என்னைப் பற்றி கூறியிருப்பது அத்தனையும் அப்பட்டமான பொய். இவ்வாறு மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை தெரிவித்துள்ளார்.**

மன்னார் மறை. மாவட்ட ஆயர் புலிக்கு சார்பாகவே செயற்பட்டு வந்தார். அதற்கு உதாரணங்கள் என்னிடம் உள்ளனவென வும் அமைச்சர் கூறியிருக்கிறார். அவ்வாறாயின் அமைச்சர் என்னை அழைத்து விளக்கம் கேட்கட்டும். நான் சென்று விளக்க தயாராக இருக்கின்றேன் என அவர் தெரிவித்துள்ளார்.

மன்னார் மறை. மாவட்ட ஆயர் புலிகளுக்குச் சார்பாகவே செயற்பட்டு வந்தார் என்ற கருத்தை அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக் வெல அண்மையில் தெரிவித்தமை தொடர்பாகவும் தெரிவுக்குழுவுக்கு வரும்படி ஜனாதிபதி கூட்டமைப்புக்கு விடுத்துள்ள பகிரங்க அழைப்புத் தொடர்பாகவும் ஆயர் கருத்து தெரிவித்த போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

அமைச்சர் கெஹலியவும் ஏனைய சில அமைச்சர்களும் என்னைப் பற்றி தவறாக கூறுவதற்குக் காரணம், நான்தான் எல்லாவற்றுக்கும் காரணமென அவர்கள் நினைக்கிறார்கள். தற்பொழுது ஆயர் சபையின் கோரிக்கையும் என்னால் உண்டாக்கப்பட்டதென நினைக்கின்றார்கள்.

உண்மையில் சகல ஆயர்மாரும் ஒன்று கூடி, ஆலோசனை செய்து ஜெபித்து மனச்சாட்சியுடன் இக்கருத்துக்களை எழுத்து வடிவுக்கு ஆயர் சபை கொண்டு வந்தது. இது எனது தனிப்பட்ட முன்னெடுப்பென்று சொல்ல முடியாது. அதில் உண்மைத்தன்மையுமில்லை.

பேச்சுவார்த்தை பேச்சுவார்த்தையென்று எத்தனையோ முறைகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சென்றிருக்கிறது. முன்னேற்றமும் காணப்படவில்லை. நடந்ததும் ஒன்றுமில்லை. எவ்வித பயனுமற்றே போயிருக்கிறது.

பேச்சுவார்த்தையின் தோல்விக்கு காரணமாக இருந்தது என்னவென்றால் அரசாங்கம் இதுவரை எச்சந்தர்ப்பத்திலும் எந்தத் தீர்வைத் தரப்போகின்றோமென்று சொன்னதுமில்லை, வைத்ததுமில்லை. அடிப்படையாக வழங்கக்கூடிய கூறுகள் என்னவென்று கூட அவர்கள் கூறியது கிடையாது.

அரசாங்கம் தீர்வாக என்ன தரப்போகின்றார்கள் என்பதை தெரிந்த பின்பே கூட்டமைப்பு பேச்சுவார்த்தைக்கு போக முடியும். அவை தெரியாமல் காலத்தைக் கடத்துவதற்கும் உலகப் போக்கை திசை திருப்புவதற்கும் முயற்சி செய்யும் அரசாங்கத்தின் அழைப்புக்காக பேச்சுவார்த்தைக்குப் போக முடியாது, போகவும் கூடாது.

அரசாங்கமானது தான் எதை வாக்குறுதிகளாக சர்வதேசத்துக்கும் தமிழ் மக்களுக்கும் கூறினார்களோ அதை முதலில் நிறைவேற்றிக்காட்ட வேண்டும்.

அப்பொழுதுதான் நம்பிக்கை ஏற்பட முடியும். பேச்சுவார்த்தைக்கு கூட்டமைப்பு செல்ல தயங்குவதற்குக் காரணம் கடந்த காலங்களில் ஏற்பட்ட தோல்வி அனுபவங்களாகும்.

பேச்சுவார்த்தைக்குப் போவதற்கு முன் வாக்குறுதிகளை தாருங்கள் என கூட்டமைப்பு அரசாங்கத்தைக் கேட்பதற்கு இதுவே காரணமாகும். அதன் காரணமாகவே, இந்த பேச்சுவார்த்தையும் தோல்வியிலேயே முடிந்து போகும் என்ற அவநம்பிக்கை காரணமாகவே அவர்கள் அழைப்பை ஏற்கவில்லையென்று நம்புகின்றோம்.

2012ஆம் ஆண்டு என்ன காரணத்துக்காக பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது? என்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மிகத் தெளிவாகவே குறிப்பிட்டிருந்தார்.

எனவேதான் பேச்சுவார்த்தையென்பது பேச்சுவார்த்தைக்கு ஆகவல்ல என்பதை உணர்ந்து கொண்டு ஒரு நல்ல முடிவையும் தீர்வையும் தர வேண்டுமென்பதை சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார்.

ஆயர் சபையினர் கூட்டமைப்புடன் அரசாங்கம் பேச வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்துள்ளது என்பது உண்மையே. அவ்வாறு அவர்கள் கோரிக்கை விட்டிருப்பதனால் அதில் உண்மையுள்ளதா? இல்லையா? என்பதை ஆராய்ந்து தீர்மானம் எடுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தைச் சார்ந்தது.

கடந்த நூறு வருடங்களுக்கு மேலாக இப்பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்பதற்காக பல்வேறு தரப்பினர் முயற்சி செய்து வந்துள்ளார்கள்.

ஆனால் இலங்கை அரசாங்கங்களோ எந்தவிதமான முயற்சிகளையும் எடுக்கவில்லையென்றே கூற வேண்டும். இந்த அரசாங்கம் மாத்திரமல்ல இதற்கு முன்னைய அரசாங்கங்களும் காலத்தை கடத்தி வந்ததே தவிர காத்திரமான எந்த முயற்சிகளையும் எடுக்கவில்லையென்பதே உண்மை.

கூட்டமைப்புக்கு அரசாங்கம் வைக்கும் தீர்வுத்திட்டத்தில் தமிழ்மக்கள் ஒரு தேசிய இனம், வடக்கு கிழக்கில் வாழும் மக்கள் பூரண சுயநிர்ணய உரிமை உடையவர்கள்.

ஒரே நாட்டின் கீழ் தங்களைத் தாங்களே ஆள்வதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கின்றது என்ற அடிப்படைத் தத்துவங்களைக் கொண்டதாகவே பேச்சுவார்த்தை இடம்பெற வேண்டும். ஒற்றையாட்சி முறையொன்றின் மூலம் அதிகாரங்களை பகிர்ந்தளிக்க முடியாது.

13ஆவது அரசியல் சாசனத்திலும் எல்லாம் பிடுங்கி எடுக்கப்பட்டு வெறும் கோதே கையளிக்கப்பட்டுள்ளது. ஒற்றையாட்சியென்ற பதம் ஒரே நாடு ஒரே மக்கள் என்ற தத்துவத்தைச் சொல்லிக்கொண்டேயிருக்கிறது. உண்மையில் இந்த நாடு, ஒரே நாடு என்ற போதிலும் பல்லின மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதாகவில்லை.

எனவே இந்த கோட்பாடு நீக்கப்பட வேண்டும். பௌத்த மதம்தான் தேசிய மதம் என்ற சிறப்பான மதிப்பு வழங்கப்படக் கூடாது. எல்லா மதங்களையும் ஒருசேர மதிக்க வேண்டும். ஆனால் இலங்கையில் நடப்பதென்னவென்றால் எல்லா மதமும் சமமானதுதான். ஆனால் பௌத்த மதமே பெரியது என்ற உயர்வு பாராட்டப்படுகிறது.

எல்லா மதங்களுக்கும் மொழிகளுக்கும் இந்த நாட்டில் சமத்தன்மை வழங்கப்பட வேண்டும். இது கொண்டு வரப்பட வேண்டுமானால் ஒற்றையாட்சியை வகுத்துக் கொண்டிருக்கின்ற இலங்கை அரசியல் அமைப்பு மாற்றப்பட வேண்டும்.

இரா.சம்பந்தனையும், முதல் அமைச்சரையும் பேச்சுவார்த்தைக்கு இலங்கை அரசாங்கம் அழைத்திருந்தாலும் நாங்கள் அழைத்தோம் அவர்கள் வரவில்லையென போக்குக்காட்டவே கூட்டமைப்பு அரசாங்கத்தால் அழைக்கப்பட்டிருக்கிறது.

சர்வதேசமும் ஏனையவர்களும் கொடுக்கின்ற அழுத்தம் காரணமாகவே அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு அழைக்கிறதே தவிர மற்றும்படி எதையும் தந்துவிடுவதற்காக அல்ல. எக்காரணங்கொண்டும் இந்த அரசாங்கம் தமிழ் மக்களுக்கான தீர்வைத் தரப் போவதேயில்லை. இதுதான் உண்மை நிலை.

சர்வதேசத்திலிருந்தும் ஏனைய தரப்பினரிடமிருந்தும் இந்த அரசாங்கத்துக்கு தொடர்ச்சியான அழுத்தம் கொடுக்கப்பட்டாலே தவிர மற்றும்படி ஒன்றும் நடக்கப் போவதில்லை. அப்படி அழுத்தம் வந்தால்தான் எமக்கு நம்பிக்கை பிறக்கும்.

சர்வதேசம் இலங்கையில் சமாதான வாழ்வு முறைகொண்டு வரப்பட வேண்டுமென்பதற்காக பாடுபட்டு வருகின்றார்கள்.

ஆகவேதான் தூரப் பார்வையுடன் நாட்டின் நன்மை கருதி இலங்கையரசு நடந்து கொள்ள வேண்டும்.

எனவே தான் இலங்கை அரசாங்கமானது நாட்டின் எதிர்கால நன்மை கருதி சர்வதேச சமூகத்துடன் ஒத்துப்போக வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன் என ஆயர் தெரிவித்தார். (அ-2)

# மஹிந்தவை மீண்டும் ஜனாதிபதியாக்க ஆதரவு வழங்கப் போவதில்லை

## தேசிய சங்க சம்மேளனம் தெரிவிப்பு

(கொழும்பு)

மஹிந்த ராஜபக்சவை மீண்டும் ஜனாதிபதி பதவிக்கு கொண்டு வருவதற்கான ஆதரவு வழங்கப்படமாட்டாது என தேசிய சங்க சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் பாஹியன்கல ஆனந்ததேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டை சரியான திசையில் கொண்டு செல்வேன் என மஹிந்த ராஜபக்ச வழங்கிய உறுதிமொழி காரணமாகவே அவருக்கு சங்க சம்மேளனம் இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களில் ஆதரவு வழங்கியது.

வழங்கிய உறுதிமொழிகளுக்கு முரணாக ஜனாதிபதி செயற்பட்டு வருவதால், அரசாங்கத்தின் எந்த பணிகளிலும் எமது அமைப்பு சம்பந்தப்படாது.

அத்துடன் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு ஆதரவு வழங்கப்படமாட்டாது.

மஹிந்த சிந்தனையின் அடிப்படையிலேயே 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்சவுக்கு ஆதரவு வழங்கப்பட்டது.

மஹிந்த சிந்தனையில் உள்ள கொள்கைகளை கவனத்தில் கொள் ளாது அரசாங்கம் செயற்பட்டு வருகிறது.

சூதாட்டம், களியாட்டம் போன்றவற்றை அடிப்படையாக கொண்ட பொருளாதாரம் நோக்கி செல்லும் கலாசாரம், விழுமியங்களை புறந்தள்ளியுள்ளது.

ஜனாதிபதிக்கு ஆரம்பத்தில் ஆதரவு வழங்கிய பிக்குமார் பலர் ஜனாதிபதியின் ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டனர். ஆலோசகர்களுக்கு வாகனம், எரிபொருள், வீடு, பணம் என்பன வழங்கப்படுகிறது.

தென் பகுதியில் ஒரு கிராமத்திற்கு 10 முதல் 15 ஆலோசகர்கள் உள்ளனர். ஆலோசகர்களுக்காக தனியான அமைச்சை ஏற்படுத்தும் வகையில் ஆலோசகர்களின் எண்ணிக்கை உள்ளது.

நாட்டுக்கு சேவையாற்றக் கூடிய பிக்குமாருக்கு ஆலோசகர் பதவிகளை வழங்கி அவர்களின் வாய் அடைக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஜனாதிபதி ஆலோசகர்கள் கூறும் எதனையும் செயற்படுத்துவதில்லை.

ஹெரோயின் அல்ல நாட்டை அழிக்கும் எதனைக்கொண்டு வந்தாலும் இவர்கள் வாயை மூடிக் கொண்டிருப்பார்கள் என்றார். (அ-2)

## பொழுதுபோக்கு தளமாக குதிரைப் பந்தயத்திடல்

(கொழும்பு)

கொழும்பு கருவாத் தோட்டப் பிரதேசத்தில் கடந்த அரை நூற்றாண்டு காலமாக கைவிடப்பட்டிருந்த கொழும்பு குதிரைப் பந்தயத் திடல் கொழும்பை அழகுபடுத்தும் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு பொது மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பாழடைந்து கிடந்த பழைய குதிரைப் பந்தயத் திடலும் அதன் பார்வையாளர் மண்டபங்களும் புனரமைக்கப்பட்டு அவற்றில் உல்லாசப் பிரயாணிகளைக்கவரும் வர்த்தக நிலையங்கள் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

புனரமைக்கப்பட்ட இந்த பொழுது போக்கு மையத்தை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ கடந்த வெள்ளியன்று திறந்து வைத்தார்.

கலை நிகழ்ச்சிக்கான பார்வையாளர் மண்டபம், உணவகங்கள், ஆடை அலங்கார நிலையங்கள், பெண்களின் அழகு சாதனப் பொருட்கள் விற்பனை நிலையங்கள் இங்கு அமைக்கப்பட்டுள்ளன. குதிரைகள் ஓடிய பழைய தளம்இப் போது ஒரு சர்வதேச ரக்பி விளையாட்டு மைதானமாக மாற்றப்பட்டுள்ளது.

1893 ஆம் ஆண்டில் இந்தக் குதிரைப் பந்தயதிடல் அமைக்கப் பட்டது. பின்னர், இரண்டாம் உலக போரின் போது இது ஒரு தற்காலிக விமானத் தளமாகப் பயன்படுத்தப் பட்டதாக தெரிய வருகிறது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிக்கப்பட்ட சாரதிகளுக்கு நீதி கிடைக்காவிட்டால் நடவடிக்கை

## வடக்கு மாகாணசபை உறுப்பினர் சிவமோகன்

(குருமன்காடு)

**வடமாகாண அரச திணைக்களங்களில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் சாரதிகளின் சேவையை இம் மாதத்துடன் முடிவுறுத்து மாறு சகல திணைக்களங்களுக்கும் வடமாகாண பிரதம செயலாள ரினால் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்காதுவிடின் சட்ட நடவடிக்கைக்கு தயார் என வட மாகாண சபை உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, வடமாகாண சுகாதார திணைக்களத்தில் வெளிவாரி அமைய ஒப்பந்த அடிப்படையில் சாரதிகளாக கடமையாற்றும் உத்தியோகத்தர களை நிரந்தரமாக்குவதற்கான நேர்முகப் பரீட்சைக்கு பலர் தோற்றி 80 புள்ளிகளுக்கு மேல் பெற்றிருந்தும் அவர்களை நியமிப்பதற்கான நேர்முகத் தேர்வுக்கு அழைக்கவில்லை.

இது சமபந்தமாக ஏற்கனவே வடமாகாண சபை உறுப்பினர் சி.சிவமோகன் முதலமைச் சருக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில், திடீரென பழிவாங்கும் நோக்கு டன் வடமாகாண பிரதம செயலாளரினால் அவசர அவசரமாக கடந்த 23 ஆம் திகதி சகல அரச திணைக்களங்களுக்கும் இச் சாரதிகளின் சேவையினை டிசெம்பர் 31 ஆம் திகதி அன்றுடன் முடிவுறுத்திக் கொள்ளுமாறு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதனால் இவ் வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தொடர்ச்சியாக அதையே நம்பி வாழ்க்கையை நகர்த்தி வந்த பலரது நிலைமை கேள்விக்குறிக்குள்ளாகியுள்ள தாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களை சந்தித்த வடமாகாணசபை உறுப்பினர் சி.சிவமோகன இது தொடர்பில் தெரிவிக்கையில்,

கடந்த 05.04.2013 ஆம் ஆண்டு திகதி யிடப்பட்ட (NP/07/OES/GEN) என்னும் இலக்கமுடைய மாகாண பொதுநிர்வாக சேவைகள் திணைக்களத்தின் செயலாளர் கே.தெய்வேந்திரத்தால் ஒப்பமிட்ட கடிதம் மூலம் சாரதிகளை உள்ளீர்ப்பதற்கான பரீட்சையில் தோற்றி 80 புள்ளிகளுக்கு மேல் பெற்ற அனைத்து வாகன ஓட்டுநர்களுக்கும் முன்னுரிமை அடிப்படையில் நியமனம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அப்படி இருந்தும் திடீர் என 170 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்களுக்கு மட்டுமே நேர்முகத்தேர்வு இடம்பெற்றமை மோசடியான செயலாகும்.

எனவே ஏற்கனவே செய்யப்பட்டுள்ள நேர்முகப் பரீட்சையை இரத்து செய்து மீள்நேர முகப் பரீட்சை ஒன்று ஏற்கனவே கூறப்பட்டது போன்று நடத்தப்படுவதுடன், ஒப்பந்த அடிப் படையிலான சாரதிகளின் சேவையானது இம் மாதத்துடன் முடிவுறுகின்றது என தெரிவித்து வடமாகாண பிரதம செயலாளரி னால் அனுப்பப்பட்டுள்ள கடிதமும் இரத்துச் செய்யப்படவேண்டும் என சம்பந்தப்பட்ட வர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

இவ் விடயத்தில் பாதிக்கப்பட்டுள்ள சாரதிகள் தொடர்பாக கவனம் செலுத்தி பரிசீலிக்கப்படாத இடத்து தேவை ஏற்படின் சட்ட நடவடிக்கைக்கும் தாயாராக இருப்ப தாகவும் தெரிவித்தார். (அ-9-250)

# முல்லை நகரில் மணிக்கூட்டு கோபுரம் அமைக்கப்பட வேண்டும்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நகரப்பகுதியில் மணிக்கூட்டு கோபுரம் அமைப்பதற்கான இடவசதி ஏற்படுத் திக் கொடுக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை கோபுரம் அமைக்கப்படவில்லையென சமூக ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

யுத்தத்தினால் சேதமடைந்து தற்போது முல்லைத்தீவு நகரப் பகுதி அபிவிருத்திகள் பலவற்றைக் கண்டு வருகின்றது.

இந்நிலையில் அப்பகுதியில் நான்கு சந்தி கள் பிரிகின்ற வீதியை மையப்படுத்தி மணிக் கூட்டுக் கோபுரம் நிர்மாணிப்பதற்கான அமை விடம் குறிக்கப்பட்டுள்ளது.


எனினும் அதற்கான ஆரம்பகட்ட வேலை கள் எதுவும் இதுவரை முன்னெடுக்கப்பட வில்லை.

எனவே மணிக்கூட்டுக் கோபுரத்தை அதற் குரிய இடத்தில் நிர்மாணித்து முல்லைத்தீவு நகரை அழகுபடுத்த உரியவர்கள் முன்வர வேண்டுமென ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-267)




# வவுனியா சுந்தரபுரத்தில் வீடு எரியூட்டப்பட்டுள்ளது





(குருமன்காடு)

வவுனியா சுந்தரப்புரப் பகுதியில் கடந்த 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு இனந்தெரியாத நபர்களினால் வீடு என்று எரியூட்டப்பட்டுள்ளது.

குறித்த வீட்டில் கணவன் இல்லாத தாயும் நான்கு பிள்ளைகளும் வசித்து வந்த நிலை யில், வீட்டில் யாரும் இல்லாத தருணம் பார்த்து வீட்டிற்குள் நுழைந்துள்ள நபர்கள் வீட்டுத் தளபாடங்கள், தொலைக்காட்சி பெட்டி மற்றும் ஆவணங்கள் உள்ளிட்ட அனைத்துப் பொரு ட்களையும் வீட்டுக்குள் குவித்து விட்டு தீயிட்டுள்ளனர்.

இதனால் அப் பொருட்கள் எரிந்து நாசமா கியுள்ளதுடன், வீடு எரிந்துள்ளது. வீடு மேற் பகுதி தகரத்தால் அமைக்கப்பட்டிருந்தமை யால் அது தவிர்ந்த ஏனைய பகுதிகள் எரிந்து நாசமாகியுள்ளன.

தற்போது வவுனியா மாவட்ட செயலகத் தின் ஏற்பாட்டின் கீழ் அவர்கள் தங்குவதற்கு என தற்காலிக கொட்டகை ஒன்று அமைத் துக் கொடுக்கப்பட்டுள்ளதுடன் இராணுவத் தினரால் சமைத்த உணவும் வழங்கப்படு கிறது. இது தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற னர். (அ-9-250)

# கனகபுரம் கிராமத்தில் மின்சாரவசதி இல்லை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கனகபுரம் கிராமத்தில் மின்சாரமில்லாத இடங்களுக்கு அவ்வசதியை ஏற்படுத்தித் தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கனகபுரம் பகுதியிலுள்ள 9,10,11 ஆம் பண்ணை ஆகிய கிராமங்களுக்கே இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை.

மேற்குறித்த கிராமத்தில் 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றப்பட்டு 40 குடும்பங் கள் வாழ்கின்றன.

இந்நிலையில் இக்கிராமங்களுக்கு முன் னாலுள்ள கனகபுரம் டிப்போ, புதுமுறிப்பு, கோணாவிலூடாக மின்சாரம் பல கிராமங் களுக்கு வழங்கப்பட்டு வருகின்ற போதிலும் தம்மைப் புறந்தள்ளுவது ஏன்? என பாதிக்கப் பட்ட கிராம மக்கள் கேள்வியெழுப்பியுள் ளனர்.

அத்தோடு மக்கள் மின்சாரத்தை வழங்கு மாறு வடக்கின் வசந்த திட்டம், பாராளுமன்ற உறுப்பினர், கிராம அமைப்புக்களிடம் மக்கள் வேண்டுகோள் விடுத்தும் எவ்விதப் பலனும் கிடைக்கவில்லையென அவர்கள் அங்கலாய் க்கின்றனர்.

எனவே குறித்த கிராமங்களுக்கு மின்சா ரத்தை சம்பந்தப்பட்டோர் பெற்றுத் தர ஆவன செய்ய வேண்டுமென கிராமத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-254)

# மயானத்தில் கழிவுகள் கொட்டப்படுகின்றன

உருத்திரபுரம் மயானத்தில் கழிவுப்பொருட்கள் கொட்டப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்து ள்ளனர். முன்னர் கழிவு பொருட்களை கனக புரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் கொட்டி வந்தனர்.

ஆயினும் கடந்த மாவீரர் தினத்தையொட்டி இராணுவம் இவ்விடத்தில் முகாம் அமைத்ததைத் தொடர்ந்து கழிவுப் பொருட்கள் உருத்திரபுரம் மயானத்தில் போடப்பட்டு வருகின்றது.

இதனால் இம் மயானத்தைப் உருத்திர புரத்திற்குட்பட்ட பல கிராமங்கள் புதுமுறிப்பு, கனகபுரம் ஆகிய பிரதேசங்கள் பயன்படுத்தி வருகின்றன.

இந்நிலையில் மயானத்தில் கழிவுப் பொரு ட்கள் வீசப்படுவதனால் அவ்விடத்தில் துர்நாற்றம் வீசுவதோடு சுகாதார சீர்கேடுகளும் இடம்பெற்று வருகின்றன.

அது மாத்திரமின்றி பொலித்தீன், டெங்கு பரவக் கூடிய வகையிலான கழிவுகள் வீசப்படு வதால் அருகாமையிலுள்ள கிராமங்களில் நோய் பரவக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகமாகவுள்ள தென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே கரைச்சிப் பிரதேச சபையினர் இவ் விடயம் தொடர்பில் கவனமெடுத்து சுகாதார சீர்கேட்டைதடுக்க முன்வர வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9)

# கற்குளம் பகுதியில் காட்டு யானைகள்



(குருமன்காடு)

வவுனியா, கற்குளம் பகுதியில் காட்டு யானைகளின் தொல்லைகள் அதிகரித்துக் காணப்படுவதால் தாங்கள் தற்போது அச்சத்து டன் வாழ்ந்து வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இப் பகுதியில் காட்டு யானைகள் கிராமத் துக்குள் புகுந்து மக்களின் அன்றாட வாழ்வு க்கு பெரும் அச்சுறுத்தல்களை ஏற்படுத்தி வரு கின்றன. பெருமளவான பயன்தரு மரங்க ளையும் பயிர்களையும் அழித்து வருகின்றன.

கடந்த காலங்களில் குறித்த பகுதியில் எந்த விதமான காட்டு விலங்குகளோ அல்லது யானைகளின் தொல்லைகளோ இன்றி தாங்கள் வாழ்ந்து வந்ததுடன் பயிர் செய்கையிலும் ஈடுபட்டு வந்த நிலையில் தற் போது காட்டு யானைகளின் தொல்லைகள் அதிகரித்துள்ளது என கவலை வெளியிட்டு ள்ளனர்.

குறித்த யானைகள் தென்பகுதியில் வளர் க்கப்பட்டு, பின்னர் இப்பகுதி காடுகளில் கொண்டு வந்து விடப்பட்டிருக்கலாம் என்று அப்பகுதி மக்கள் சந்தேகப்படுகின்றனர்.

அத்துடன், காட்டு யானைகளை கட்டுப் படுத்தி தமது பயிர்களையும், பயன்தரு மரங் களையும் பாதுகாக்க உதவ வேண்டுமென உரிய அதிகாரிகளிடம் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-250)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யானை சேற்றில் அழுழும் போது
தவளையும் எட்டி உதைக்கும்.
~ நீதிவெண்பா

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## "பொலிஸார் உங்களின் நண்பர்" "உங்கள்" என்ற பதம் குறிப்பது யாரை?

எங்களிடம் இருந்து எங்களைக் காப்பாற்றுதல் என்ற விடயம் பற்றி நாம் சிறிதும் சிந்திக்காதவர்களாக இருப்பது வேதனைக்குரியது.

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் இருவகையான சிக்கல்களுக்கு தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் பரிதாபத்திற்கு ஆளாகி உள்ளனர்.

அதில் ஒன்று, போரில் வெற்றி பெற்ற தரப்பு மேற்கொள்ளும் அடக்குமுறை. இரண்டாவது எங்களிடம் இருக்கக் கூடிய சண்டித்தனக் காரர்களின் அடாவடித்தனம்.

இந்த இரண்டு விடயங்களில், முதலாவது விடயம் தொடர்பில் ஜெனிவாவரை எங்களின் குரல் பாய்ந்து இருக்கின்றது.

அரச அடக்குமுறை குறித்து வெளிநாடுகள் இப்போது காட்டிவரும் கருசனை காரணமாக, பதிலளிக்கும் பொறுப்பை இலங்கை அரசு விரும்பியோ விரும்பாமலோ செய்தாக வேண்டும்.

அதே நேரம் தமிழ் அரசியல் தலைமையும் அரச அடக்கு முறையை எதிர்ப்பதாக இருக்கின்றதே தவிர, எங்கள் வட பகுதியில் எங்களுக்குள் ஏற்படக் கூடிய அடாவடித்தனங்கள் பற்றிக் கவனம் செலுத்துவதாக இல்லை.

உண்மையில் தமிழ் அரசியல் தலைமையின் பணி இரு தளங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

அதில் ஒரு தளம் அரச அடக்குமுறைக்கு எதிரானதாகவும் மற்றைய தளம் தமிழர் பிரதேசங்களில் ஒழுங்கு, கட்டுப்பாடு, கண்ணியம் என்பவற்றை பாதுகாத்தல் மற்றும் எங்கள் வளங்களைக் கொண்டு எங்கள் மண்ணில் மேற்கொள்ள வேண்டிய முதலீடு, உட்கட்டுமானம் உள்ளிட்ட அபிவிருத்திப் பணிகள் மற்றும் கல்வி, சுகாதாரம் சார்ந்த சமூக நலப்பணிகள் தொடர்பில் கவனம் செலுத்துவதாகவும் இருக்க வேண்டும்.

எனினும் முதற்பணியே முழுமை இல்லை என்ற நிலையில், இரண்டாவது பணியில் எங்கள் அரசியல் தலைமைகள் கவனம் கொள்ளும் என்று எதிர்பார்ப்பது மகா மடமைத்தனம்.

எனினும் இரண்டாவது விடயம் அதாவது, எங்கள் வட பகுதியில் ஏற்பட்டுள்ள-எதிர்காலத்தில் விஷ்வரூபம் எடுக்க இருக்கும் சண்டித்தனக் கலாசாரம் குறித்து நாம் கவனம் செலுத்தவில்லையாயின் எங்களின் எதிர்காலம் மிகவும் பயங்கரமானதாக அமையும்.

வட பகுதியைப் பொறுத்தவரை பொலிஸார் தங்களின் கடமையைச் செய்யவில்லை என்பதற்கு அப்பால், வடக்கு மாகாணம் அவர்களுக்கு மேலதிக வருமானம் உழைக்கும் இடமாகிப் போயிற்று.

பொலிஸார் உங்களின் நண்பர் என்ற மகுடவாசகம் மிகவும் பொருத்தமானதே!

ஏனெனில் கொள்ளையர்கள், திருடர்கள், பாலியல் பலாத்காரம் செய்தோர், கொலை புரிந்தோர் ஆகியோருடன் பொலிஸாருக்கு நல்ல நட்பு. இதைத்தான் அவர்கள்... உங்களின் நண்பர்... என்று குறித்தெழுதினரோ என்று நினைக்கத் தோன்றுகின்றது.

எதுவாயினும், வட மாகாணத்துப் பொலிஸாரின் கடமை நேர்மை வழிக்குத் திரும்பவில்லையாயின் அப்பாவிப் பொதுமக்கள் வீதியில் இறங்கி நடமாடமுடியாத அளவில் வடக்கில் சண்டித்தனக் குழுக்கள் தோன்றி பரிநாசம் புரியும்; கவனம்.

# இந்தியாவின் பாதுகாப்புக்கு இலங்கையால் அச்சுறுத்தல் வரும்!

## ராமதாஸ் சுட்டிக்காட்டு

(சென்னை)

இலங்கையின் போக்கு தொடர அனுமதித்தால் அது இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமைந்து விடும் என பட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுனர் மருத்துவர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என இந்திய பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்திருந்த நிலையில், இலங்கை கடற்படையினர் மீண்டும் 22 மீனவர்களை கைது செய்துள்ளமை தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இதனை கூறியுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வங்கக் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினம் மற்றும் ஜெகதாப்பட்டினத்தைச் சேர்ந்த 22 மீனவர்களை இலங்கை கடற்படையினர் நேற்று முன்தினம் நள்ளிரவில் கைது செய்துள்ளது. இலங்கை நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்ட அவர்கள், பின்னர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

தமிழக மீனவர்கள் வங்கக் கடலில் மீன்பிடிக்கச் செல்லும் போதெல்லாம் கடற்படையினரால் கைது செய்யப்படுவது வாடிக்கையாகி வருகிறது. தமிழக மீனவர்கள் நமது கடல் எல்லைக்குள் மீன் பிடித்தாலும், இந்திய எல்லைக்குள் அத்துமீறி நுழைந்து அவர்களை கைது செய்வது இலங்கைப் படையினருக்கு வழக்கமாகி விட்டது.

இப்போதும் இந்திய கடல் எல்லைக்குள் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களைத்தான் இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர். இந்தியாவின் இறையாண்மைக்கு சவால் விடும் வகையில் இலங்கை படையினர் நடத்தியுள்ள இந்த கைது நடவடிக்கை கடுமையாக கண்டிக்கத் தக்கதாகும் என்றார். (எ-4)

# கூட்டமைப்பின் அறிவிப்புக்கு அரசாங்கம் கடும் விசனம்!

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித வுரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரின் போது தீவிர பரப்புரைகளை செய்யப் போவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்திருந்தமை குறித்து ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல விசனம் வெளியிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்த அறிவிப்பு ஒன்றும் புதியதல்ல அவர்கள் எப்போதும் விடுதலைப் புலிகளின் பிரிவினைவாத பரப்புரைக்கு ஆதரவு வழங்கி வந்தவர்கள் என்றும் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரச்சினைகளை உள்நாட்டுக்குள் தீர்க்க முயலவேண்டுமே தவிர, அரசாங்கத்துக்கு எதிராக சர்வதேச அரங்கில் பிரச்சினைகளைத் தீர்க்க முயலக்கூடாது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக் குழுவின் கூட்டத் தொடரின் போது வலியுறுத்தவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் வெளிநாடுகளின் இராஜதந்திரிகளைச் சந்தித்துவிட்டு, ஜெனிவா சென்று அங்கு இறுதிக்கட்டப் போரில் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில சர்வதேச விசாரணையை வலியுறுத்தி தீவிர பரப்புரைகளில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாக கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்திருந்தார்.

இப்போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் அரசாங்கம் மீது சுயாதீனமான விசாரணைகளை சர்வதேச மற்றும் இராஜ தந்திர சமூகங்கள் மேற்கொள்ள வேண்டிய கடமைப்பாடு உள்ளதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கடந்த கால அமர்வுகளில் மீது இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அரசாங்கம் முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என இவ்விரு தீர்மானங்களும் வலியுறுத்தியுள்ளன.

ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் அமர்வில் இலங்கை மீது மூன்றாவது தீர்மானம் கொண்டு வரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு வின் பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம நடைமுறைப்படுத்தவில்லை என சர்வதேச சமூகம் தொடர்ந்து குற்றம் சுமத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# பல்கலைக்கு மாணவர்கள் ஜனவரி முதல் இணைப்பு

(கொழும்பு)

2012 - 2013 கல்வியாண்டுக்கு பல்கலைக்கழகங்களில் மாணவர்களை சேர்க்கும் பணிகள் ஜனவரி மாத இறுதி வாரத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொறியியல் மற்றும் மருத்துவப் பீடங்களில் கல்வி நடவடிக்கைகள் முதலில் ஆரம்பிக்கப்படும் என பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் ஹிக்ஷனிகா ஹிரிம்புரேகம தெரிவித்துள்ளாா.

2012 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 23 ஆயிரத்து 125 பேர் பல்கலைக்கழக நுழைவுக்கான தகுதியை பெற்றுள்ளனர்.

தலைமைத்துவ பயிற்சிகளின் பின்னர் படிப்படியாக இந்த மாணவர்கள் பல்கலைக்கழகங்களில் சேர்க்கப்படுவார்கள் எனவும் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டார். (அ-2)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## ஆசை நிறைவேறும்



ஆசை எழும்போது, அதாவது ஏதோ ஒரு பொருளை நாம் விரும்பும் போது அறிவிலே விழிப்போடு இருக்கவேண்டும். தவறினால் பல தீய விளைவுகள் உண்டாகும். வாழ்க்கையில் எளிதில் தீர்க்கமுடியாத பல சிக்கல்கள் தோன்றிவிடும். ஒரு பொருள் மீது ஆசை எழும்போது அதனோடு உறவு கொண்டு கண்ட முன் அனுபவம், தற்காலச் சூழ்நிலை, எதிர்கால விளைவு இம்மூன்றையும் ஒன்றிணைத்து நோக்க வேண்டும். அப்போதுதான் அறிவு தனது நிலை பிறழாது, மயக்கமுறாது. நலம் என உணர்ந்தால் அளவோடு, முறையோடு அப்பொருளைப் பெறவும் துய்க்கவும் முயலவேண்டும். அறிவில் விழிப்போடு இருக்கும் வரையில் மாணா மனநிலை என்பது எது?

ஒருவருக்குப் பல பொருட்கள் மீது விருப்பம் எழலாம். அவற்றை வரிசையாகக் குறித்துக் கொள்ளவேண்டும். குறிப்பிட்ட ஒரு பொருளின் தேவை இன்றியமையாததா, அதனை அடையத் தனது ஆற்றலும் சூழ்நிலைகளும் ஒத்திருக்கின்றனவா? கணிக்கும் அல்லது எதிர்பார்க்கும் விளைவுகள் என்ன? இவற்றைக் கொண்டு சிந்தனை செய்யுங்கள்.

தேவையும் ஆற்றலும் சூழ்நிலையும் விளைவாகக் காணும் நலனும் ஒத்திருந்தால் அதனை அடைய முறையான முயற்சியை உருவாக்கிக் கொள்ளுங்கள். செயலாற்றி வெற்றி பெறுங்கள். இல்லையெனில், இன்னின்ன நிலைமைகளால் இந்தப் பொருள்மீது ஆசை கொள்ளுதல் தவறு. எனவே, இந்த ஆசையை நான் நீக்கிக்கொள்கிறேன் என்று பல தடவை காலை, மாலை அதற்னெ உட்கார்ந்து தானே மனதிற்குள் உறுதி கூறிக்கொள்ளவேண்டும்.

சில குறிப்பிட்ட பொருட்களைப் பற்றி இவ்வாறு முடிவு செய்து கொண்டால் மீண்டும் பிற பொருள் மீது முறையற்ற [illegible] பெறத்தேவையான ஆற்றலும் நன்கு வளர்ச்சி பெறும். அடுத்தடுத்து வாழ்வில் [illegible] அமைதியும் பெறலாம். இவ்வழியில் ஆசையை முறைப்படுத்திக் கொள்ளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிக் கிண்ண கிரிக்கெட்; மாலுசந்தி அரையிறுதிக்கு தகுதி

(கரவெட்டி)

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தின் கிரிக்கெட் வெற்றிக்கிண்ண தொடரில் கரவெட்டி நவசக்தி அணியை 44 ஓட்டங்களால் வெற்றிபெற்று மாலுசந்தி மைக்கல் அணி அரையிறுதி ஆட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளது.

மேற்படி கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியான அணிக்கு 15 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடரில் காலிறுதி ஆட்டம் கடந்த வியாழக்கிழமை பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மைக்கல் அணி 15 ஓவர்களில் 7விக்கெட்டை இழந்து 123 ஓட்டங்களைப் பெற்றது.

அச்சுதன் 53, கினோஜன் 27 ஓட்டங்களைப் பெற்றனர்.

நவசக்தி அணியின் பந்துவீச்சின் சார்பில் அஜன் 4 , விஜிதரன் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நவசக்தி அணி 79 ஓட்டங்களைப் பெற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் விஜிதரன் 22 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் கினோஜன் 3, தர்சன் 3, பவிகரன், அச்சுதன் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். (க-9-24)

# கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டி; ஐங்கரன், ஸ்ரீமுருகன் இறுதிப்போட்டியில்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி லிபேறியார் விளையாட்டுக் கழகத்தினரால் நடத்தப்பட்டு வரும் கரப்பந்தாட்ட தொடரின் இறுதிப் போட்டிக்கு மட்டுவில் ஐங்கரன், ஸ்ரீமுருகன் அணிகள் தகுதி பெற்றுள்ளன.

புத்தாண்டு தினத்தை முன்னிட்டு தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் நடத்தப்பட்டுவரும் போட்டித் தொடரில் பல அணிகள் பங்கு பற்றியிருந்தன.

இதில் முதலாவது அரையிறுதிப் போட்டியில் மட்டுவில் ஐங்கரன் அணியும் மீசாலை சீமா B அணியும் மோதியது. இதில் மட்டுவில் ஐங்கரன் அணி 2:0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற மற்றுமொரு அரையிறுதி போட்டியில் மட்டுவில் ஸ்ரீ முருகன் அணியை எதிர்த்து மீசாலை சீமா A அணி மோதியது.

இதில் மட்டுவில் ஸ்ரீ முருகன் அணி 2:0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது.

மேற்படி வெற்றிபெற்ற இரு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டி நாளை மறுதினம் முதலாம் திகதி புதன்கிழமை சாவகச்சேரி லிபேறியார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. (க-9-29)

## அஷஸ் டெஸ்ட்

# இங்கிலாந்தை அடக்கி ஆஸி தொடர் வெற்றி

இங்கிலாந்து அணிக்கு எதிரான அஷஸ் நான்காவது டெஸ்டில், ரோஜர்ஸ் அசத்தல் சதம் கைகொடுக்க அவுஸ்திரேலிய அணி நான்காவது வெற்றியை பதிவு செய்தது.


சுற்றுலா இங்கிலாந்து அணிக்கும் அவுஸ்திரேலிய அணிக்குமிடையில் பாரம்பரிய அஷஸ் டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது.

முதல் மூன்று போட்டியில் வென்ற அவுஸ்திரேலியா 3:0 என ஏற்கனவே தொடரை கைப்பற்றிவிட்டது.

முதல் இன்னிங்சில் இங்கிலாந்து 255 ரன்களும், அவுஸ்திரேலியா 204 ரன்களும் எடுத்தன. 51 ரன் முன்னிலையுடன் 2ஆவது இன்னிங்சை விளையாடிய இங்கிலாந்து அணி அவுஸ்திரேலியாவின் அபாரமான பந்து வீச்சில் திணறியது. முடிவில் இங்கிலாந்து 179 ரன்களுக்கு ஆல்-அவுட் ஆனது. அதிகபட்சமாக பீட்டர்சன் 49 ரன்கள் எடுத்தார்.

அவுஸ்திரேலியா அணிக்கு 231 ரன்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. 3ஆம் நாளான நேற்று முன்தினம் ஆட்ட நேர முடிவில் அவுஸ்திரேலியா விக்கெட் இழப்பின்றி 30 ரன்கள் எடுத்து இருந்தது.

நேற்று 4ஆம் நாள் ஆட்டம் நடந்தது. தொடக்க வீரர் வார்னர் 25 ரன்களில் அவுட் ஆனார். அதன்பின் ரோஜர்ஸ், வாட்சன் ஜோடி சிறப்பாக விளையாடியது. இருவரும் இங்கிலாந்து பந்து வீச்சை திணறடித்து ரன்களை குவித்தனர். ரோஜர்ஸ் சதம் அடித்தார். இது அவருக்கு 2ஆவது சதமாகும்.



அவர் 116 ரன்களில் அவுட் ஆனார்.

2ஆவது விக்கெட்டுக்கு ரோஜர்ஸ், வாட்சன் ஜோடி 136 ரன்கள் எடுத்தது. அவுஸ்திரேலிய அணி 51.5 ஓவர்களில் 2 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 231 ரன்கள் இலக்கை எடுத்து 8 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. வாட்சன் 83 ரன்களுடனும், கிளார்க் 6 ரன்களுடனும் களத்தில் இருந்தனர்.

அஷஸ் தொடரின் முதல் 3 டெஸ்டிலும் அவுஸ்திரேலியா வெற்றி பெற்று தொடரை கைப்பற்றிவிட்டது. தற்போது 4ஆவது டெஸ்டிலும் வெற்றி வாகை சூடியது.

இங்கிலாந்து 4ஆவது தோல்வியை சந்தித்து ஏமாற்றம் அடைந்தது. 5ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் அடுத்த மாதம் 3ஆம் திகதி சிட்னியில் நடைபெறவுள்ளது.



இப்போட்டியின் ஆட்ட நாயகனாக அவுஸ்திரேலிய அணியின் ஜோன்சன் தெரிவானார். (க)

### உதைபந்தாட்ட போட்டி;

# பொம்மர்ஸ் - நவஜீவன்ஸ் இன்று பலப் பரீட்சை



பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் பருத்தித்துறை லை.எம்.சி.ஏ வடமராட்சிப் பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்திய 7 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் வி.கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் வதிரி பொம்மர்ஸ் வி.கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் வி.கழக அணி மோதவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலக நிர்வாக கிராம அலுவலர் வி.கே.சண்முகநாதன், கௌரவ விருந்தினராக பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் வரதராசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# 8 ஆயிரம் ஓட்டம் கடந்து அலஸ்டர் குக் சாதனை


இங்கிலாந்து அணித்தலைவர் அலஸ்டர் குக் குறைந்த வயதில் 8 ஆயிரம் ஓட்டங்களை கடந்து சாதனை படைத்துள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 4ஆவது அஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது இன்னிங்சில் இங்கிலாந்து அணித்தலைவர் அலஸ்டர் குக் 51 ஓட்டங்கள் எடுத்தார்.

இந்த போட்டியில் இவர் 45 ஓட்டங்கள் எடுத்தபோது டெஸ்ட் போட்டியில் குறைந்த வயதில் (29 வயது 3 நாட்கள்) 8 ஆயிரம் ஓட்டங்களை கடந்த வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

முன்னதாக இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர் 29 வயது, 24 நாட்களில் இந்த சாதனையை படைத்திருந்தார். (க)





முல்லைத்தீவு மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினரால், கெயார் நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு மைதானம் துப்புரவாக்கும் உபகரணங்கள், அம்பலவன் பொக்கனை, கருநாட்டுக்கேணி, கோப்பாப் பிலவு, குமுளமுனை ஆகிய பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட 4 இளைஞர் கழகங்களுக்கு வழங்கப்பட்ட போது...(படங்கள்:-மல்லாவி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறந்தநாள் வீட்டில் நள்ளிரவு வேளை திருட்டு

(யாழ்ப்பாணம்)

பிறந்தநாளில் நகை களினை அணிந்து கொண்டு தூங்கிய ஒரு வயது குழந்தையின் நகைகளினை திருடர்கள் அபகரித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் நள்ளிரவு வேளை கொக்குவில் கிழக்கு கொக்குவில் வளவத்தை லேனில் இடம்பெற்றுள்ளது.

இதில் குறித்த குழந்தை அணிந்திருந்த சுமார் ஒரு இலட்சம் பெறுமதிமிக்க தங்க சங்கிலியொன்றும் காப்பொன்றும் திருட்டுப்போயுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த குழந்தை தனது முதலாவது பிறந்தநாளினை அன்றைய தினம் கொண்டாடிவிட்டு அணிந்திருந்த நகைகளோடு தூங்கியுள்ளது.

இதன்போது நள்ளிரவு வேளை வீட்டின் சமையற் கதவினை உடைத்து உள்நுழைந்து மின் குமிழ்கள் ஒளிராதவாறு வீட்டின் பிரதான மின் ஆளியினை நிறுத்திவிட்டு நகைகளினை திருடிக்கொண்டு திருடர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு முறையிட்டதனைத் தொடர்ந்து நேற்று பிற்பகல் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளினை அவர்கள் மேற்கொண்டனர். (எ-4)

## ஜெனிவாவில்...

பல்வேறு தரப்பினரையும் சந்தித்திருந்ததுடன், இறுதிக்கட்டப் போர் இடம்பெற்றிருந்த இடங்களுக்கும் நேரில் விஜயம் செய்திருந்தார்.

இலங்கைக்கான தனது விஜயம் தொடர்பில் கடந்த செப்ரெம்பர் மாதம் ஜெனிவாவில் வழங்கிய வாய்மொழி அறிக்கையில் இலங்கையின் மனிதவுரிமை விவகாரங்களில் எவ்வித முன்னேற்றத்தையும் காண முடியவில்லை என்று அவர் தெரிவித்திருந்தார்.

அத்துடன், மனிதவுரிமை விவகாரங்களில் இலங்கை அரசாங்கம எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு முன்னர் தீர்க்கமான முன்னேற்றத்தை வெளிப்படுத்தாது போனால், சர்வதேச விசாரணையை வலியுறுத்துவதே ஒரேவழி என்றும் நவநீதம்பிள்ளை எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-4)

## தனி ஈழத்தை...


சாட்டினார்.

ஈழத்தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டபோது காங்கிரஸ் இந்தியாவை ஆட்சி செய்தது என்று தெரிவித்த அவர் காங்கிரசும் அதற்கு உடந்தையாக இருந்தது என்றார். காங்கிரஸை வீழ்த்தவே பா.ஜ.கவில் இணைந்ததாகவும் குறிப்பிட்டார்.

பா.ஜ.க. ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்கு தனி ஈழம் ஒன்றே தீர்வு என்று வலியுறுத்தி வந்துள்ளதாகவும் தமிழருவி மணியன் சுட்டிக்காட்டினார். தேர்தலில் பா.ஜ.க இனப்பகைவரான சுப்பிரமணிய சுவாமியை எங்கு நிறுத்தினாலும் எதிர்க்கப் போவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (செ-4)

# டேர்பன் டெஸ்ட்

# சாதகமான முடிவுக்காக இந்தியா பதற்றத்துடன் போராடுகிறது



டேர்பனில் நடைபெற்றுவரும் தென்னாபிரிக்க அணிக்கெதிரான 2-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முடிவு சாதகமாக அமைய இந்தியா பதற்றத்துடன் போராடுகிறது.


தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் செய்துள்ள இந்திய அணி அந்நாட்டு அணியுடன் 2 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்று வருகிறது.

இத்தொடரின் முதல்போட்டி சமநிலையில் முடிவடைந்த நிலையில் 2-வது டெஸ்ட் போட்டி டேர்பன் கிங்ஸ்மீட்டில் கடந்த 26-ம் திகதி ஆரம்பமானது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி, முதலில் துடுப்பெடுத்தாடி தமது முதல் இன்னிங்ஸுக்காக 111.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 334 ஓட்டங்களை எடுத்தது.

பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, நேற்று முன்தினம் 3-ம் நாள் ஆட்டநேர முடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 299 ஓட்டங்களைக் குவித்திருந்தது.

4-ம் நாளான நேற்றைய தினம் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, இந்த போட்டியுடன் ஓய்வுபெறும் அனுபவ வீரர் ஜக் கலீஸின் அபார சதத்தின் உதவியுடன் 155.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 500 ஓட்டங்களை எடுத்தது.



துடுப்பாட்டத்தில் அபாரமாக ஆடிய கலீஸ் 115 ஓட்டங்களைக் குவித்தார்.

இந்திய அணியின் பந்துவீச்சில் ஜடேஜா 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

தென்னாபிரிக்க அணியை விட 166 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தமது 2-வது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி, நேற்றைய 4-ம் நாள் ஆட்டநேர முடிவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 68 ஓட்டங்களை எடுத்திருந்தது.

களத்தில் புஜாரா, விராட் ஹோலி ஆகியோர் முறையே 31, 11 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளனர்.

இன்று போட்டியின் 5-வதும் இறுதியுமான நாளாகும். இன்றைய நாளில் 8 விக்கெட்டுக்கள் கைவசமிருக்கும் நிலையில் தென்னாபிரிக்க அணியின் ஓட்ட எண்ணிக்கையை சமப் படுத்த மேலும் 98 ஓட்டங்கள் எடுத்தாக வேண்டிய நிலையில் இந்திய அணி உள்ளது.

## நியூசிலாந்து - மேற்கிந்தியத் தீவுகள் 2-வது ஒருநாள் போட்டி கைவிடப்பட்டது

நியூசிலாந்து - மேற்கிந்திய அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டது.



மழையின் அடர்த்தியை சோதனையிடும் நியூசிலாந்தின் ஜெஸி றைடர்

நியூசிலாந்து சென்றுள்ள மேற்கிந்திய தீவுகள் அணி, 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

முதல் போட்டியில் வெற்றி பெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்ற நிலையில் இரு அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி நேப்பியர், மக்லீன் பார்க்கில் ஆரம்பமாக இருந்தது.

ஆனால் போட்டியின் ஆரம்பத்தில் பெய்த மழையின் காரணமாக போட்டி தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது.

தொடர்ந்தும் விட்டு விட்டு மழை பெய்த காரணத்தினால், போட்டியை ரத்து செய்வதாக நடுவர்கள் அறிவித்தனர்.

இரு அணிகளுக் கிடையிலான் 3-வது ஒருநாள்போட்டி வரும் 2014-ம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி குயின்ஸ்டவுனில் ஆரம்பமாக வுள்ளது.

## அமைதியான...

மல் 9 கிலோ கிராம் குண்டை அமெரிக்காவால் போட முடியும்.

எமது பிக்குகள் கொலை செய்யபபட்டனர். தலதா மாளிகைக்கு குண்டு வைத்தனர். ஸ்ரீமகா போதி மீது தாக்குதல் நடத்தினர். அப்படி செய்த பயங்கரவாதிகள் 12 ஆயிரம் பேர் சரணடைந்தனர். எமது ஜனாதிபதி அவர்களுக்கு மன்னிப்பு வழங்கினார்.

அவர்களுக்கு உணவு கொடுத்து புனர்வாழ்வளிக்கப்பட்டன. அவர்களுக்கு வீடுகளை நிர்மாணித்துக் கொள்ள உதவிகள் வழங்கப்படுகின்றன. அப்படியானால் ஏன் அமெரிக்கா இவ்வளவு தகவல்களை தேடுகிறது. இலங்கை நியூசிலாந்தை போலிருந்தால் இப்படி மனித உரிமைகள் குறித்து தேட மாட்டார்கள்.

ருவாண்டாவில் 10 லட்சம் மக்கள் கொலை செய்யப்பட்டனர். ஏன் அந்த நாடு குறித்து மனித உரிமை அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்று நான் கேட்டேன். அதில் பயனில்லை என்று அவர்கள் கூறினார்கள் என்றார். (எ-4)

## மக்களுக்கு...

உரையாற்றிய ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

ஒவ்வொரு ஞாயிறன்றும் திறந்திருக்கும் இந்த உணவு மத்திய நிலையத்தில் மக்களுக்குத் தேவையான அனைத்து உணவுகளும் குறைந்த விலையில் விற்பனை செய்யப்படவுள்ளதோடு, தொற்றாத நோய்கள் குறித்த நடமாடும் சேவையும் முன்னெடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

## வலி.வடக்கு மீள்குடியேற்றம்...

களின் மத்தியில் வசித்து வருகின்றனர்.

இந் நிலையில் மயிலிட்டி, காங்கேசன்துறை போன்ற பகுதியிலுள்ள சகல வீடுகளையும் இராணுவத்தினர இடித்துத் தரைமட்டமாக்கியுள்ளனர். தற்பொழுது இப்பகுதியைச் சுற்றி மரங்களை நட்டு உயர்வேலி அமைக்கும் பணிகளில் இராணுவத்தினர் ஈடுபட்டுவருகின்றனர்.

இப் பிரதேசததினை இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ளதால் இப்பகுதியில் வசித்த சுமார் 7 ஆயிரத்து 500 குடும்பங்கள் இருக்க இடமின்றி பல்வேறு அசௌகரியங்களை ஏதிர்கொண்டு வருகின்றனர.

எனவே எமது மக்களின் நலன்களைக் கருத்திற்கொண்டு மயிலிட்டி, காங்கேசன்துறை, தையிட்டி, பலாலி, வசாவிளான், வறுத்தலைவிளான் உள்ளிட்ட பகுதிகளில் மக்கள் மீள்குடியேற அனுமதிக்குமாறு ஜனாதிபதியை நேரில் சந்தித்துக் கோரிக்கைகளை முன்வைக்கவுள்ளோம். இச்சந்திப்பில் அரசியலில்லாத சமூகப் பெரியார்களை ஒன்றிணைத்து ஜனாதிபதியுடன் கலந்துரையாடவுள்ளோம் என்றார். (எ-11)

## மனித உரிமைச் சட்டத்தில்...

மைகள் ஆணைக்குழு முன்வைக்கின்ற பரிந்துரை ஒன்று நியாயமான காலத்துக்குள்- நியாயமான வகையில் நிறைவேற்றப்படாவிட்டால், மேன்முறையீட்டு நீதி மன்றத்துக்கோ அல்லது மாகாண உயர்நீதிமன்றத்துக்கோ தங்களின் பரிந்துரையை ஒரு சான்றிதழ் போல சமர்ப்பித்து அதனை நீதிமன்ற உத்தரவாக வலுப்படுத்தும் ஏற்பாடு முன்வைக்கப்பட்டுள்ளது.

அதன்பின்னர், அந்த உத்தரவை நடைமுறைப்படுத்த அரச அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காவிட்டால் அவர்களுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டை சுமத்த முடியும் என்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டுகிறது.

2013-ம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் வரையான காலப் பகுதிக்குள் சித்திரவதைகள் தொடர்பான 563 முறைப்பாடுகள் தமக்குக் கிடைத்துள்ளதாகவும் அவற்றில் பெரும்பாலானவை காவல் துறையினருக்கு எதிரானவை என்றும் ஆணையாளர் மஹநாம ஹேவா கூறினார்.

இந்த சம்பவங்கள் தொடர்பில் ஃபாஸ்ட் ட்ராக்-அதாவது விரைவான விசாரணை நடைமுறையின் கீழ் தீர்வு வழங்கவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரம் கோரியுள்ளது.

சில நாடுகளில் மனித உரிமைகள் ஆணைக்குழுக்களுக்கு குவாஸி ஜுடிசியல்- பகுதியளவு நீதிமன்ற அதிகாரங்கள் இருக்கின்ற போதிலும் அவ்வாறான அதிகாரங்களை இலங்கை ஆணைக்குழுவுக்கு வழங்க, 1996-இல் சட்டத்தைக் கொண்டுவந்த ஜனாதிபதி சந்திரிக்காவின் அரசாங்கம் முன்வரவில்லை என்றும் பிரதிபா மஹநாம ஹேவா கூறினார்.

கடந்த காலங்களில் இலங்கையில் நடைபெற்றதாகக் குற்றஞ்சாட்டப்படும் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொதுநலவாய மனித உரிமைகள் துறையின் உதவியுடன் தேசிய மட்ட விசாரணை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஜெனீவாவில் வரும் மார்ச்சில் நடக்கவுள்ள மனித உரிமைகள் கூட்டத்துக்கு முன்னதாக இந்த சட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதா என்ற போது,

ஓராண்டுக்கும் மேலாக நடந்த பேச்சுவார்த்தைகளின் விளைவாகத்தான் இந்த சட்டத்திருத்த வரைவைக் கொண்டுவந்திருக்கிறோம். ஜெனீவா மனித உரிமைகள் கூட்டத்துடன் சம்பந்தப்பட்டது அல்ல இது என்று அவர் பதிலளித்தார்.

ஐ.நா மனித உரிமைகள் உயர் ஆணையர் நவநீதம்பிள்ளை இலங்கை வந்திருந்தபோது, மனித உரிமைகளை பாதுகாக்கும் கட்டமைப்பை மேலும் கட்டியெழுப்புமாறு எங்களிடம் கூறியிருந்தார் என்றும் மஹநாமஹேவா கூறினார். (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை மீதான...

கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் மற்றும் எதிர்க்கட்சி பிரமுகர்களுடன் நிஷா தேசாய் பிஸ்வால் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

அத்துடன், ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் நிறை வேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றகரமான நடவடிக்கைகள் குறித்து இவர் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் கூறப்பட்டிருந்தது.

ஆயினும், இவரது இலங்கைக்கான பயணம் தொடர்பில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகமோ அல்லது அமெரிக்க இராஜாங்கத்திணைக்களமோ இதுவரை உறுதிப்படுத்தவில்லை.

ஆனால், இலங்கைக்கு விஜயம்செய்வதற்கு அவர் வெளிவிவகார அமைச்சிடம் அனுமதி கோரியுள்ளதாக வெளிவிவகாரச் செயலாளர் கருணாதல்க அமுனுகம தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய பிராந்தியத்துக்கான உதவி இராஜாங்கச் செயலாளராகப் பதவி வகித்த றொபேட் ஓ பிளேக்கிற்குப் பதிலாகவே, நிஷா தேசாய் பிஸ்வால் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய பிராந்தியத்துக்கான உதவி இராஜாங்கச் செயலாளராக இவர் இலங்கைக்கு மேற்கொள்ளும் முதல் பயணம் இதுவாகும்.

அமெரிக்க காங்கிரஸின் உயர் நிலை குழு ஒன்றும் அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்து ஐ.நா. தீர்மானத்துக்குப் பிந்திய நிலைமைகள் குறித்து மதிப்பீடுகளை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது மேற்கொள்ளப் பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மறல்களுக்கு பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் அமெரிக்காவின தலைமையில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கை மீது இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளமை தெரிந்ததே (எ-4)


2 மணித்தியாலத்தில்

**கணினி திருத்தம்**

உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம். அழையுங்கள். 077 908 6737

GUNAA BEST PC
52,Hospital Road,Jaffna.

இப்பொழுது GUNAA BEST PC இல் Quick Service
2 மணித்தியாலத்தில் கணினிகளை திருத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Computer Repair Laptop and motherboard Repair

விஸ்டம் தொழில்நுட்பக் கல்லூரி
இல. 475, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
(வண்ணார்பண்ணை சிவன்கோவிலடி)

விஸ்டம்

A/L 2016 தொழில்நுட்பப் பிரிவு

ஆரம்பம்- 01.01.2014
காலை 8.00 மணிக்கு

அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

அலுவலக நேரம் காலை 7-11,
T.P. 077 2487774, 021 320 7315

❖ துறைசார்ந்த ஆசிரியர்களையும் தொழில்நுட்ப விரிவுரையாளர்களையும் ஒருங்கிணைந்த கற்பித்தல் சேவை, தொழில்நுட்பப் பிரிவின் அனைத்துப் பிரிவிற்கும் செயன் முறை வசதிகள்.

❖ தொழில்நுட்பவியலுக்கான தனித்துவமான ஒரே ஒரு தனியார் கல்வி நிறுவனம்.

இரசாயனவியல் A/L 2016

தமிழ் ஆங்கில மொழிமூலம்
28.12.2013 Sat & Sun - 4.00 pm

A.Aravinthan Bsc (Hons) Spl.Chem (5173)

**VACANCY**

எதிர் காலத்தை வெற்றிகொள்ள நிரந்தரத் தொழில் சர்வதேச முன்னணி நிறுவனத்தில் NEW OFFICE 4 இற்கு 18 வயதுக்கு மேற்பட்ட O/L தோற்றிய இலங்கையர்கள் 30 பேர் வீதம் இணைத்துக் கொள்ளப்படுகின்றனர்.

குறிப்பு : பயிற்சி, தங்குமிட வசதிகள் இலவசம்.
பயிற்சியின் போது 18,000/- பின் 35,000/- +

அழைக்கவும் : (5186)
0777981471, 0772302795, 0775566224

புத்தி சாதுரியமான மாணவ செல்வங்களின் மதிநுட்பமான தெரிவு

ஞானோதய அக்கடமி (சாவகச்சேரி)

A/L 2016 கலை, வர்த்தக மற்றும் தொழில்நுட்பப் பாடப்பிரிவுகள்

A/L Day Class

- ஆரம்பம் :- 03.01.2014 வெள்ளி - 9.00 am
- அதி திறமையும் அனுபவமும் வாய்ந்த பிரபல முன்னணி ஆசிரியர் குழாம்.
- இவ் வருடமும் 40க்கு மேற்பட்ட மாணவர்கள் சாதனைப் பெறுபேறுகளுடன் பல்கலைக்கு தெரிவு.

- நிர்வாகம்

'சாதனை உலகில் தடம் பதித்திட கைகொடுத்திடும் உங்களின் நிறுவனம்' (5148)

**விற்பனைக்கு**

ஊரிச் சேவல்கள் விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு :- 077 408 4732 (5183)

**வீடு விற்பனை**

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி வைத்தீஸ்வரா பாடசாலை அருகாமையில் வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 983 9245, 077 053 0566, 077 632 0397 (5182)

**வீடு வாடகைக்கு**

நாவலர் வீதியில் T.C.Tக்கு அருகாமையில் (தியாகி அறக்கொடை நிறுவனம்) வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு :
077 440 9997 (5184)

**வீடும் காணியும் விற்பனைக்கு**

மானிப்பாய் வீதி யாழ்.நகரப் பகுதியில் வீடு, கடைகளுடன் கூடிய இரண்டு பரப்பு காணி விற்பனைகுண்டு.

தரகர் தேவையில்லை

தொடர்புக்கு :
0777 940 170 (5185)

யாழ் மண்ணில்

**A/L இன் பின்னர் சவால்களை வெல்லும் சர்வதேச கல்வித் தகைமைகள்**

BTEC HND in...

- Computing & Systems Development
- Quantity Surveying
- Civil Engineering
- Business Management
- Biomedical Science
- Law
- Pshycology

Leading to BSc (Hons) / LLB (Hons) / BA (Hons) / BEng (Hons)



மேலதிக விபரங்களுக்கு

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

16, Point Pedro Road,
Jaffna.
0777 102 131 / 077 311 4105
Email : info@bcas.lk

Macro Ads

Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Qatar

(C-6009) www.bcas.lk

edexcel

ISO 9001:2008 CERTIFIED
15 Years of Trust & Excellence in Higher Education



**G.C.E (O/L) இன் பின்னர்...**

| G.C.E (O/L) | IBP | HND Orientation | HND | BSc (Hons) |
|---|---|---|---|---|
| | 3 Months<br>4 Certificates by BCAS<br>1 Certificate by Edexcel, UK<br>300 hrs - Full Time<br>4 Certificates for IT<br>1 Certificate for English | 1 Month | 16 Months / Full time<br>Computing<br>& Systems Development | 12 Months at Leading Universities in UK, USA, Australia,Canada etc... |

இலங்கையில் தனியார் உயர் கல்வி நிறுவனங்களில் முதற் தர நிறுவனமான BCAS Campus வழங்கும் IBP (Intensive Bridging Programme) எனும் பாடநெறியானது GCE O/L பரீட்சையினைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான ஒரு அரிய வாய்ப்பாகும்.

O/L பரீட்சை முடிவுகள் வெளிவரும் வரையிலான காலப்பகுதினைப் சிறப்பாக பயன்படுத்தி உங்களது கணனி, ஆங்கில தொடர்பாடல், ஆளுமை விருத்தி மற்றும் ஏனைய மென் திறன்களை (Soft Skills) வளர்த்துக் கொள்வதற்கான மிகச் சிறந்த பயிற்சிகளை இப்பாட நெறி பெற்றுத்தருகிறது.

மூன்று மாத முழுநேர பாட நெறியாக வடிவமைக்கப்பட்டுள்ள (Over 300 Hour of intensive learning) இப் பாட நெறி முடிவில் BCAS campus வழங்கும் 4 சான்றிதழ்களும், Edexcel UK நிறுவனம் வழங்கும் 1 சான்றிதலும் கிடைக்கின்றது.

O/Level பரீட்சையின் பின் (A/L தகைமைகளின்றி) கணனித்துறையில் வெளிநாட்டு பட்டப்படிப்புகளை தொடர்வதற்கான அடிப்படைத் தகைமையாகவும் ( Degree Foundation Qualification) இப்பாட நெறி அமைகிறது.

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

Jaffna Campus :
16, Point pedro Road, Jaffna,
Sri Lanka.
Hotline : 021 2219910 | 077 710 2131

(C-6009) www.bcas.lk

Colombo | Dehiwela | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.12.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org